Registered as a Newspaper

PUMP
with
Standard Accessories
Select
NEWTONE
Water Pumps

# சஞ்சீவி

அறிவு - ஆக்கம் - அபிவிருத்தி

விலை ரூபா
4-00

தரமான
உதிரிப்பாகங்களை
கொண்டு தயாரிக்கப்படும்
நியூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

மலே: 4 யாழ்ப்பாணம் சுக்கில ஆண்டு சித்திரை மீ 16 வ. சனிக்கிழமை ஹிஜ்ரி 1409 றமழான் பிறை 22 (29-04-89) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 52

# புலிகளின் கோரிக்கைகள்: கட்சிகளுடன் பேசப்படும்

## அமைச்சர் ரஞ்சன் சொல்கிறார்

கொழும்பு, ஏப்ரல். 29

**பூர்வாங்கப் பேச்சுக்களின் போது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் குறித்து அனைத்து அரசியல் கட்சிகளுடனும் பேச்சுக்கள் நடத்துவது என்று அரசு முடிவு செய்திருக்கிறது.**

**வெளியுறவு அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தின இத் தகவலைத் தெரிவித்தார்.**

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காணுவதற்கு அனைத்து அரசியற் கட்சிகளினதும் ஒத்துழைப்பைப் பெறுவது என்பது அரசின் கொள்கை.

புலிகள் இயக்கத்தினால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் குறித்து அனைத்து அரசியல் கட்சிகளுடனும் பின்னர் பேச்சுவார்த்தை நடத்துவது என முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்றும் திரு. விஜேரத்ன சொன்னார்.

இனப்பிரச்சினைப் பேச்சுக்கள் குறித்துச் சகல விஷயங்களையும் தீர்மானங்களையும் பகிரங்கமாகச் செய்யவே ஜனாதிபதி விருப்பம் கொண்டிருக்கிறார் என்றும் திரு. விஜேரத்ன தெரிவித்தார்.

இலங்கை அரசு - விடுதலைப் புலிகள் இயக்கம் பேச்சுக்கள் பற்றி வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன நடத்திய செய்தியாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விகளும் பதில்களும் வருமாறு:-

கேள்வி: அரசு-விடுதலைப்புலிகள் பேச்சுக்கள் உடன்படிக்கைக்கு உட்பட்டதாகத் தானே இருக்கும்?

அமைச்சர்: பேச்சுக்கள் பரந்த அடிப்படையில்தான், குறிப்பிட்ட வரையறை இல்லை.

கேள்வி: பேச்சுக்கள் உடன்படிக்கைக்கு உட்பட்டதாக இருப்பதையே இந்தியா வரவேற்பதாக இந்தியத் தூதரகப் பேச்சாளர் கூறியுள்ளாரே!

அமைச்சர்: இந்தியப் பிரதமர் பேச்சுக்களை வரவேற்றுள்ளாரே.

கேள்வி: பேச்சுக்கள் தொடருமா?

அமைச்சர்: ஆம்! தொடரும் திரு. பாலசிங்கத்துக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டால் தவிர!

[ 6 ஆம் பக்கம் பார்க்க ]

## புதிய இந்தியத் தூதுவர் நேற்று வடக்கு - கிழக்குக்கு விஜயம்

யாழ்ப்பாணம். ஏப் 29

இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவர் திரு.எஸ்.எல். மெஹ்ரோத்திரா நேற்று வட பகுதிக்கு விஜயம் செய்தார்.

நேற்று நண்பகல் திரு. மெஹ்ரோத்திரா பலாலியில் உள்ள இந்திய அமைதிப் படைத் தலைமை அலுவலகத்துக்கு வந்து சேர்ந்தார். அங்கு வடபகுதியில் உள்ள அமைதிப் படை உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

இந்தியத் தூதுவருடன் அமைதிப் படையின் பிரதம தளபதி லெப்டினட் ஜெனரல் ஏ. எஸ். கல்கத்தும் வந்திருந்தார்.

புதிய இந்தியத் தூதுவர் யாழ்ப்பாண நகரக் கொமாண்டர் அலுவலகத்துக்கு வருவார் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் இறுதி நேரத்தில ரத்துச் செய்யப்பட்டதாக அறியப்படுகிறது.

வடபகுதி வருவதற்கு முன்னர் திரு. மெஹ்ரோத்திரா, நேற்றுக் காலை திருகோணமலைக்கும் மட்டக்களப்பிற்கும் விஜயம் செய்திருந்தார். அங்கு அவர் மட்டக்களப்பு, திருகோணமலைப் பகுதிகளின் அமைதிப்படைப் பொறுப்பதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

வடக்கு-கிழக்கில் அமைதிப் படையினரின் பணிகளைப் பார்வையிடுவதும், நிலைமையை மதிப்பிடுவதும் திரு. மெஹ்ரோத்திராவின் நேற்றைய விஜயத்தின் பிரதான நோக்கங்கள் என அறியப்படுகிறது.

திரு. மெஹ்ரோத்ரா கடந்த சனிக்கிழமையே புதிய தூதுவராகக் கடமை ஏற்றிருந்தார். (அ)

## பதவியாவில் தமிழரை மீளக்குடியமர்த்தல்: மாற்று யோசனை உண்டு என்கிறார் ரஞ்சன்

கொழும்பு, ஏப்ரல் 29

பதவியா பகுதியில் தமிழ்க் குடும்பங்களை மீளக்குடியமர்த்தும் விடயம் தொடர்பாக, மாற்று யோசனைகளுடன் வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. வரதராஜப் பெருமாளைச் சந்திக்க இருக்கிறேன்.

வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன இத் தகவலை நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

களுத்துறை மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பி. திரு. நெவில் பெர்ணண்டோ கேள்வி நேரத்தின் போது, ''வடக்கு - கிழக்கு மாகாண சபையால் 300 தமிழ்க் குடும்பத்தினர் மீளக் குடியமர்த்தப்பட்டிருக்கின்றனர். இது அங்குள்ள சிங்கள மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி இருக்கிறது. தாங்கள் மீண்டும் தாக்கப்பட்டுத் துரத்தப்படுவார்கள் என்று சிங்கள மக்கள் பயப்படுகிறார்கள்'' — என்று குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் விஜேரத்ன முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தப்படி இடம் பெயர்ந்தவர்கள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டியது அவசியமாகின்றது. இதற்கிணங்க பதவியாவில் 100 குடும்பங்கள் குடி அமர்த்தப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் விஜேரத்ன சொன்னார். (அ-எ)

### சுபநேரம்

29—04—1989
சனிக்கிழமை

சுபநேரம்:
02.58 முதல் 04.28 வரை
ராகுகாலம்:
08.58 முதல் 10.28 வரை
அட்டமி முற்பகல் 9.32 வரை

## அதிபர் பரீட்சை 13, 14 ஆம் திகதிகளில்

அரியாலை, ஏப்ரல் 29

அதிபர் தரம் I, II, III இற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் நாடு முழுவதிலும் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரியிலும், சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலும் பரீட்சை நடைபெறும். (ஒ-13)

## வாகனம் நிறுத்த மீண்டும் தடை!

யாழ்.பஸ்நிலையத்திற்கும்மின்சாரநிலைய வீதிக்கும் இடைப்பட்ட பகுதியில் வாகனங்கள் நிறுத்துவது மீண்டும் தடை செய்யப்பட்டுள்ளது.

ராணித் தியேட்டருக்கு அண்மையில் உள்ள மாடிக் கட்டடத்தில் மீண்டும் அமைதிப்படையினர் முகாம் அமைத்துள்ள காரணத்தினால் பாதுகாப்பு நிலைமைகளை உத்தேசித்தே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தப்பகுதியில் தரித்து நின்று பயணிகளை ஏற்றிவந்த மினிபஸ்கள் அனைத்தையும் அமைதிப்படையின் இராணுவப் பொலீஸார் வேறிடங்களுக்குச் செல்லும்படி நேற்றுப் பணித்தனர்.

ஆயினும் மாற்றிடம் ஒன்று ஏற்பாடு செய்யும்வரை ஒரு சில பஸ்கள் இங்கு தரித்து நிற்க அனுமதிக்கப்பட்டது. [ஒ-7]

## நடத்துனர் 50 பேர் நியமனம்

அரியாலை, ஏப்ரல் 29

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு 50 பஸ் நடத்துனர் புதிதாக நியமனம் செய்யப்பட்டு உள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கோண்டாவில் சாலை ஆளணி முகாமையாளரினால் வழங்கப்பட்டன. இவர்கள் இம்மாதம் 27 ஆம் திகதியில் இருந்து ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருப்பதாக நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-13)

## துப்பாக்கிச் சூட்டு சம்பவம்

நேற்று மாலை 4 மணியளவில் உசன் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

சம்பவத்தை அடுத்து கண்டி வீதியில் சிறிது நேரம் போக்குவரத்து தடைப்பட்டு, பின்னர் சகஜ நிலைக்குத் திரும்பியது. (ஒ-117)

## லோங் அடிகள் நினைவு முத்திரை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

இலங்கை அரசாங்கம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபர் காலஞ்சென்ற வண, லோங் அடிகள் நினைவாக அடுத்த வருடத்தில் தபால் தலை ஒன்றை வெளியிட உள்ளது.

சென்பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் முயற்சியால் வண. லோங் அடிகள் கல்வித் துறையில் ஆற்றிய சேவையைப் பாராட்டியே இத் தபால் தலை வெளியிடப்படுகின்றது.

வண லோங் அடிகளின் 29 ஆவது நினைவு தினம் நாளை ஏப்ரல் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையாகும். (க)

## சுற்றி வளைப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

நேற்று கொழும்புத்துறை மேற்கில் இடம்பெற்ற பஸ் எரிப்புச் சம்பவத்தை அடுத்து அந்தப்பகுதி அமைதிப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டது.

கொழும்புத்துறை - யாழ் சேவையில் ஈடுபட்ட மினிபஸ்கள் பல அமைதிப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டன

அதன் காரணமாக நேற்று யாழ் - கொழும்புத்துறை மினி பஸ் சேவை ஸ்தம்பிதம் அடைந்தது. [அ-9]

## உயிரிழந்தோர் 600 க்கு மேல்

டாக்கா, ஏப்ரல் 29

பங்களாதேஷில் மணிக்கஞ்ச் மாவட்டத்தை சூறாவளி தாக்கியபோது உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 600ஐத் தாண்டிவிட்டது என்று அறிவிக்கப்பட்டது. (ஒ-எ]

## கச்சாய் வாசி சுட்டுக்கொலை

சாவகச்சேரி ஏப்ரல் 29

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்குச் சமீபமாக கடந்த வியாழக்கிழமை மாலை இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் கச்சாய் வாசியான சி. பாலராஜ் [வயது 28] எனத் தெரிவிக்கப்பட்டது.

மரணத்துக்கு உரிமைகோரும் காகித அட்டை ஒன்றும் சடலத்துக்கு அருகில் காணப்பட்டது. [ஒ-31-117]

## மருந்து வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம். ஏப்ரல் 29

மருந்து வகைகளின் விலைகளைக் குறைக்காமல் பழைய விலைகளிலேயே விற்பனை செய்து வரும் வர்த்தகர்கள் மீது உள்நாட்டு வர்த்தக திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பர்.

இப்படியான வர்த்தகர்களின் வியாபார அனுமதிப் பத்திரம் ரத்துச்செய்யப்படும். அபராதத்துடன் சிறைத் தண்டனையும் விதிக்கப்படும் என்று உள்நாட்டு வர்த்தகதிணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-எ]

## அரச அதிபர் மாநாடு

சகல அரச அதிபர்களுக்குமான மாநாடு ஒன்று நேற்று கொழும்பில் நடைபெற்றது.

ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாஸாவின் பணிப்பின் பேரிலேயே மாநாடுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. [ஒ-13]

### முல்லைத்தீவு - வவுனியா

## எல்லைப்புறக் காடுகளில் பயங்கர ஷெல் வீச்சு!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

முல்லைத்தீவு - வவுனியா எல்லையில் உள்ள காட்டுப் பகுதியில் கடந்த மூன்று நாட்களாக பயங்கர ஷெல் வீச்சு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இரவு நேரத்திலேயே அதிகளவில் ஷெல் வீச்சு மேற்கொள்ளப்படுகிறதாம்.

முல்லைத்தீவு - வவுனியா எல்லையில் உள்ள கோடாலிக் கல்லு, தட்டாமலை ஆகிய பகுதிகளே ஷெல் வீச்சினால் பெரிதும் பாதிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

இலக்குகள் எதுவும் இன்றி மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் காரணமாக அந்தப் பகுதியிலிருந்து மக்கள் வெளியேறி அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளனர்.

நெடுங்கேணி ஊடான வவுனியா - முல்லைத்தீவு போக்குவரத்துகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. (ஒ-9)

## கொழும்புத்துறையில் நேற்று பஸ் தீக்கிரை!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

கொழும்புத்துறையில் நேற்று வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று தீக்கிரையானது.

நேற்றுக் காலை 9.30 மணி அளவில் பிரஸ்தாப பஸ் கொழும்புத்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தது. யாழ் - புங்கன்குளம் வீதியில் வண்ணான் குளத்தடியில் வைத்து பஸ் மறிக்கப்பட்டு பயணிகள் அனைவரும் இறக்கப்பட்டனர். அதன் பின்பே பஸ்ஸுக்குத் தீவைக்கப்பட்டதாம்.

ஆயுதந்தாங்கிய நால்வர் கொண்ட குழு ஒன்றே இந்த தீவைப்புச் சம்பவத்தில் ஈடுபட்டதாகச் சொல்லப்படுகிறது.

பஸ்ஸுக்குத் தீவைக்கப்பட்டதை அடுத்து தீயணைப்பு படையினருக்கு அறிவிக்கப்பட்டது. அவர்கள் உடனடியாக விரைந்து சென்று தீயை அணைத்தனர். ஆயினும் பஸ் பாவிக்க முடியாத அளவுக்குச் சேதமடைந்தது.

பஸ் தீக்கிரையாக்கப்பட்டது பற்றி யாழ். பொலீஸாரிடமும், அமைதிப்படையினரிடமும் முறையிடப்பட்டுள்ளது.

பிரஸ்தாப பஸ் அண்மையில் இந்திய அரசினால் வழங்கப்பட்டது எனத் தெரியவருகிறது. (ஒ-9-10-51)

## கல்வியங்காடு வாசி நேற்று சுட்டுக்கொல்லப்பட்டார்

நல்லூர் இராசபாதை வீதியில் நேற்றுக்காலை ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் கல்வியங்காட்டைச் சேர்ந்த சின்னத்தம்பி [சாமி] என அழைக்கப்படும் சுந்தரராஜா சண்முகநாதன் எனத் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் உரிமை கோரியுள்ளனர். [ஒ-10]

## பிரிட்டிஷ் தூதுவரும் நேற்று யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், ஏப்ரல்29

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் திரு. திரு. டேவிட் கிளட்ஸ்ரன் நேற்று யாழ்ப்பாண மாவட்டத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

நேற்றுக் காலை விமான மூலம் இங்கு வந்த பிரிட்டிஷ் தூதுவர் யாழ் செயலக உயரதிகாரிகள் சகிதம் குடாநாட்டின் பல பகுதிகளையும் சென்று பார்வையிட்டார்.

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் புனர்வாழ்வுத் திட்டங்கள்சிலவற்றையும் அவர் பார்வையிட்டார்.

நேற்றுப் பலாலி வந்திருந்த அமைதிப்படைத் தளபதி லெப்டினட் ஜெனரல் ஏ. எஸ். கல்கத்தையும் அவர் சந்தித்தார்.

திரு. கிளட்ஸ்ரன் அடுத்த மாதம் ஏழாம் திகதி மீண்டும் யாழ்ப்பாணம் வருவார் என அறியப்படுகிறது. (அ-9]

## குமுழமுனை மக்கள் மீளவும் குடியமர்வு

ஒட்டுசுட்டான், ஏப்ரல் 29

குமுழமுனை கிராமத்தில் சென்ற மாதம் இடம்பெற்ற இந்திய அமைதிப் படையினரின் இராணுவ நடவடிக்கைகளை அடுத்து இடம் பெயர்ந்த 765 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தற்பொழுது மீளக் குடியமர்ந்து வருகின்றனர்.

கடந்த பல நாட்களாக தண்ணீரூற்று, முள்ளியவளை, வற்றாப்பளை ஆகிய கிராமங்களில் தஞ்சம் புகுந்திருந்த பிரஸ்தாப குடும்பங்கள் பல இழப்புகளின் பின்பு தங்களின் சொந்த இடங்களை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன.

அநேகருடைய ஓலை வீடுகள் தீக்கிரையானதால் பொது ஸ்தாபனங்களின் உதவியுடன் மீளக் குடியமர்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [ஒ-113]

## நல்லூர்ப் பகுதியில் நேற்றுத் தீவிர காவல்

நேற்று நண்பகலுக்குப் பின் ஒரு சில மணித்தியாலங்கள் நல்லூர்ப் பகுதியில் படையினர் தீவிர காவல் கடமையில் ஈடுபட்டிருந்தனர். (ஒ)

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Broiler பேட்டுக்கோழி சேவல், சூப் குஞ்சு விருத்துக் குஞ்சு வகைகள் எப்பொழுதும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். எங்கள் ஒழுங்கை முகப்பிலும் எங்கள் பண்ணை வாசலிலும் Nallur Video Centre என்னும் விளம்பர பலகை உண்டு. Nallur Farm Centre 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி-2087)

நல்ல தண்ணீர் வசதியுடன் வீடுகட்டக்கூடிய ஒரு பரப்பு காணி அத்தியடி அம்பலவாணர் ரோட்டில் உள்ளது. விபரம் J.P.T. Ltd இல: 3 நவீன சந்தை, (மேல்மாடி) யாழ்ப்பாணம். (C/2388)

Honda Reconditioned புதிய பழைய Model C 90, C 70 C 50 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. No. 390, மெயின் வீதி, சண்டுக்குளி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம். 10764)

கோண்டாவில் கிழக்கில் இருபாலை ரோட்டு ஆலடி ஒழுங்கை சந்தியில் பழைய வீட்டுடன் எட்டரை பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க. 6/5, Layards Road, Colombo 5 (240)

பாவித்த வீட்டுத் தளபாடங்கள், கடைத்தளபாடங்கள், Fan, T. V., Cycle Usha தையல் மெஷின், Cot, மற்றும் பல விற்பனைக்குண்டு. Sureka 343, பருத்தித்துறை ரோட், அரசடி நல்லூர். [10677]

சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் கோவிலுக்கு அருகாமையில் ஒழுங்கை கயுடன் கூடிய நல்ல சூழலில் வீடு கட்டக்கூடிய 4 1/2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு 497, C/o உதயன், யாழ்ப்பாணம். (295)

சுன்னாகம் மின்சார நிலைய வீதியுடன் மின்சார நிலையத்துக்கண்மையில் 16 பரப்பு தோட்டக்காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 496, C/o உதயன், யாழ்ப்பாணம். (294)

### New City Traders

Daytron T. V. 12'', 14'' கறுப்பு வெள்ளை, Daytron T. V. 14'', 20'' கலர், Daytron வீடியோ player. Phillips கசெற் ரெக்கோடர், Phillips Gas cooker மற்றும் வீட்டுக்கு தேவையான மின் உபகரண பொருள்களையும் பெற்றுக்கொள்ள New City Traders, 135. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/2291)

### செங்கை ஆழியான் நாவல் இலவசம்

மழைக்காலம். ராதையின் நெஞ்சம், பூம்பனிமலர்கள், முடிவல்ல ஆரம்பம் நாவல்களில் இணைக்கப்பட்டிருக்கும் கூப்பன்களை கொடுத்து 'மண்ணின் தாகம்' நாவலை இலவசமாக பெறுங்கள். ராஜன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். கவிதா ஸ்டோர்ஸ், வவுனியா. [293]

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Dekalb) [Lohmann) பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், கறுப்பு சேவல் குஞ்சுகள், [Cobb] புறொயிலர்குஞ்சுகள் [2.5 89] செவ்வாய்க் கிழமை குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும். கூடுதலாக எடுப்பவர்களுக்கு சலுகையுண்டு. முன்கூட்டியே பதிவுசெய்க. இல 9,கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்] (10692)

### கோழிக்குஞ்சு விநியோகம்

பிறிமா லோமன் வெள்ளை, சிவப்பு பேட்டுக்குஞ்சுகள், Golden Comet சிவப்புப் பேட்டுக்குஞ்சுகள், சிவப்புச் சேவல் குஞ்சுகள், வளர்ந்த குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள், கோழிகள், கோழித் தீன், கோழிகளுக்கான மருந்து வகைகள் ஆலோசனைகள் ஆகியவற்றிற்குத் தொடர்பு கொள்ளுங்கள்: பரம் ஏஜென்ஸி, கிளிநொச்சி. (9313)

### தேவை

ஒரு சிறு கைத்தொழில் ஸ்தாபனத்துக்கு குறைந்தது 2 பரப்புக் காணி மின்சார வசதியுடன் விலைக்கு அல்லது குத்தகைக்கு தேவை. விபரம்: J.P.T. Ltd., இல 3 நவீன சந்தை, (மேல் மாடி) யாழ்ப்பாணம். [C/2389]

சப்ளையர், சமையல் மற்றும் பேக்கறி வேலைகளுக்கு முன் அனுபவமுள்ள ஆட்கள் தேவை. நேரில் அல்லது சடிதம் மூலம் விண்ணப்பிக்கவும். வேலை பழகவிரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். சுபாஸ் கபே, 176. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [276]

### அச்சக ஊழியர் தேவை

கொம்பே சிங் வேலை தெரிந்த பெண்கள். பிளேற்றின் மெசின் மைண்டர் தேவை. ஸ்ரீபார்வதி அச்சகம், 536, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (ஆஸ்பத்திரி முன்பாக) (296)

### மணமகன் தேவை

யாழ் இந்து வேளாள உயர் குல அரச சேவையில் எழுதுவினைஞரான 38 வயது திருமணமாதகா கன்னிப்பெண்ணுக்கு சுகுந்த வரன் தேவை. தாரமிழந்த பிள்ளை அற்றோரும் விண்ணப்பிக்கலாம் 494, C/o உதயன், யாழ்ப்பாணம். 287

### மணமக்கள் தேவையா

வேளாளர் புரட்டஸ்தாந்து பட்டதாரிக்கும் 25-31 வயதுக்கு இடை பட்ட மணப்பெண் தேவை. இந்து குருகுல சட்டத்தரணிக்கு 35-40 க்கு இடைப்பட்ட மணமகன் தேவை. எம்மிடம் சிறுபான்மையின மணமக்கள் பலர் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (10765

### தேவை

யாழ்நகரில் இயங்கிவரும் சமூகசேவை நிறுவனம் ஒன்றிற்கு மேற்பார்வையாளராக பணியாற்ற சமூகப்பணியில் நாட்டம் கொண்ட ஓய்வு பெற்ற உத்தியோகஸ்தர் தேவை. உணவு இருப்பிட வசதிகளும் அளிக்கப்படும். நிறுவனத்திலே தங்கி பணி புரிய வேண்டும். சம்பளம் பேசி முடிவெடுக்கலாம். தொடர்பு: 500, C/o உதயன், யாழ்ப்பாணம். [301]

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும். தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [C/2124]

### தவறிவிட்டது

தபபிப்பிள்ளை இராசரத்தினம் ஏழாலை மேற்கு ஏழாலை ஆகிய எனது அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் தயவு செய்து தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: பாலன் ஸ்ரோஸ் K.K.S. Road, சுன்னாகம். (சி/2397)

### வாடகைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அடிப்படை வசதிகள் உடைய தனிவீடு வாடகைக்குத் தேவை. தொடர்புகளுக்கு மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். [C/2375)

### வாடகைக்கு

இந்தியா, சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப்பட்ட மணமகளின் தலைச்சோடனை மற்றும் நகைகளை வாடகைக்குப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்: கனகசபை தர்மகுலசிங்கம் "கணேஸ் வாசா" வாரிவளவு காரைநகர் C/oசித்தி தங்கமாளிகை 213 C கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம். [257]

### வெளிவந்துவிட்டது

நடைமுறை விடயம் வர்த்தகம் A/L இ. இரட்ணம். கிடைக்குமிடம் Becon யாழ்ப்பாணம். ஸ்ரீலங்கா புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலை, சிவாகி கல்வி நிறுவனம். [10696]

### போட்டோஸ்ரற்

காலை முதல் மாலை வரை மிகவும் தெளிவாகவும் விரைவாகவும் போட்டோஸ்ரற் பிரதிகள் எடுக்கப்படும். கூடுதல் பிரதிகளுக்கு கழிவு உண்டு. நாடுவோர்: மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரிவீதி, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (C/2292)

### 'கெட்டிக்காரர்கள்'

இலங்கை வானொலி தமிழ்ச் சேவைத் தனி நாடகங்களின் முதலாவது தொகுப்பு நூல். அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய படித்துச் சுவைப்பதற்கும், நடித்து மகிழ்வதற்கும் ஏற்ற 9 நாடகங்கள் 176. பக்கங்கள். விலை: 25/- [10603]

### VACANCY

Vacancy exist for an Accounts clerk and for a person who has done Hotel Management Course in a Leading School of Hotel Management. Apply on or before 30th to M/s Yarl Chinese Restaurant, (Pvt) Ltd., First Cross Street, Jaffna. (2?5]

### கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஞாயிறு தினங்களில் ஆங்கிலம், சிங்களம் இரு மணித்தியால வகுப்புகள் நடத்தப்படுகின்றன. கிழமை நாட்களில் தனிப்பட்ட. சிறுகுழுக்களிற்கான சிறப்பு வகுப்புகளும் வீடுகளிற்கும் சென்றும் கற்பிக்கப்படும். விபரங்களிற்கு நேரில் அல்லது தபால் மூலம் தொடர்பு கொள்ளவும் .I.E.T 11B, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். [விவேகானந்தா அச்சகத்திற்கு எதிர் மேல்மாடி] [239]

### SPOKEN ENGLISH

கசட் மூலம் ஆங்கிலம் பேச்சுப் பயிற்சி Spoken English Recorded Cassette Lessons உங்கள் வீட்டிலே இருந்து இலகுவாகவும் விரைவிலும் ஆங்கிலம் பேச, கற்றுக் கொள்ள இப்பயிற்சி கசட் தட்டுக்களை பெறும் முகவரி Spencer, அரியலொஜ் (Ariya-Lodge), மானிப்பாய் ரோட், உடுவில் (மதவடி). (297)

### கணிதம்- மயூரதி வெளியீடுகள்

G. C. E (O/L) முன்மாதிரி வினாத்தாள்கள் மயூரதி வெளியீடு- 4, வெளியீடு -5, ஆண்டு 10, ஆண்டு 8, கணிதம் பல் தேர்வு வினாக்கள்' சகலபுத்தக சாலைகளிலும் விற்பனையாகின்றன. சிறந்த கணித நூல்களுக்கு மயூரதி வெளியீடுகள். (10602]

### வகுப்பு

A/L 91 இரசாயனம் 108 Brown Road A/L 91 அடிப்படை இரசாயனம் முதல் வகுப்பு ஆரம்பம். ஆசிரியர் சத்தீஸ் பிரிவு I ஆரம்பம் 2-5-89 செவ்வாய் 6.30 a.m (செவ்வாய், வியாழன் 6.30 a.m) பிரிவுII ஆரம்பம் 30-4-89 ஞாயிறு 11a.m. [சனி ஞாயிறு 11 a.m.) (261)

### SPOKEN ENGLISH

Spoken English புதிய பிரிவு. சர்வகலாசாலைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் வசதியை முன்னிட்டு, ஆரம்பம் 29-4-89 சனி/ஞாயிறு நாட்களில். நேரம் 2-30—4-00 p.m தொடர்பு:- S. B. Iyar இல. 12, வைமன் வீதி, நல்லூர். (10663)

### ரயில் சேவை ரத்து

கொழும்பு - பதுளை இரவு ரயில் சேவை நேற்று முன் தினம் பாதுகாப்புக் காரணங்களுக்காக ரத்துச் செய்யப்பட்டது. (இ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### யோசவ் சைனேஸ்

அன்னையின் மடியில்: 21-10 1967 — ஆண்டவன் மடியில்: 29-04-1988

பாசத்தின் உறைவிடமே, பண்பின் சிகரமே, அன்பின் சொரூபமே, குடும்ப குலவிளக்கே, வேதனைத் தீயில் எம்மை வெந்து சாகவிட்டு தியாகத் தீயில் வெந்து மறைந்தாயோ. உன் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்:
தந்தை, தாய், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

உப்புக்குளம்,
மன்னார்
(10762)

நவாலி முருகானந்த சனசமூக நிலையம் செலுத்தும்

## அறுபதாம் நாள் கண்ணீர் அஞ்சலி



### திரு. யோன் செல்வராசா

(மட்டக்களப்பு மாநகரசபைப் பொது நூலகர்)

தோற்றம்: 14 - 11 - 1945 — மறைவு: 02 - 03 - 1989

பொதுத்தொண்டில் முதன்மையுற்றாய்
புன்னகையால் உலகை வென்றாய்
சிரிக்க வைத்த கலைஞன் நீ
செல்வராசா - யோன் செல்வராசா
அழ வைத்து விட்டாயே
ஆர் துடைப்பார் எம் கண்ணீர் ஐயா?



### செல்வன் ந. மணிவண்ணன்

(கிழக்கு இலங்கைப் பல்கலைக்கழக விவசாய பீட இரண்டாம் ஆண்டு மாணவன்)

தோற்றம்: 11 - 04 - 1966 — மறைவு: 01 - 03 - 1989

பெற்றோர்க்குக் கண்ணின் மணி
பிறர்க்கும் அவன் நல்லமணி
எத்திக்கும் ஒளிபரப்பி
எம் ஊரின் பெருமை சொல்ல
இருந்திடுவான் மணிவண்ணன்
என்றிருந்தோம். இன்று இல்லை
மணியில்லை, ஒளியில்லை; கண்ணீர்
மழையால் எம் அஞ்சலிகள்.

இருவர் ஆன்மாவும் சாந்தியடைப் பிரார்த்தனை செய்யும்:
நவாலி முருகானந்த சனசமூக நிலையத்தினர்.

[10673]

## நன்றி நவிலல்

### திருமதி க. அன்னபூரணம்

பண்ணாகத்தில் 21-04- 1989 வெள்ளிக்கிழமை அகாலமரணமான எனது அன்பு மனைவி அன்னபூரணத்தின் மரணத்தின் போது சகலவிதமான உதவி ஒத்தாசை புரிந்த நண்பர்கள், உறவினர்கள், யாழ் வைத்தியசாலை ஊழியர்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்கள்,மற்றும் சிரமத்தின் மத்தியில் நேரடியாக வந்து இறுதிச் சடங்கில் கலந்து அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கணவர் :- சி. கனகநாயகம் [கொழும்பு]
பிள்ளைகள்:- க. திருக்குமரன்
க. அருட்குமரன்

பண்ணாகம்,
சுழிபுரம். (307)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் ஞானமூர்த்தி பொன்னுத்துரை

(இளைப்பாறிய ஆசிரியர்)

தோற்றம்:- 30 - 05 - 1916 — மறைவு: 21 - 04 - 1987

திதி: 29-04 1989

அன்பின் திருவுருவாய் பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின்இலக்கணமாய் உற்றாருக்கு துணைவனாய் எமதுஇதய தீபமாய் இருந்து எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து 2 ஆண்டுகளாயினும் உங்கள் அன்பும் அருள் வடிவமும் எங்கள் நெஞ்சங்களை விட்டு என்றென்றும் அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும்.
மனைவி, மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

இல: 68 கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம். (10754)

## ஓராண்டு நினைவஞ்சலி

★ ★ ★

தோற்றம்: 19- 07- 1926

மறைவு: 21- 04- 1988

திதி: 29- 04- 1989



### செல்லையா சண்முகம்

(அராலி வடக்கு, வட்டுக்கோட்டை)

அன்பின் திருவுருவாய், பாசத்தின் பிறப்பிடமாய், அறிவின் சுடரொளியாய், பார்வையில் பசுமரமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய், அன்போடும் ஆதரவோடும் எம்மை ஆதரித்து, இடைநடுவில் தமது இதய ஒலியைப் பறிகொடுத்து எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு, ஓராண்டானாலும் எமக்கு ஒரு நிமிடமே! உங்கள் நினைவுகள் எம்மனதில் என்றும் விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி,
பிள்ளைகள்: தங்கராசா சந்திரா, இரத்தினவேல் இராஜேஸ்வரி, யோகராசா சித்திரா, லலிதா (சக்தி ரெக்ஸ் மில், மேற்பார்வையாளர், திருநெல்வேலி) சுசிலா, நிர்மலா, சரவணபவானந்தன் (சவூதி), சிவானந்தன் (யாழ். பல்கலைக் கழகம்), சாந்தினி, அருளானந்தன் (அராலி இந்துக் கல்லூரி), மற்றும் பேரப்பிள்ளைகள் உற்றார், உறவினர்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை. (274)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதியருளும் காசிவிநாயகக் கடவுள்

நாடு பொலிவுற

## நவமணித்தேர் நாடித்திருவுலா

**வெண்பா**

தேசின் அநாதியெழில் சேர்தலத் தெல்லியூர்க்
காசி விநாயகனைக் காண்கருணை — ஆசி
சிறக்கமணித் தேரிற் றிருவுலா, யாண்டும்
பறக்கொணு மாட்சி வளம்.

தென்றலெழு சித்திரைச் சீரார் திருவோணம்
நன்றமையக் காசிவி நாயகனுர் — இன்றமிழ்
நாடு பொலியத்தேர் நாடி யுலாவருதல்
ஆடு மரன்வினை யாட்டு.

**விருத்தம்**

முன்னைசிவ கடாட்சகுரு மன்னுதிருக் கோயில்
முறைகணேச லிங்ககுரு நெறிதவ ருமல்
அன்னைதமிழ் அநாதிமொழி ஆரியதொன் னூலில்
அமைசிவாக மங்களின்மெய் யறிவொளி சாலப்
பொன்னைநிகர் சிரூரிய நன்னெறியில் ஞானம்
பொலிசுபோத சங்கமமைத் திலகுப தேசம்
தன்னையருள் விநாயகனுர் தெல்லிநகர் காசித்
தலவி நோத தத்துவத்தேர் காணே.

மெய்யடியார் கைகுவித்து மென்மலர்கள் தூவ
விண்ணவரும் ஒண்வெளியில் மேவத்
தெய்வநெறி ஐந்தெழுத்தும் திவ்யவொலி யாகச்
செந்தழலில் அந்தணர்மெய் யாகச்
நெய்யவியில் அர்ப்பணித்து நெஞ்சுருக வேத
நிர்ணயஞ்சொல் மந்திரங்கள் ஓத
வெய்யவினை விட்டகல வையமுயக் காசி
விநாயகரு லாவெழுவர் தேரே.

— நம. சிவப்பிரகாசம்

**(இன்று நடைபெறும் தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழாச் சிறப்பம்சம்)**

(10756)



## உடனடியான வேலைவாய்ப்பு

### 1. யப்பான்:

நாங்கள் முன்னர் எடுத்துக்கொண்டு இருந்த கட்டிடப்பகுதி, றெஸ்ரோரன்ட் (RESTAURANT) ஆகிய வெற்றிடங்களுக்குத் தொடர்ந்தும் ஆட்களை எடுத்துக் கொண்டிருக்கின்றோம். தொடர்பு கொள்ள விரும்புவோர் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

(வயது: 20 — 42)

### 2. ஓமான்:

ஆண் தையற்காரர்கள்: கல் பதிப்பவர்கள், மேசன், தச்சுவேலையாள், ட்றைவர், மின்னிணைப்பாளர், சாரதிகள், பணிப்பெண்கள், கூலியாட்கள் ஆகியோர் உடனடியாகத் தேவை.

(3 வாரங்களில் பயணம்)

( வயது: 19 - 44 )

### 3. குவைற்:

குவைற் நாட்டுக்கு கிளினேர்ஸ் (CLEANERS) வேலைக்கு ஆட்கள் தேவை.

### 4. சவூதி அரேபியா:
### (Saudi Arabia)

S. O. M. C.

1. மேசன் — MASON
2. தச்சு வேலையாட்கள் — CARPENTERS
3. பிளம்பர் — PLUMBER
4. மின்னிணைப்பாளர் — ELECTRICIAN
5. சாரதிகள் — DRIVERS
6. கூலியாட்கள் — LABOURERS
7. பெயின்ரர் — PAINTERS
8. மெக்கானிக் = MECHANIC

மேற்காட்டிய வேலை விபரங்கள் அறிய விரும்புவோர் எமது ஸ்தாபனத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

**T. V. TRAVELS**
**BROWN ROAD,**
**KOKUVIL.**

(2369)


# மொழிகளைப் பயன்படுத்துவது குறித்து அரசு சுற்றறிக்கை

கொழும்பு, ஏப்ரல் 29

மொழிகள் சம்பந்தமாக அரசமைப்புச் சட்டத்தில் உள்ள விதிமுறைகள் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், மாகாண சபைகள் ஆகியன பணிக்கப்பட்டுள்ளன.

பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் திரு. சிறில் கமகே இது சம்பந்தமான சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அரசமைப்புச் சட்டத்தின் நான்காம் அத்தியாயத்தை முழுமையாகப் பிரதிபண்ணி சிறு முற்குறிப்புடன் அதனை 25/89 ஆம் இலக்கச் சுற்று நிருபமாக்கி திரு. கமகே அனுப்பி உள்ளார்.

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள், சகல திணைக்களங்களினதும் தலைமை அதிகாரிகள் சகல கூட்டுத்தாபனங்களினதும் தலைவர்கள், மாகாணசபைகளின் பிரதம செயலாளர்கள் ஆகியோருக்கு இந்தச் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

அரசமைப்பின் மொழி சம்பந்தமான நான்காவது அத்தியாயத்தில் உள்ள சில பிரதான அம்சங்கள் வருமாறு:

★ இலங்கையின் அரசகரும மொழி சிங்களம் தமிழும் ஒரு அரச கரும மொழி ஆங்கிலம் இணைப்பு மொழி.

★ இலங்கையின் தேசிய மொழிகள் சிங்களமும், தமிழும்.

★ சிங்களமும் தமிழும் இலங்கைமுழுவதிலும் நிர்வாக மொழிகள். வடக்கு மாகாணமும் கிழக்குமாகாணமும் தவிர்ந்த இலங்கையின் எல்லா மாகாணங்களிலும் சிங்களம் நிர்வாக மொழி. அங்கெல்லாம் பதிவேடுகளைப் பேணவும் அலுவல்களை நடத்தவும் சிங்களம் பயன்படுத்தப்படும்.

★ இலங்கை எங்கணும் சிங்களமும் தமிழும் நீதிமன்ற மொழிகளாக இருத்தல் வேண்டும். தமிழ்மொழி நிர்வாக மொழியாக இருக்கும். ஏதேனும் இடப்பரப்புத் தவிர்ந்த இலங்கையின் எல்லா இடப்பரப்புகளிலும் அமைந்திருக்கும் நீதிமன்றங்களின் மொழியாகச் சிங்களம் பயன்படுத்தப்படுதல் வேண்டும். [அ-7]

# முகாமில் உள்ளவர்களுக்கு உணவு வழங்கமுடியாது

## உறவினர் அதிருப்தியும் கவலையும்

யாழ்ப்பாணம், ஏப். 29

காங்கேசன்துறை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களைப் பார்வையிடச் செல்லும் பெற்றோர் அல்லது உறவினர் இனிச் சமைத்த உணவு வகைகளை வழங்க முடியாது. இதனால் பெற்றோர் கவலையும் அதிருப்தியும் கொண்டுள்ளனர்.

இந்த முகாமில் வழங்கப்பட்ட உணவை தடுத்து வைக்கப்பட்டோர் உண்ண மறுப்பதாக அறிய வருகின்றது.

இதனாலேயே உறவினர் சமைத்த உணவை வழங்குவதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது என்றும் விரும்பினால் பழம், பிஸ்கட் முதலியவற்றையே வழங்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (க)

# திருக்கேதீச்சர திருவிழா மே 11 ஆம் திகதி ஆரம்பம்

கொக்குவில், ஏப். 29

மன்னார் திருக்கேதீச்சரப் பெருமான் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் மே மாதம் 11 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

2ஆம் நாள் பகல் உற்சவம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியாலும் இரவு உற்சவம் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மகா வித்தியாலயத்தாலும்,

3 ஆம் நாள் இரவு உற்சவம் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியாலும்

4 ஆம் நாள் பகல் உற்சவம் சுன்னுகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியாலும் இரவு உற்சவம் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தாலும்,

5 ஆம் நாள் பகல் உற்சவம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியாலும் இரவு உற்சவம் கொக்குவில் இந்துக் கல்லூரியாலும்,

6 ஆம் நாள் பகல் உற்சவம் யாழ் மத்திய கல்லூரியாலும் இரவு உற்சவம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியாலும்,

7 ஆம் நாள் உற்சவம் சுன்னுசம் இராமநாதன் கல்லூரியாலும்,

8 ஆம் நாள் பகல் உற்சவம் மானிப்பாய் இந்துக் கல்லூரியாலும் இரவு பக்தோற்சவம் யாழ் இந்துக் கல்லூரியாலும்,

10 ஆம் நாள் கொடியிறக்கம் உரும்பராய் இந்துக் கல்லூரியாலும்,

உபயம் செய்யப்படுகின்றது.

தவிர திருமலை, மட்டக்களப்பு சைவ அடியார்களும் கண்டி மத்திய மாகாண சைவ மகாசபையினரும் முல்லை, வவுனியா மாவட்ட அரசாங்க சைவ ஊழியர்களும் மற்றும் சில சைவ அபிமானிகளும் வெவ்வேறு திருவிழாக்களை நடத்துகின்றனர்.

இக் கோவிலின் தேர்த் திருவிழா 19 ஆம் திகதியும் தீர்த்தத் திருவிழா 20 ஆம் திகதியும் நடைபெறும். (க-69)

## ஆங்கில தகுதிகாண் பயிற்சி

அச்சுவேலி, ஏப்ரல் 29

திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் ''உயர் தொழில் ஆங்கிலத் தகுதிச் சான்றிதழ் பயிற்சி'' நெறிக்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் வழங்கப்படுகின்றன.

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 'திறந்த பல்கலைக்கழகப் பதிவாளர் - கொழும்பு'' என்ற பெயரில் 25 ரூபா பெறுமதியான மணி ஓடரைப் பெற்று அதனை கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி வளவில் அமைந்திருக்கும் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய அலுவலகத்தில் சமர்ப்பித்து விண்ணப்பத்தைப் பெற்றுக் கொள்ளலாம்

பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித்தினம் மே மாதம் 10ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-11)

## நிவாரணப் பணம்

முல்லைத்தீவு, ஏப்ரல் 29

முல்லைத்தீவு இலங்கை வங்கிக் கிளையில் ஒதியமலை, தண்டுவான், கனுக்கேணி மேற்குப் பகுதிகளைச் சேர்ந்த 750 குடும்பங்களுக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிவாரணப் பணம் வழங்கப்பட்டது. [க-92]

## வாலிபர் வைத்தியசாலையில்

வடமராட்சி, ஏப். 29

பருத்தித்துறையில் 22 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற அசம்பாவிதத்தின் போது கைதான வாலிபர் ஒருவர் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விடுதலை செய்யப்பட்டதை தொடர்ந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சின்னத்துரை இரவிச்சந்திரன் [வயது 21]என்ற புலோலி கிழக்கைச் சேர்ந்த வாலிபரே இவ்வாறு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவராவார். [க-160]

## ஒலிபெருக்கி அன்பளிப்பு

அச்சுவேலி, ஏப். 29

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக்கந்தசாமி கோவிலுக்கு புதிய ஒலிபெருக்கிச் சாதனங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

பல்லாயிரம் ரூபா பெறுமதியான புதிய ஒலி பெருக்கிச் சாதனங்கள் பொதுமக்களின் உதவியினால் பெறப்பட்டு ஆலயத்தின் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளன. [ச-11]


## உடன் தேவை

102 அரசடி வீதியில் இருக்கும் ''Golden Sun'' [பிறவுண் றோட், அரசடி றோட் சந்தி] புத்தகமும் பானசி சாமான்களும் விற்கும் கடைக்கு ஒரு மைல் சுற்றுடலுக்குள் வசிப்பவர் விற்பனையாளராக கடமை புரிவதற்கு விண்ணப்பிக்கவும்.

குறைந்தது O/L படித்தவராக இருத்தல் வேண்டும். திறமைக்கு ஏற்ப சம்பளம் கொடுக்கப்படும்.

தொர்பு கொள்ளும் நேரம்:

காலை 10.00 - 12.00 மணி வரை
மாலை 3.00 - 4.00 மணி வரை

[300]



## தேவை

யாழ் கன்னாதிட்டி காளியம்பாள் தேவஸ்தானத்திற்கு செயலகப் பொறுப்பாளராக கடமையாற்ற ஒருவரும் ஆலயசிப்பந்தியாக கடமையாற்ற ஒருவரும் தேவை. யாழ் மாநகர எல்லைக்குள் வசிப்பராகவும் ஆசாரசீலராகவும் ஆலயத் தொண்டு புரியும் நோக்கு உடையவராகவும் இருத்தல் வேண்டும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

**காளியம்பாள் தேவஸ்தானம்,**
100, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

(10700)



## மணமகன் தேவை

யாழ் இந்து வேளாளர் குலம், உதயத்தில் செவ்வாயுள்ள 1945ல் பிறந்த, நற்குணமுடைய பட்டதாரி ஆசிரியைக்கு வரன் தேடுகின்றனர். மணமகன் நல்லொழுக்கமும், அரச, தனியார்துறை, வர்த்தகராயினும் விரும்பத்தக்கது. சீதனம் கொடுக்கப்படும். தாரம் இழந்தோரும் விண்ணப்பிக்கலாம். சகல விபரங்களுடன் தொடர்புகொள்ளவும். 495, C/o உதயன், யாழ்ப்பாணம்.

(292)



## தேவை

பிரபல வர்த்தக நிறுவனமொன்றிற்கு கனரக வாகனம் செலுத்தக்கூடிய, நற்குண. ஒழுக்கமுள்ள 40 — 50 வயதிற்குட்பட்ட சாரதி உடன் தேவை.

மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசிக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு:

விளம்பர இல 499,
மே/ பா. உதயன்,
யாழ்ப்பாணம்.

(C/2387)



## VACANCY

Wanted immediately Experienced Accountant who could handle independently Shop Accounts, B. T. T., Income Tax Returns and well versed with the Books connected with Accounts, for an Establishment in Jaffna Town. Salary negotiable, age preferably between 45 - 50 years. Applicant who resides within the Municipality Area would be an advantage

**Apply to:**

Advt. No. 498, C/o UTHAYAN,
JAFFNA.

(C/2385)



## பிரெஞ்சு மொழி வகுப்புகள்
## LEARNING FRENCH

**Join the Alliance Francaise de Jaffna**

for Beginners and Others
New Term Commences on 05-05-89

**Information and Registration:**

**யாழ் பிரெஞ்சு நட்புறவுச் சங்கம்**
Alliance Francaise De Jaffna
130, 1st. Cross Street,
JAFFNA.

[சி-2347]



THE EXPRESS INSTITUTE
KOPAY
A BOON TO STUDENTS

## O/L
## DAY CLASS
(காலை 8.00 - பி.ப 1.00)

★ முற்றிலும் பாடசாலை போன்ற வசதிகளுடன்

★ முழுப்பாடத்திட்டத்திலும் விரிவான மீட்டல், வினு - விடை வகுப்பு

மே 5க்கு முன் பதியவும்

[சி-2393]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6ஆம் மாத நினைவு அஞ்சலி

அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



**அமரர் திரு. நாகலிங்கம் கந்தையா**

[2ஆம் யுனிற் வவுனிக்குளம்]

ஆண்டவன் படைப்பு: **1947-12-07** அழிப்பு: **1988-12-05**

அன்பின் உறைவிடமே! நீர் சென்ற இடம் ஏதோ அழிந்துபோன உன் வாழ்வை சிந்தித்துப் பார்க்க முடியவில்லை. என் செல்வமே அன்று நீ அம்மா என்று அலறும்போது அவள் அங்கு இல்லை, இன்று அவள் மகனே என்று அழும்போது நீ இங்கு இல்லையே! இது தானு மனித வாழ்வு? இது உன் விதியா? உமது ஆன்மா சாந்தி அடைய இவறவனை வேண்டுகின்றோம். எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் விளங்கி (1988-12-05) அன்று இறைவன் அடி அடைந்த (கந்தையாவின்) ஈமக் கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும், அனுதாபச்செய்தியை அனுப்பியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் 02-05-1989 அன்று எமது இல்லத்தில் நடைபெறும்போது உற்றூர், உறவினர், நண்பர்கள் கலந்து கொள்ளுமாறும் அனைவரையும் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்:

**மனைவி, மாமி, தாய், சகோதரிமார், சகோதரர்கள், மருமகன், உற்றூர், உறவினர், நண்பர்கள்.**

2ஆம் யுனிற்
இல. 55, வவுனிக்குளம்,

[304]

## 60ஆம் நாள் நினைவஞ்சலி



**நடேசன் மணிவண்ணன்**

(கிழக்குப் பல்கலைக்கழக 2 ஆம் வருட விவசாயபீட மாணவன், யாழ் இந்து பழைய மாணவன்)

**தாயின் மடியில்:** 11-4-66 **முருகன் திருவடியில்:** 1-3-89

அம்மை அப்பனை எங்கள் நல்லூர்க் கந்தா! பெருங்கருணை கூர்ந்து ஒப்பிலாமணியென மணிவண்ணனை எமக்குத் தந்தீர். அவனது கல்வியின் வண்ணமும், கலையின் வண்ணமும் நாளொரு வண்ணமாய் வளர்ந்து வர, அவன் பெற்ற சித்திகளின் வண்ணங்களில் உமது அருள் வண்ணங்கண்டு மனங் குளிர்ந்தோமே! எண்ணமெலாம் கல்வியிலே சிறகடிக்கும் செல்வனவன்; மிருதங்க லய விரலான்! பரீட்சைக்குப் படிக்கின்ற ஆர்வப் புனலிலே நீந்தி, பல்கலைக்கழகம் சென்ற பாதையிலே எங்கள் கண்மணியை அழைத்த நின் திருவுளத்தை நாமறியோம். உமக்குக் கண்ணீர் மாலை தொடுக்கின்றோம். அவன் ஆத்மசாந்திக்கு அருள் புரியும் ஐயா.

**நவாலியூர் நடேசன் குடும்பம்**

சின்னப்பா வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(10697)

## வீதியின் மோசநிலைமை

சுன்னுகம், ஏப்ரல் 29

பல வருட காலமாக செப்பனிடப்படாத காரணத்தால் புன்னாலைக்கட்டுவன் புளியங் கிணற்றடிவீதி படுமோசமான நிலையிலுள்ளது.

சுமார் இரண்டு மைல் நீளமான இவ்வீதியை முன்னர் செப்பனிடுவதற்கு நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டும் 'தார்' இல்லாத காரணத்தால் திருத்தப்பணி இடைநிறுத்தப்பட்டது. [க-27]

## இரண்டாம் வருட இதயஞ்சலி

(ஆண்டுகள் இரண்டு)





| செல்லையா வீரசிங்கம் | வீரசிங்கம் தயாளசிங்கம் |
|---|---|
| மலர்வு: 20. 02. 1919 | மலர்வு: 26. 03. 1951 |
| உதிர்வு: 23. 05. 1987 | உதிர்வு: 22. 04. 1987 |


இதயங்கள் இரண்டும் இறப்பின் பெயரால்
இன்பவுலகில் இணைந்த ஆண்டுகள் இரண்டு;
மறந்தும் மறவாத மனைவி மக்கள்
மனத்துயர் நீங்காத ஆண்டுகள் இரண்டு;
ஈசன் திருவடி நிழலில் இளைப்பாறிய
இணையிலாய் பெருவாழ்வு பெற்ற ஆண்டுகள் இரண்டு;
தந்தையும் மைந்தனும் தரணியை நீத்துத்
தாயகம் விட்டுச் சென்ற ஆண்டுகள் இரண்டு.

**திருமதி அரியமலர் வீரசிங்கம்.**

கந்தரோடை வீதி,
சுன்னுகம்.

(279)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



**யோசப் சைனீஸ்**

**மலர்வு: 21-10-1967 உதிர்வு: 29-04-1988**

குடும்பத்தின் முதல் மகனுய்
குலத்தின் ஒளிவிளக்காய்
அடக்கத்தின் உறைவிடமாய்
எமை ஆனந்தத்தில் ஆழ்த்தி
ஓடி ஆடித் திரிந்த உன்னுயிரை
சிறு வயதில் அழித்துக் கொண்டாய்.

"நாம் உயிரோடிருந்து கேட்க இறைவன் அருள்வான் என்று நம்பிக்கை எங்களுக்கு — இன்று உனது நினைவுநாளான 29-04-1989 இல் முதலாவது ஆண்டு நினைவில் இதயத்தைப் பிழிந்தூறி நிற்கின்றோம்.

அப்பா, அம்மா, அண்ணன்மார்,
அக்காமார், தங்கைமார், அத்தான்மார்,
அன்ரி, அன்ரிஐயா, மாமமார், [illegible]

உப்புக்குளம்,
மன்னார்.

[10758]

## மே தினக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்டக் கிளையும், தொழிற் சங்கங்களும் இணைந்து நடத்தும் கூட்டு மேதினக் கூட்டம் மே முதலாந் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் பலாலி வீதியிலுள்ள பொன். குமாரசாமி நூலக மண்டபத்தில் நடைபெறும். (க)

●

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் வட பிரதேசக் கமிட்டி நடத்தும் மே தினப் பொதுக் கூட்டம் மே 1ஆம் திகதி காலை 10 மணிக்கு நாவாந்துறை சென் நிக்கிலஸ் சனசமூக நிலையத்தில் திரு. டானியல் அன்ரனி தலைமையில் நடைபெறும்.

திருவாளர்கள் எம். ஏ. சி. இக்பால், சூ. மார்க், வி. ரி. இளங்கோவன், ஐ. நல்லையா, கே. செல்லத்துரை, இ. தவனேசன், ப. பிரான்சிஸ் ஆகியோர் இக் கூட்டத்தில் உரை நிகழ்த்துவார்கள்.

## பஸ் சாரதி நினைவு விழா

வடமராட்சி, ஏப்ரல் 29

பருத்தித்துறை இ. போ. ச. ஊழியர்கள் இறந்த பஸ் சாரதி எம். தங்கராசா நினைவாக விழா ஒன்றை நாளை 30 ஆம் திகதி நடத்த இருக்கின்றுர்கள்.

1986 ஆம் ஆண்டு திருமலை பஸ்ஸில் கடமையில் இருந்த போது பன்குளத்தில் காடையர்களால் அவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

டிப்போ முகாமையாளர் எம். ஏ. கந்தசாமி தலைமையில் நடைபெற இருக்கும் விழாவின் போது இறந்த சாரதியின் உருவப்படம் திரை நீக்கம் செய்யப்படுவதுடன் அவரின் குடும்பத்தவரும் கௌரவிக்கப்படவுள்ளார்கள். (க - 160)

## நடமாடும் எக்ஸ் ரே கருவி

மட்டக்களப்பு ஏப் 28

மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு நடமாடும் எக்ஸ் ரே கருவி ஒன்றை சுகாதார அமைச்சு அனுப்பிவைத்துள்ளது.

இக்கருவியை வார்ட்டுகளுக்குக் கொண்டு சென்று அங்கு வைத்தே எக்ஸ்-ரே எடுக்கமுடியும்.

இதே சமயம் ஏற்கனவே பழுதடைந்த நிலையிலிருந்த-வழமையான - எக்ஸ்-ரே இயந்திரம் கொழும்பிலிருந்து வந்த தொழில்நுட்பவியலாளர்களால் திருத்தப்பட்டு தற்போது செயற்படுத்தப்பட்டு வருகிறது. (ச-21)

## நியமனங்கள்

மட்டக்களப்பு, ஏப்ரல் 29

மட்டக்களப்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திரு. எஸ். எதிர்மன்னசிங்கம் வடக்கு – கிழக்கு மாகாண சபையின் கலாசார அமைச்சின் கீழ் உதவிப் பணிப்பாளராக நியமனம் பெற்றுள்ளார். அவரது இடத்துக்கு மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் செல்வி ந. கதிர்காமத்தம்பி பதவி மாற்றம் பெற்றுள்ளார்.

அதே நேரம் தேசிய வீடமைப்பு திணைக்களத்தின் மாவட்ட முகாமையாளர் திரு. ஏ. கே. பத்மநாதன் கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சின் மேலதிக செயலாளர்களில் ஒருவராக நியமனம் பெற்றுள்ளார்.

மேற்படி அமைச்சின் கணக்காளராக மட்டக்களப்பு கல்வித் திணைக்கள கணக்காளர் திரு. கே. கங்காதரம் பிள்ளை இடமாற்றம் பெற்றுள்ளார். [க-21]

## சாரதி மரணம்

கோப்பாய், ஏப்ரல் 29

லொறியின் கீழ் படுத்திருந்த லொறிச்சாரதி மீது லொறி உருண்டு ஏறியது. அதனால் கிளிநொச்சியைச்சேர்ந்த ராஜா [வயது 30] என்பவர் மரணம் அடைந்தார்.

இச்சம்பவம் மதவாச்சிக்குச் சமீபமாக நடைபெற்றது. [இ-72]

## யாழ். வட்டாரக் கல்லூரிகளின் இசை நடனப் போட்டி முடிவுகள்

கொக்குவில், ஏப்ரல். 29

யாழ்ப்பாணக்கல்வித்திணைக்களத்தினுல் நடத்தப்பட்ட நல்லூர் சாவகச்சேரி, யாழ்ப்பாண வட்டாரக் கல்லூரிகளுக்கு இடையிலான இசை, நடனப் போட்டிகளில் பின்வருவோர் வெற்றி பெற்றுள்ளனர்.

ஆரம்ப பிரிவினருக்கான சாஸ்திரியஇசைப் போட்டியில் திருநெல்வேலி ரூே. க. த. க. பாடசாலையைச் சேர்ந்த செல்வன் சி அகிலன் ஆண்கள் பிரிவிலும் யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த செல்வி க சியாமளாங்கி பெண்கள் பிரிவிலும் முதலாம் இடத்தைப் பெற்றனர்.

கனிட்ட இடைநிலைப்பிரிவில் மட்டுவில் தெற்கு சரஸ்வதி சனிஷ்ட வித்தியாதயத்தைச் சேர்ந்த செல்வன் து. சுனேந்திரன் ஆண்கள் பிரிவிலும் யாழ் இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி சு. சுவர்ணுங்கி பெண்கள் பிரிவிலும் முதலாம் இடங்களைப் பெற்றனர்.

சிரேஷ்ட இடைநிலைப் பிரிவில் மீசாலை வீரசிங்கம் ம. வியைச் சேர்ந்த கு. விஜயராகவன் ஆண்கள் பிரிவிலும், முத்துத்தம்பி ம. வியைச் சேர்ந்த க. சாந்தி பெண்கள் பிரிவிலும் முதலாம் இடங்களைப் பெற்றனர்.

சிரேஷ்ட பிரிவில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியைச் சேர்ந்த வி. சுரேஷ் முதலாம் இடத்தைப் பெற்றுர்.

ஆரம்பபிரிவு நடனப்போட்டியில் நல்லூர் இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலையைச் சேர்ந்த செல்வி. ம. தவேந்திரனும், கிராமிய நடனப் போட்டியில் யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த செல்வி யோ. தனுஷாவும் முதலாம் இடங்களைப் பெற்றனர்.

கனிட்ட இடை நிலைப்பிரிவில் கிராமிய நடனத்தில் வைத்தீஸ்வர வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி. வை. கிரிஜாவும், சிரேஷ்ட இடைநிலை பரதத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த செல்வி சு. சுயாந்தாயினியும், மேற்பிரிவில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியைச் சேர்ந்த செல்வி நா. சுகந்தினியும், முதலாம் இடங்களைப் பெற்றுக்கொண்டனர்- (க-69)

## எம் இதயத்தின் காவலன்



**செல்வன் நடராஜா குணவதன்**

(மாசுபடாப் பாலகன், மகாஜனக் கல்லூரி மாணவன்)

**பிறப்பு:** 20 - 6 - 1973 **அழிப்பு:** 01 - 05 - 1986

**திதி: 28. 04. 1989**

எம் குடும்பத்தின் பரம்பரைச் சொத்தே!, எம் குடும்ப ஒளிவிளக்கே!, பாசத்தின் உறைவிடமே! தம்பியே!, ஆசைக்கு ஓர் குஞ்சனே!

தம்பி!

இன்று எமது விளக்கு அணைந்து கிடக்கிறது. அதை ஒளியேற்றிட என்றோடி வருவாய் நீ எமக்கு பெரிது தனமல்ல, உயிரே பெரிதென்பதை யாரறிவார்!

ஆசைகள் அனைத்தையும் உன்பாலாக்கி, எதிர்பார்ப்புக்கள் அனைத்தையும் உன்மேல் நிறுத்தியது, நாம் செய்த குற்றமென்றால், உன் பெயரை காரணப் பெயராகக் கொண்டதோ, நீ செய்த குற்றம். உன் நெஞ்சினில் பாய்ந்திட்ட அக்கொடிய குண்டு, பெற்றதென்ன பயன்?

புதிய ஏ/எல் பஜ். 91 ஆம் ஆண்டில், தேடுகின்றோம் உன் இடத்தை, ஆனுல் ......, எம் மனம் படும் வேதனை ......, நெஞ்சு வெடித்து விட்ட போது, உணர்ச்சியை தெறிப்பது எப்படி? பிஞ்சுப் பருவத்தில் பிள்ளையை பறிகொடுத்த துக்கத்தை, கொஞ்சம் உள்ளம் திறந்து சொல்ல கெஞ்சுதே உள்ளம். பூவா, அரும்பைக் காயாகி, கனியாகும் முன்பே கிள்ளி விட்டானே யமன்.

சென்றது மூன்று வருடம் என்பார்கள். மூவாயிரம் ஆண்டுகள் சென்றாலும் மாறுமா? எம் துயரம்.

துயரத்தால் துடிக்கின்ற:

**அப்பா, அம்மா, அக்காமார், உற்றூர், உறவினர், நண்பர்கள், ஆசிரியர்கள்.**

Dr V. S. நடராஜா,
த மெடிக்கல் சென்ரர்,
சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

[284]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A/L வகுப்பிற்குரிய பொருளியல் ஆசிரியர் தேவை

பொருளியல் பாடத்தில் பட்டம் பெற்ற பொருளியற் பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம். தகுதியான தகைமைகள் கொண்ட கற்பித்தல் அனுபவமுள்ள ஆசிரியர்கள் தமது தகுதி, தகைமை, அனுபவம் ஆகியவற்றை தகுந்த ஆதாரத்துடன், அத்தாட்சிப் பத்திரங்களை அதிபரிடம் சமர்ப்பித்து 10-05.1989 ஆந் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

நா. ஶ்ரீபுஸ்பநாதன்,
அதிபர்.
யா/யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

(C/2395)

## BRIGHT TRAINING CENTRE

க. பொ. த உயர்தர வர்த்தக, கலை, மாணவர்கள் நன்மை கருதி பிரபல விரிவுரையாளர்களாலும், ஆசிரியர்களின் கூட்டு முயற்சியாகவும் வெளிவருகிறது.

**'அறிவொளி'**
**கல்வி வெளியீடு**

இதற்கென BRIGHT STUDY CIRCLE எனும் கல்வி வட்டம் ஒன்றும் மாணவரிடையே ஆரம்பிக்கப் படுகின்றது. கல்விவட்டத்தைப்பற்றி அறியவிரும்புவோர் சுயவிலாசமிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்க:

அறிவொளி.
பிறைட் பயிற்சி நிறுவனம்,
த. பெ. இல. 162.
கொழும்பு.

(308)

## அறிவொளி

அறிவொளி கல்வி வெளியீட்டுக்கு உயர்தர கலை, வர்த்தக துறை மாணவர்களுக்கு ஏற்ற கட்டுரைகள் விரிவுரையாளரிடமும் பட்டதாரி ஆசிரியர்களிடமும் இருந்து எதிர்பார்க்கின்றோம். பிரசுரத்திற்கு ஏற்கப் படும் கட்டுரைகளுக்கு சன்மானம் வழங்கப்படும்.

ஆசிரியர்

அறிவொளி
த. பெ. இல. 162,
கொழும்பு.

[309]

## ரைப்பிஸ்ட் தேவை

கிளீன் கட் ஸ்தாபனத்திற்கு அனுபவமுள்ள ஆங்கிலத் [பெண்] தட்டெழுத்தாளர் [English Typist] ஒருவரும் தமிழ்த் [பெண்] தட்டெழுத்தாளர் [ரைப்பிஸ்ட்] ஒருவரும் தேவைப்படுகின்றனர்.

இரண்டு நற்சாட்சிப் பத்திரங்கள், கல்விச்சான்றிதழ்களுடன் 30-04-1989 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நேரில் வரவும்.

நிர்வாகி
**கிளீன் கட்**
239, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C/2341)


## 2ஆவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**திரு. சந்திரசேகரம் கதிரவேலு (ராசா)**
[லிகிதர், ஶ்ரீ லங்கா தேசிய உப்புக் கூட்டுத்தாபனம், ஆனையிறவு)

தோற்றம்: 26- 06- 1945
மறைவு: 29- 04- 1987

அன்பின் திருவுருவாய், பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் இருப்பிடமாய் வாழ்ந்து எம்மை எல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்ட ஒளிவிளக்கே! இந்நாளில் அல்ல எந்நாளும் உம்மை மறவோம். உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தந்தை, மனைவி, மக்கள், சகோதரர்கள், மற்றும் உறவினர்கள்.
சாவகச்சேரி வடக்கு,
மீசாலை,

[306]

# சிகை அலங்கரிப்பாளருக்கு தொழில் பாதிப்பு நிவாரணம்

## சங்கக் கூட்டத்தில் உரை

"கடந்த இனக்கலவரங்களின் போது தென்னிலங்கையிலிருந்து சிகையலங்கரிப்புத் தொழிலாளர்கள் தமது தொழிலையும்உடைமைகளையும் இழந்த நிலையில் அகதிகளாக இங்கு வந்தார்கள். அவர்கள் தொழில் செய்ய முடியாமல் பாரிய இழப்புகளுக்கு ஆளாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள சிகையலங்கரிப்பாளர்களுக்கு தொழில் பாதிப்புக்கான நிவாரணம் கிடைக்க வேண்டியது அவசியமாகும்."

வடக்கு கிழக்கு மகாண சபையின் யாழ். மாவட்ட உறுப்பினர் திரு. ப. லோங்ஸ்டன் வட இலங்கை சிகையலங்கரிப்பாளர் சங்கக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் இவ்வாறு குறிப்பிட்டார். திரு. எஸ். இராசேந்திரம் கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தொழிற்சங்க அமைப்பாளர் திரு. அ. இராசலிங்கம் சகல தொழிலாளர்களும் சங்கங்களில் சேர்ந்து செயல்பட வேண்டும் என்றும் எல்லா சங்கங்களும் ஒரு சம்மேளனத்தில் இணைய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

வாரத்தில் ஒரு நாளைக்கு சகல தொழிலாளர்களுக்கும் விடுமுறை வழங்க வேண்டுமெனவும் சங்கம் தீர்மானித்து கூலி விகிதத்தை அனைத்து சிகையலங்கரிப்பு நிலையங்களும் அமுல் நடத்த வேண்டுமெனவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் சங்க உறுப்பினர்களான திரு. த. கந்தையா, எஸ். யேம்ஸ், வ. தர்மராசா, அன்ரன் இராசலிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

## நிவாரணக் கொடுப்பனவு

மீளக்குடியமர்வு நிவாரணம் ஆயிரம் ரூபா கொடுப்பனவு சாவகச்சேரிப் பகுதியில் பலருக்குக் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப் படுகிறது. சிலருக்கு அவர்களுடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாகவும் ஏனையோருக்கு அறிவிப்போ கொடுப்பனவோ கிடைக்கவில்லை எனவும் அறியவருகிறது. [க-31]

## அதிபர் கருத்தரங்கு

வடமராட்சிக் கோட்டக் கல்விப் பணிமனைக்கு உட்பட்ட 84 பாடசாலைகளின் அதிபர்களுக்கான கருத்தரங்கு இன்று 29 ஆம் திகதி சனிக்கிழமை வேலாயுதம் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

கோட்டக் கல்வி அதிகாரி திரு. பொன்னம்பலம் வீரபத்திரன் தலைமை வகிப்பார். (க - 118)



## அபிஷேகம்

சுன்னாகம், ஏப். 29

கந்தரோடை வற்ருக்கைப்பதி ஶ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதப் பெருமான் ஆலய நடராஜப் பெருமான் அபிஷேக விழா இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி விசேட ஆராதனைகளும் அபிடேகமும் இடம் பெற்று சுவாமி வீதி உலா வரும் நிகழ்ச்சியுடன் நிறைவுறும். பூசைகள் மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகும். [க-27]

## திருநாவுக்கரச நாயனார் குருபூசை

யாழ்ப்பாணம், ஏப். 29

திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசை மண்டைதீவு வீரபத்திர சுவாமி ஆலய மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப. 3.00 மணியளவில் நடைபெறும். இதனை ஒட்டி நடைபெறும் கருத்தரங்கில் கல்வி அதிகாரி திரு. க. மகேசன் உரை நிகழ்த்துவார். இளைப்பாறிய அதிபர் திரு. ச. சிவப்பிரகாசம் தலைமை வகிப்பார்.

மண்டைதீவு சைவ வளர்ச்சிக் கழகம் குருபூசையை ஒழுங்கு படுத்துகின்றது. (க)

யாழ்ப்பாணம், ஏப். 29

திருநாவுக்கரசு நாயனார் குருபூசை தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை அரியாலை பகவான் ஶ்ரீ சத்தியசாயி பாபா பஜன் மண்டலியில் நடைபெறும். (க)

யாழ்ப்பாணம், ஏப். 29

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் நல்லூர் ஶ்ரீ சட்டநாத சுவாமி ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணியளவில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை விழா கொண்டாடவுள்ளனர். (க)


## விக்னு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்.

[கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

**A/L 91 புதிய பிரிவு**

சனி, ஞாயிறு (காலை 9.00)

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பொருளியல்:- | திரு. கலாசரன் |
| வர்த்தகவியல்:- | திரு. லங்கா |
| கணக்கியல்:- | திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல்:- | திரு. சுப்பிரமணியம் |
| இந்துநாகரிகம், இந்து சமயம் | திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| தமிழ்:- | திரு. குழந்தை |
| புவியியல்:- | திரு. குணராஜா |
| அரசியல்:- | திரு. மஃறூப் |

முக்கிய குறிப்பு

இந்த ஆசிரியர்கள் இந் நிறுவனத்தில் மட்டுமே ஒருங்கிணைந்து போதிக்கின்றார்கள்.


கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு 15 வருட காலமாக உறுதியானதும் நிலையானதுமான ஒரேயொரு நிறுவனம்.

[வி-2404]

# olivetti

PROFESSIONAL ELECTRONIC TYPEWRITER

the silent, smooth and intelligent, dependable office assistant.



Over 70 years in the forefront of office equipment technology A guarantee of the precision, reliability and operating comfort of Olivetti typewriters.

Like these fully automatic, completely electronic models with a variety of script and functions that give you the choice of the right one for your exact need.

Assuring you of the ultimate in document presentation - typing quality and layout clarity that in themselves constitute a letter of introduction.




There's more to Olivetti than we can tell you here. Why not see it for yourself at our showrooms?


Backed by the excellent Olivetti after sales service

**OFFICE EQUIPMENT Ltd.,**
**140, Navalar Road,**
**JAFFNA.**

# சிக்மா பம்ப்ஸ்



# CEYGMA PUMPS



## உங்கள் தேவைகளுக்கேற்ற

மின் மோட்டர்கள்
**ELECTRIC MOTOR PUMPS**

$\frac{1}{2}$ HP — 1" × 1" — 3400. 00
$\frac{1}{2}$ HP — $1\frac{1}{2}$" × $1\frac{1}{2}$" — 38[illegible]0 00
$\frac{3}{4}$ HP — $1\frac{1}{2}$" × $1\frac{1}{2}$" — 4450. 00
1 HP — $1\frac{1}{2}$" × $1\frac{1}{2}$" — 4750. 00
$1\frac{1}{2}$ HP — 2" × 2" — 5950. 00

- நீர் இறைக்கும் இயந்திரங்கள் **Engine Driven Pumps**
- இந்தியன் விலியர்ஸ் பொருத்தப்பட்டது **Indian Villiers MK 12** - 7950. 00
- குபோடா என்ஜின் பொருத்தப்பட்டது **Kubota KS 160** - 9300. 00

இப்பொழுது கையிருப்பில் உண்டு. எமது பம்புகளுக்கு ஒரு வருட உத்தரவாதம் (Guarantee) உண்டு. பழுதடைந்த பம்புகள் அதிவிரைவில் திருத்தி (Repairs) புனரமைத்துக் கொடுக்கப்படும்.

இவை தவிர உங்கள் தேவைக்கேற்ப விஷேச பம்புகள் மோட்டருடன் இணைத்துக் கொடுக்கப்படும்.

உங்கள் தேவைகளுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்:

**UNITED AGRO ENGINEERING**

274/1, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்.
(பெரியாஸ்பத்திரி முன்பாக)

தொழிற்சாலை:
நாவற்குழி, கைதடி.

[சி/2398]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேம்பின் மகத்துவம்"

மில்க்வைற் செய்தி இதழ் -- 160

25 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை அனுப்பி புதிய வெளியீடான மில்க்வைற் செய்தி இதழ் - 160ஐப் பெற்றுக் கொள்ளுங்கள்.

"மில்க்வைற்"

யாழ்ப்பாணம்.

# சஞ்சீவி

29 - 4 - 1989 சனிக்கிழமை

"காலம் பெறுமதியானது"

பொங்கும் நுரை வளம் கூடிய மில்க்வைற் சலவைப் பவுடரை வாங்கி உபயோகியுங்கள்.

ஒரு பைக்கற் ரூபா 2/50 மட்டுமே!

கூடிய உடுப்புகளை சலவை செய்கின்றது.

பாவித்த 25 வெற்றுப் பக்கற்றுகளை அனுப்பி அழகிய கைலேஞ்சி ஒன்றைப் பரிசாகப் பெறுங்கள்.

## புதனன்று வைரவிழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

யாழ்ப்பாணம் சனசரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் வைர விழா–பரிசளிப்பு விழா எதிர்வரும் புதன்கிழமை (3 ஆம் திகதி) நடைபெற உள்ளது.

அன்று காலை 9.30 மணிக்கு நடைபெறும் பிரஸ்தாப விழாவில் பிரதம அதிதியாக யாழ் மாவட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி கலந்து கொள்வார்.

நிறுவுநர் நினைவுரையை பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையும், வைரவிழாச் சிறப்புரையை திரு. க. சி. லரத்தினமும் நிகழ்த்துவர். [அ]

## சட்டத்தரணி சுட்டுக்கொலை

கொழும்பு, ஏப்ரல் 29

வீரக்கெட்டியாவில் கடந்த செவ்வாய்க்கிழமை வழிபாட்டுத்தலம் ஒன்றில் வணங்கிக் கொண்டிருந்த சமயம் சட்டத்தரணி ஒருவர் ஆயுதந்தரித்த இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மரணமான சட்டத்தரணியின் பெயர் ஜே எம் டி பண்டார என்பதே. எம்பிலிபிட்டிய நீதிமன்றத்தில் இவர் தொழில் புரிந்து வந்தார். [ஒ-எ]

## செய்திச் சாரம்

## டாக்டர்கள் பிணையில்

கொழும்பு, ஏப்ரல் 29

தீவிரவாத சந்தேக நபர் ஒருவருக்கு சிகிச்சை அளித்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த இரண்டு டாக்டர்களையும் பிணையில் விடுதலை செய்யுமாறு ஹோமகம பதில் நீதிவான் உத்தரவிட்டார். [ஒ-எ]

## வெலிஓயா என்று ஒன்று இல்லையாம்

கொழும்பு, ஏப்ரல் 29

வெலிஓயா என்ற பெயரில் புதிய நிர்வாக மாவட்டம் எதுவும் இல்லை.

வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன முன்கண்டவாறு கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்தார்.

"சிலர் இது தொடர்பாகத் தவறான அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளனர். உண்மையில் வெலிஓயா என்ற பெயரில் மாவட்டம் எதுவும் இல்லை"—என்றும் அமைச்சர் சொன்னார். ஒ-எ)

வெளிவந்துவிட்டது! விற்பனையாகிறது!!

உதயன் வெளியீட்டகத்தின்

இந்துமத மாத மஞ்சரி

★ ஞானக்கதிர் ★

இப்போது அமோகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. நீங்களும் தவறாது வாங்கிப் படியுங்கள்.

★ திருமுருக கிருபானந்தவாரியார்
★ ஆத்மஜோதி நா. முத்தையா
★ புலவர் நா. சிவபாதசுந்தரனார்
★ அ. குமரகுரு
★ கலாநிதி க. ந. வேலன்

ஆகியோரின் ஆழம் செறிந்த சமயக்கட்டுரைகளுடனும்—

★ மாமுனி யோகர் சுவாமி
★ ஸ்ரீ சத்திய சாயி பாபா

ஆகியோர் பற்றியும் —

★ நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய ஸ்வாமிகள்
★ சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
★ கொழும்பு, மட்டக்களப்பு, பருத்தித்துறை இராமகிருஷ்ண மிஷன் மடாதிபதிகள்

ஆகியோரின் ஆசியுரைகளுடனும்

★ விநாயகரின் வண்ணப்பட முகப்புடனும் முதலாவது கதிர் ஒளிபரப்புகிறது.

விலை ரூபா 5/- மட்டுமே!

உதயன் விற்பனை முகவர்களிடம் கிடைக்கும்

## தவறிவிட்டது

அச்சுவேலியைச் சேர்ந்த திருவிளங்கம் செல்வச்சந்திரன் ஆகிய நான் 28 - 4 - 89 வெள்ளிக்கிழமை அச்சுவேலியில் இருந்து வல்லை, நெல்லியடி, கரணவாய், உடுப்பிட்டி ஊடாக பருத்தித்துறை செல்லும் வழியில் எனது அடையாள அட்டை, மோட்டார் சைக்கிள் லைசென்ஸ், யாழ் / அரசினர் வைத்தியசாலை–கிளினிக் காட் மற்றும் சில முக்கிய பத்திரங்கள் அடங்கிய U. S. A என பொறிக்கப்பட்ட கடும் நீல நிற பேஸ் ஒன்று தொலைந்து விட்டது. இதைக்கண்டு எடுத்தவர்கள் அச்சுவேலி பஸ் நிலையத்திற்கு அருகில் இருக்கும் கண்டி ஸ்ரோர்ஸ் பலசரக்குக் கடை அல்லது அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்கிறேன். (320)

## வயதெல்லை 45 ஆக உயர்வு

கொழும்பு, ஏப்ரல் 29

அரச சேவையில் வெளிவாரிப் பட்டதாரிகள் சேர்வதற்கான வயது எல்லை 45 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை இம்மாத முற்பகுதியில் இப்படி தீர்மானித்ததாக அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு அமைச்சரவை அலுவலகம் அறிவித்துள்ளது. [ஒ-எ]

## இடது க. கட்சி மேதினக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி [இடது] யாழ்ப்பாணத்திலும் மலையகத்திலும் மேதினக் கூட்டங்களை நடத்துகின்றது.

யாழ். நகரில் ஸ்ரான்லி வீதியில் உள்ள பட்டப்படிப்புகள் கல்லூரி மண்டபத்தில் காலை 9 மணிக்கு திரு. கே. சுப்பிரமணியம் தலைமையில் மேதினக் கூட்டம் நடைபெறும் இக் கூட்டத்தில் திருவாளர்கள் சி. கா. செந்திவேல், க. தணிகாசலம், சோ. தேவராஜா, கா. சதிர்காமநாதன் கா. பஞ்சலிங்கம் ஆகியோர் உட்பட தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் உரையாற்றுவர்.

மலையகத்தில் பூண்டுலோயா நகரில் எஸ். இராஜேந்திரன் தலைமையில் நடைபெறும் மேதினக் கூட்டத்தில் திருவாளர்கள் இ. தம்பையா, எஸ். செல்வராஜ், எம். பத்மநாதன், பி. இரவீந்திரன் உட்பட பலர் உரையாற்றுவர். [க-68]

## மரணமானவர் நெடுந்தீவு வாசி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

கடந்த 21 ஆம் திகதி சுழிபுரத்தில் நடந்த மோதலின் போது மரணமான இளைஞர் நேற்று அடையாளம் காணப்பட்டார்.

இவரது சடலம் நீண்ட நாட்களாக அடையாளம் காணப்படாததை அடுத்து அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

ஆயினும் பொலீஸாரிடம் இருந்த புகைப்படங்கள் மூலமே சடலம் அடையாளம் காணப்பட்டது

மரணமானவர் நெடுந்தீவைச்சேர்ந்தநோபர்ட்ஜோர்ஜ் [நெல்சன் வயது19] என்று கூறப்பட்டது. [ஓ-9]

## கண்ணி மீட்பு

கொழும்பு, ஏப்ரல் 29

வெலிகமப் பகுதியில் வீதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த பத்துக் கிலோ எடையான நிலக்கண்ணி வெடி ஒன்றை கடந்த புதன்கிழமை பாதுகாப்புப் படையினர் மீட்டு எடுத்தனர். [ஒ-எ]

## புதிய சென்றிகள்

வடமராட்சி ஏப்ரல் 29

பொலிகண்டி இந்திய இராணுவ முகாமில் சிப்பாய்கள் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது.

முகாமின் கிழக்குப் பகுதியிலும் தெற்குப் பகுதியிலும் புதிய "சென்றி"கள் அமைக்கப்பட்டு தீவிர சோதனைகளும் நடைபெறுகின்றன. [க-160]

## 8 சடலங்கள் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஏப் 29

ரக்வானை, தங்காலை ஆகிய இடங்களில் எட்டுச் சடலங்கள் பாதுகாப்புப் படையினரால் கண்டுபிடிக்கப்பட்டன.

சடலங்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களும் எரிகாயங்களும் காணப்பட்டன.

ரக்வானையில் 6 சடலங்களைப் பொலீஸார் கண்டுபிடித்தனர். தங்காலையில் இரண்டு சடலங்களைக் கடற்படையினர் கண்டெடுத்தனர். (ஒ-எ)

## நேர்முகப்பரீட்சைக்கு செல்ல வவுனியா வரை விசேட பஸ்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

அனுராதபுரத்தில் நடைபெற உள்ள வெளிவாரிப் பட்டதாரி ஆசிரியருக்கான நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்வோருக்கு விசேட பஸ் ஒன்று வெளிவாரிப் பட்டதாரிகள் சங்கத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

இந்த பஸ் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ் பஸ் நிலையத்திலிருந்து புறப்பட உள்ளது.

வவுனியா வரை மட்டுமே சேவை நடத்தப்படும்என்றும், பயணம் செய்வோர் முன்கூட்டியே யாழ் பஸ்நிலையத்தில் ஆசனங்களைப் பதிவு செய்து கொள்ளும்படியும் வெளிவாரிப் பட்டதாரிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஓ-9)

## இறக்குமதி மண்வெட்டி விலை குறைந்தது!

கொழும்பு, ஏப்ரல் 29

இறக்குமதி செய்யப்படும் மண்வெட்டியின் விலை பத்துச் சதவீதத்தினால் உடனடியாகக் குறைக்கப்பட்டிருப்பதாக அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது

ஜனாதிபதி பிரேமதாஸாவின் உத்தரவின் மீது இவ் விலைக் குறைப்பு இடம்பெறுகிறது.

இதுவரை 226 ரூபாவுக்கு விற்கப்பட்டுவந்தமண்வெட்டியின் புதிய விலை ரூபா 195. 196 ரூபாவுக்கு விற்கப்பட்டு வந்த மண்வெட்டியின் விலை இனிமேல் 185 ரூபாவாக இருக்கும். [ஒ-எ]

## மதகுருமாரைக் கண்டபடி கைதுசெய்யக் கூடாது

மதகுருமார்களைக் கண்டபடி போதிய ஆதாரமின்றிக் கைது செய்யக்கூடாது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆயுதப்படையினருக்குக் கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

மதகுருமார் கைதுசெய்யப்படும் பட்சத்தில் 24 மணி நேரத்திற்குள் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அறிவிக்க வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது.

பௌத்த, இந்து, இஸ்லாம் மத குருமார் கைதுசெய்யப்பட்டால் அந்தந்த மதங்களுக்கு உரிய துணை அமைச்சுச் செயலாளர்களுக்கு 24 மணி நேரத்துக்குள் அறிவிக்கவேண்டும். அவர்கள் சம்பந்தப்பட்ட மதபீடங்களுக்கு அறிவிப்பர். கிறிஸ்தவ கத்தோலிக்க மத குருமார் கைது செய்யப்பட்டால் கலாசார அமைச்சுச் செயலாளருக்கு அறிவிக்க அவர் சம்பந்தப்பட்ட மத பீடங்களுக்கு அறிவிப்பார். (அ)

## கிராம சேவையாளர் அதிகாரங்கள் மாகாண சபை நிர்வாக மட்டத்தில் விரிவுபடுத்தப்படும்

கொழும்பு, ஏப். 29

கிராம சேவையாளர்களின் அதிகாரங்களை அந்தந்த மாகாண சபைகளின் நிர்வாக மட்டத்தில் விரிவு படுத்துவதற்கு வழி செய்யும் சட்டம் ஒன்று கொண்டுவரப்படவுள்ளது.

புதிய சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அரச உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமைச்சு அலுவலத்தில் நடந்த மாநாடு ஒன்றில் இது தொடர்பாக ஆராயப்பட்டதாகவும் மாத இறுதிக்குள் இச்சட்டமூலம் சமர்ப்பிக்கப் படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## தமிழ் ஆசிரியர் பிரச்சினை: கவனிக்க அதிகாரிகள் குழு

### அம்பாறைக் கல்வி அலுவலகத்தில்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

அம்பாறைக் கல்வி அலுவலகத்தில், அப்பகுதித் தமிழ் ஆசிரியர்களின் பிரச்சினைகளைக் கவனிக்கத் தமிழ் அதிகாரிகள் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த விவரத்தைக் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திரு. மசிந்தா பந்துசேன வெளியிட்டுள்ளார்.

அம்பாறைக் கல்வி அலுவலகத்தில் தமிழ் ஆசிரியர்களின் விவகாரங்களைக் கையாளுவதில் பாகுபாடு காட்டப்படுவதாகவும் விடயங்களைத் தாமதப்படுத் லஞ்சம் வங்குகிறார்கள் எனவும், தமிழ் ஆசிரியர்கள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளரின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர்.

இவ்விடயத்தைச் சங்கம் கல்வி அமைச்சின் செயலாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்தது.

இவ்விடயம் தொடர்பாக அமைச்சின் செயலாளர் அம்பாறை கல்விப் பணிப்பாளருடன் தொடர்புகொண்டு அறிக்கைபெற்றது மாத்திரமல்ல; தமிழ் ஆசிரியர்களின் விவகாரங்களைக் கவனிப்பதற்குத் தமிழ் அதிகாரிகள் கொண்ட குழுவை நியமித்துள்ளதாகவும் சங்கத்தின் பொதுச்செயலாளர் க. மகாசிவத்துக்கு அறிவித்துள்ளார். (அ)

## புலிகளின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வேறு சிலரும் வருவர்.

கேள்வி: அவர்கள் வெளிநாட்டில் இருந்து வருகின்றனரா? அல்லது வன்னியில் இருந்தா?

அமைச்சர்: உரிய இடத்தில் இருந்து வருவார்கள்

கேள்வி: உடன்படிக்கைக்குப் பதிலாகக் கனேடிய அரசியலமைப்பு பற்றி ஆராயப் படவிருக்கிறதா?

அமைச்சர்: கனேடிய அரசியல் அமைப்பா? கேள்விப்பட்டதேயில்லை. [ஓ-எ]

## 10 தினங்களில் 122 கொள்ளைகள்

கொழும்பு, ஏப். 29

தென்பகுதியில் பத்துத் தினங்களில் 122 கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று பொலீஸ் தலைமைக் காரியாலயம் தெரிவித்திருக்கிறது.

## இப்படியும் ஒரு செயற்கை விலை உயர்வு!

ஜனசக்தித் திட்டத்திற்காக வர்த்தகர்களிடமிருந்து விசேட வரி அறவிடப்படுவதாக, சில வர்த்தகர்கள், பாவனையாளர்களிடம் இருந்து பொருள்களுக்கு அதிக விலை அறவிடுகிறார்களாம்!

ஆனால் அப்படி எந்த வரியும் விதிக்கப்படவில்லை!!

இது ஜனசக்தித் திட்டம் குறித்து மக்கள் மத்தியில் தப்பான அபிப்பிராயத்தையும், அபகீர்த்தியையும் ஏற்படுத்த சில தீய சக்திகள் செய்யும் முயற்சி – என்று அரசாங்கம் நேற்று அறிக்கை மூலம் தெரிவித்தது.

ஜனசக்தி திட்டத்திற்குத் தேவையான நிதிக்காக அரசாங்க ஊழியர் சம்பளத்திலிருந்து ஒரு தொகை அறவிடப்பட உள்ளது-

அதே போலத் தனியார் துறை ஊழியர் சம்பளத்திலும் பணம் வெட்டப்படும்-

இவ்வாறெல்லாம் பொய்ப் பிரசாரமும், வதந்திகளும் பரப்பப்படுகின்றன-

இவற்றில் எவ்வித உண்மையுமில்லை. ஜனசக்தித் திட்டத்திற்குத் தேவையான நிதி வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டு, நாடாளுமன்றத்தாலும் அங்கீகரிக்கப்பட்டு விட்டது-

எனவே மக்கள் தீய சக்திகளின் பொய்ப் பிரசாரங்களை நம்ப வேண்டாம்.

-என்றும் அரசின் அறிக்கையில் தெளிவு படுத்தப்பட்டுள்ளது. [அ]

## வைத்திய மாணவர் வாரம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வைத்திய மாணவர் சங்கத்தின் "மெடிக்கோஸ் வீக்" வாரத்தின் இறுதி நாள் நிகழ்ச்சிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

பல்கலைக்கழக வைத்திய பீட மண்டபத்தில் நாளை 2 மணிக்கு ஆரம்பமாகும் பிரஸ்தாப நிகழ்ச்சிகளில் டாக்டர் வி. கிருஷ்ணராஜாவும் பாரியாரும் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

பல்கலைக்கழக உபவேந்தர், வைத்திய பீடாதிபதி ஆகியோரின் உரைகளும், கலை நிகழ்ச்சிகளும் பரிசளிப்பு வைபவமும் இடம்பெறும்.

"மெடிக்கோஸ் வீக்" வார நிகழ்ச்சிகள் ஷப்ரு யுனிக்கோபினன்ஸ் நிறுவனத்தின் ஆதரவுடன் நடைபெற்று வருகின்றன. [அ]

## மரண அறிவித்தல்கள்

### திரு. சண்முகம் திருச்செல்வம்

[Assesor - Income Tax Dept. Colombo]

சித்தன்கேணியைச் சேர்ந்தவரும் கொழும்பு இறைவரித் திணைக்கள வரி மதிப்பீட்டாளருமான சண்முகம் திருச்செல்வம் 26-04-1989 அன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சண்முகம்–நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் கந்தையா–தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், பாக்கியலட்சுமியின் அருமைக் கணவரும், பவானி (நுண்கலைப்பிரிவு – யாழ் பல்கலைக்கழகம்), சேதீஸ்வரன் (நோர்வே), சுகிர்தினி (நுண்கலைப்பிரிவு-யாழ் பல்கலைக்கழகம்), ராமேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசன் (உரிமையாளர்–நியூமதி ஜுவல்லர்ஸ்), சிவராமன் (உரிமையாளர்-ஸ்ரீலங்கா அச்சகம்), திருமதி பொன்னம்மா கந்தசாமி, கனகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் சிவசுப்பிரமணியம் (மின்பொறியியலாளர்–சவூதி அரேபியா), கதிர்காமராசா (உற்பத்தி முகாமையாளர், வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்), இராஜேஸ்வரி பரமேஸ்வரி, சோமசுந்தரம் (ஜெர்மனி), கணேசராசா (பொறியியலாளர்-கே. ஜீ. இன்டஸ்ரீஸ்), சண்முகநாதன் (ஜெர்மனி) தனலட்சுமி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும், மங்கையர்க்கரசி (இந்தியா) முத்துமாரி, சிவப்பிரகாசம் (Field Officer - Henfold Estate Lindula), கந்தசாமி (ஆசிரியர்–பிளவத்தை அமெரிக்கன் மிஷன் பாடசாலை), நாகதேவி, யோகேஸ்வரி ஆகியோரின் சகலனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை [30-04-1989] காலை 10-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று வழுக்கையாறு மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

'திருஅகம்'
சித்தன்கேணி. [10766]

தகவல்:
க. கதிர்காமராசா

### திருமதி நாகம்மா தளையசிங்கம்

[யாழ். கோண்டாவில்,
இராமகிருஷ்ண மகா வித்தியாலய உப அதிபர்]

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த திருமதி நாகம்மா தளையசிங்கம் 27-04-1989 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. த. தளையசிங்கத்தின் அன்பு மனைவியும் வேல்முருகதாஸ், த்ராஸ் [சவூதிஅரேபியா] சிவரூபி, குகதாஸ், லோகரூபி [யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவி] ஆகியோரின் அன்புத் தாயாரும், தர்மகுலசிங்கம், அமுதராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஷர்மிளா, பிரதாப், அனுஷியா, அமலன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
T. குகதாஸ் (மகன்)
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம். [314]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 29 — 04 — 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

பெரடெனியா இன்ஸ்ரிரியூட்
கொக்குவில்
A/L 91
இந்து நாகரிகம், தமிழ்: பாலா
அளவையியல்: சந்திரராஜா
அரசியல்: செபராஜா
வரலாறு: புஸ்பரத்தினம்
அனுமதிக்கு முந்துங்கள்!

சஞ்சீவி
# சஞ்சிகை
29 - 04 - 1989 சனிக்கிழமை

பெரடெனியா இன்ஸ்ரிரியூட்
கொக்குவில்
A/L 91
கணக்கியல்: வன்னியசிங்கம்
வர்த்தகம்: தேவா
பொருளியல்: உதயன்
புவியியல்: வேலாயுதபிள்ளை
வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.

கருத்துக் கலசம் மயூரா

## அறியாமை இருள்

உலக உயிரினங்களில் உயர்ந்தவனாகக் கருதப்படுபவன் மனிதன். ஐந்தறிவுகளுக்கு அதிகமாக ஆறுவது அறிவுடையவன் என்பதாலேயே மனிதனுக்கு அந்த உயர்ந்த இடம். விடயங்களை, விவகாரங்களைப் பகுத்தறியும் சக்தியே ஆறுவது அறிவாகும்.

அந்தப் பகுத்தறிவின் விளைவே கல்வியும், ஞானமும் ஆகும். மனிதனை மனிதனாக்குவது அறிவு - கல்வி - ஞானம் - ஆகியவையே. ஆகையால் மனிதனாகப் பிறந்தவனின் பிரதான இலட்சியமாக, நோக்கமாக அறிவுத் தேடல் இருக்கவேண்டும்.

அறியாமை என்ற இருளில் மனிதன் மூழ்காதிருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று ஆதிகாலம் முதல் முயற்சி செய்யப்பட்டு வருகிறது. ஆனால் உலகின் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினர் அறியாமைக்குள் சிக்குண்டு தவிக்கிறார்கள் என்பது பெரும் கவலை தரும் உண்மையாகும்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில், பின்தங்கிய நாடுகளில் வாழும் மக்களில் பலர் எழுத்தறிவே இல்லாதவர்களாக இருக்கிறார்கள் என்பதை உலக ஸ்தாபனங்கள் வெளியிடும் புள்ளி விவரங்கள் வெளிச்சம் இட்டுக் காட்டுகின்றன.

ஏன், ஈழத் தமிழ்ப் பிரதேசங்களில் பல கிராமங்களில் இன்னமும் அறியாமை மூடிக்கிடக்கின்றது என்ற விவரத்தைப் பலர் அக்கறையுடன் கருத்தில் கொள்வதில்லை. யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பின்தங்கிய கிராமங்களில் அறியாமை, கல்வி அறிவின்மை பெரும் சமூகப் பிரச்சினையாக உள்ளது என்பதை சர்வோதயப் பிரமுகர் ஒருவர் அழுத்திக் கூறி உணர்த்தி இருக்கிறார்.

உலகமும், உலகம் வாழ் மக்களும் உச்சத்துக்கு வளர்ச்சி - முன்னேற்றம் - கண்டுவரும் இந்த வேளையிற்கூட எமது மத்தியில் அறியாமை இருள் கவிந்திருப்பது விசனத்துக்கு உரியதும், வேதனையைத் தருவதுமாகும்.

ஏனைய சமூகப் பிரச்சினைகளுக்கு முதலில் அறியாமை போக்கும் பணிக்கு முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும்.

அறியாமையால் வறுமையும், ஏழ்மையால் அறிவின்மையும் ஏற்படுவது இயல்பு. அவை இரண்டும் ஒன்றுடன் மற்றது இணைவுபட்டிருப்பதைக் காணலாம்.

ஆகையால் அவை இரண்டையும் தமிழ்ப் பகுதிகளில் இருந்து போக்கடிக்க உழைப்பது பெரும் சமுதாயக் கடமையாகும். அந்தச் சமுதாயக் கடமையை ஆற்றுவதில் எவருமே பார்வையாளராக இருக்கக்கூடாது; பங்காளர்களாக மாறவேண்டும். ★

# இறைவன் போற்றும் பொருள் எது? நாரத மகரிஷி கண்டறிந்த உண்மை!

ஒருமுறை நாரதமுனிவர் கிருஷ்ணபகவானிடம் சென்றார். நாரதர் செல்லும்போது பகவான் ஏதோ ஒரு பொருளை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

நாரதரைக் கண்டதும் அதனை மூடிவைத்துவிட்டு,

நாரதரே வருக...! வருக...! என்று பகவான் சிரித்தமுகத்தோடு வரவேற்றார்.

ஆனால் நாரதருடைய எண்ணம் முழுவதும் பகவான் மூடிவைத்திருந்த செப்புப் பாத்திரத்தின் மீதே பதித்து இருந்தது.

> 'ஞானக்கதிர்' — உதயன் நிறுவனம் வெளியிடும் இந்து மத மாத மஞ்சரி ஆகும்.
>
> இதன் முதலாவது இதழ் கடந்த 21 ஆம் திகதி நல்லை ஆதீனத்தில் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகளால் வெளியிடப்பெற்றது.
>
> முதலாவது இதழில் பிரசுரமான கட்டுரை ஒன்று இங்கு மறுபிரசுரஞ் செய்யப்படுகிறது.

நாரதர் ஏதோ ஒன்றை அறிந்துகொள்ள விரும்பினால் அதை அறியும்வரை அவருடைய மனம் ஒரு நிலையில் நிற்காது.

### அரிய பொருள்

'சுவாமி, பகவானுக்கும் அரியபொருள் உலகத்திலுண்டோ...?'

'ஏன் நாரதரே இக்கேள்வி வரக்காரணம் என்னவோ...?'

'சுவாமி...! ஏதோ ஒரு பொருளை உற்றுப்பார்த்துக் கொண்டு இருந்தீர்களே...! என்னைக் கண்டதும் அதனை மூடிவைத்து விட்டீர்கள். அதற்காகக் கேட்டேன்' என்றார் நாரதர்.

பகவான் புன்முறுவல் பூத்தவராய் அப்பொருளை எடுத்து, 'அதனை நீயே பார்த்துக்கொள்' என்று நீட்டினார்.

ஒரே பூதூளிமயமாகக் காணப்பட்டது.

'ஆம் நாரதரே...! எனது அடியாருடைய பாததூளி தான் அது. அதுதான் எனக்கு உயர்ந்த பொருள்'.

'சுவாமி, அடியார்களுடைய மகிமை அத்தகையதா...? அப்படியானால் எனக்கு அதைத்தெளிவாக விளக்கியருள வேண்டும்'.

'நாரதரே...! உடனே பூவுலகத்துக்கு விரைந்து செல்லும். இன்ன தெருவில் உள்ள சந்தியில் நாய் ஒன்று சரியாக ஒரு வாரத்தில் குட்டிபோடப் போகின்றது. அது அடியார் பெருமையை விளக்கமாகச் சொல்லும்' என்றார் பகவான்.

நாரதர் குறிப்பிட்ட நேரம் குறிப்பிட்ட இடம் போய்ச் சேர்ந்தார். அப்போதுதான் நாய் குட்டியைப் போட்டுவிட்டு எங்கோ இரை தேடச் சென்றிருந்தது. நாரதர் குட்டியை அன்போடு எடுத்து,

### நாய்

ஏ...! நாய்க்குட்டியே எனக்கு அடியார் பெருமையை எடுத்துச் சொல்வாயா...? என்று அதன் காதினுள்ளே கேட்டார்.

நாரதர் அங்ஙனம் கேட்டதும் தான் தாமதம் நாய்க்குட்டி வாள் என்று கத்திக்கொண்டு கீழே வீழ்ந்து இறந்து விட்டது.

நாரதர் ஓர் உயிரை அநியாயமாகக் கொலை செய்துவிட்டேனே என்ற கவலையுடன் பகவானிடம் சென்றார். நிகழ்ந்ததை உரைத்தார்.

பகவான் புன்முறுவல் பூத்தவராய், 'இன்ன ஊரிலுள்ள, இன்ன தெருவில், இன்ன இலக்கம் உள்ள அந்தணர் வீட்டுப் பசு ஒரு மாதத்தில் கன்று ஈனப் போகிறது. அக்கன்றுதான் அடியார் பெருமையைப் பற்றிக் கூறப்போகிறது' என்றார் பகவான்.

நாரதர் தயங்கினார். 'சுவாமி...தெருவில் நாய்க்குட்டி இறந்ததைக் கேட்பாரில்லை. அதனால் தப்பி வந்தேன். நாய்க்குட்டிக்கு நிகழ்ந்தகதி அந்தணர் வீட்டுப் பசுக்கன்றுக்கும் நிகழ்ந்தால் என்னவது' என்றார் நாரதர்.

'நாரதா...! பயப்படாதே தைரியமாகச் செல்' என்றார் பகவான்.

குறித்த நாளும் வந்தது; நாரதர் அதிகாலை நான்கு மணிக்கு அந்தணர் வீட்டுக் கொல்லைப்பக்கமாகச் சென்றார்.

### பசு

பசு அப்போதுதான் கன்றை ஈன்றிருக்கவேண்டும்.



கன்று எழுந்து நிற்பதற்கு முயன்றுகொண்டு இருந்தது.

நாரதர் கன்றை அன்போடு எடுத்தணைத்தவராய், 'ஏய்...! கன்றுக்குட்டியே... எனக்கு நீ அடியார் பெருமையை எடுத்துரைப்பாயா...?' என்று அதன் காதில் வாயை வைத்துக் கேட்டார்.

நாரதருடைய ஒலி காதில் விழுந்ததுதான் தாமதம். கன்று மூன்று முறை நின்ற இடத்திலேயே சுழன்று நிலத்திலே வீழ்ந்து இறந்தது.

நாரதர் பயத்தினால் இளைக்க இளைக்க ஓடிவந்து பகவானை அடைந்தார். பகவான் புன்முறுவல் பூத்தவராய் நாரதரை வரவேற்றார்.

'நாரதா... எல்லாம் அறிவேன். பயப்படாதே, இன்னும் சரியாக மூன்று மாதத்தில் காசிராசனுக்குக் குழந்தை கிடைக்க இருக்கிறது. நீண்டகாலம் குழந்தைச் செல்வம் இல்லாத அரசனுக்கு வாரிசு வரப்போகிறது. இன்றைக்கே விரைந்து செல். காசிராசன் வரவேற்புச் செய்வான். அரசனுக்கு ஒரு ஆண் குழந்தை கிடைக்கப் போகிறது என்று கூறு. அரசன் இன்னும் மகிழ்ந்து அரண்மனையில் உமக்கு இராசோபசாரங்கள் செய்வான். குழந்தை பிறந்த உடனே அதனைப் பொற்றாம்பாளத்தில் ஏந்தி வந்து முதல் முதலாக உன்னிடத்தில் காட்டுமாறு கூறிவை' என்றார் பகவான்.

நாரதர் தயங்கியபடியே காசிராசனிடம் சென்றார். நாரதருக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. குறித்த நாளில் குழந்தையும் பிறந்தது.

தாதியர் குழந்தையைப் பொற்றாம்பாளத்தில் ஏந்தி வந்து நாரதரிடம் காட்டினர். குழந்தை நாரதரைப் பார்த்துச் சிரித்தது.

'குழந்தையே...! என்னைப் பார்த்தவுடனேயே சிரிக்கிறாயே...! என்னை இதற்கு முன் அறிவாயா...?' என்று கேட்டார் நாரதர்.

நாரதருடைய நெஞ்சம் திக்கு திக்கு என்று அடித்துக் கொண்டது. என்ன ஆச்சரியம் குழந்தை வாய் திறந்து பேசியது.

### இளவரசன்

'சுவாமி...! அதற்கிடையில் என்னை மறந்து விட்டீர்களா...? நான் முதலில் உங்களைத் தரிசிக்கும் போது நாய்க்குட்டியாக இருந்தேன். உங்கள் தரிசனத்தால் கன்றுக் குட்டியாகும் வாய்ப்பினைப் பெற்றேன்.'

'இரண்டாவது முறை ஏற்பட்ட தரிசனத்தால் அரசகுமாரனாகும் பேறு பெற்றேன்'.

'மூன்றாவது முறை ஏற்பட்ட தரிசனத்தால் பிறந்த உடனேயே பேசும் வாய்ப்பினைப் பெற்றேன்.'

'இடைவிடாது இறை நாமத்தையே ஜெபம் செய்யும் உங்களிலும் சிறந்த அடியார் வேறு யாராவது இருக்க முடியுமா சுவாமி...? உங்களுக்கு உங்கள் பெருமை தெரியாத வகையில் வாழ்த்துகிறீர்கள். சுவாமி...! அதுவே உங்களுடைய மிகப் பெரிய பெருமையாகும்' என்று கூறியது குழந்தை.

சத்சங்கம் ஒன்றினாலேயே ஒருவனுக்கு இம்மையில் நல்வாழ்வும் மறுமையில் முத்தியும் தவறாது கிடைக்கும் என்பது தெளிவாகின்றது.

சத்சங்கம் என்பதற்கு நல்லோர் கூட்டம் என்பது பொருள். இதில் இரண்டு வகை உண்டு., ஒன்று நேர்முக சத்சங்கம், அடுத்தது மறைமுக சத்சங்கம்.

பூத உடலோடு கூடிய ஒரு மகாத்மாவின் முன்னிலையில் இருந்து அவரது உபதேசங்களைக் கேட்டல் நேர்முக சத்சங்கம் ஆகும்.

அம்மகாத்மாக்கள் பூத உடலோடு இல்லாக் காலத்தில் அவருடைய அருளுபதேசங்களைப் படிக்கும்போது ஏற்படுவது மறைமுக சத்சங்கமாகும்.

சமய சாதனைகளுள் அத்திவாரமாக அமைந்ததும் முக்கியமானதும் சத்சங்கமாகும்.

சத்சங்கத்திற்கு சாதி, சமயம், ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேறுபாடுகள் எவையுமே இல்லை.

சத்சங்கத்தில் சேர்ந்து கொண்ட ஒருவனுக்கு வேற்றுமைகள் எல்லாம் மறைந்து விடுகின்றன.

### ரமணர் வாக்கு

தாபம் நீங்க வேண்டுமானால் சந்திரனை நாடிச் செல்லவேண்டும். வறுமை நீங்க வேண்டுமானால் கற்பகத் தருவை நாடிச் செல்லவேண்டும். பாவம் ஒழியவேண்டுமானால் கங்கையை நாடிச் செல்லவேண்டும்.

ஆனால் ஒரு சாதுவின் தரிசனம் கிடைத்து விடுமானால் தாபம், வறுமை, பாவம் ஆகிய மூன்றும் ஒரே நேரத்திலேயே சழிந்து விடும்.

'கோபுர தரிசனம் கோடி புண்ணியம், சாது தரிசனம் சதகோடி புண்ணியம்' என்று பெரியவர்கள் சொல்லுவார்கள்.

சத்சங்கத்தின் மகிமை பற்றிப் பகவான் ரமணமகரிஷிகள் இயற்றிய வெண்பா கீழே தரப்படுகிறது.

தாபந் தண்சந்திரனால்
தைனியம் நற்கற்பகத்தால்
பாபந்தான் கங்கையாற்
பாறுமே - தாபமுதல்
இம்மூன்று மேகும்
இணையில்லா சாதுக்கள்
அம்மா தரிசனத்தாற்றான். ★

- ஆத்மஜோதி நா. முத்தையா -

# மருந்தாகும் ஒளி

ஒளிதரும் சூரியனை மனித இனம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே வணங்கி வந்திருக்கிறது.

ஆனால் இப்போதுதான் விஞ்ஞானிகள், மனித உடல் நலத்துக்கு ஒளியால் ஏற்படும் உயிரியல் விளைவுகளையும் மருத்துவ விளைவுகளையும் புரிந்துகொள்ளத் தொடங்கியுள்ளார்கள்.

மனச்சோர்வில் இருந்து, பித்தப்பையில் கல், புற்றுக் கட்டிசெல்கள், நோய் எதிர்ப்பு அமைப்புக் கோளாறுகள் வரையான பல கோளாறுகளுக்குச் சிகிச்சையளிக்க இயற்கையான மற்றும் செயற்கையான ஒளியைப் பயன்படுத்துவது—

அதற்குத் தேவையான ஒளியின் அளவு, வகை ஆகியவற்றைப் பற்றி விஞ்ஞானிகளும், ஆய்வாளர்களும் மேலும் மேலும் அதிகமான ஆராய்ச்சிகளைச் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள்.

இந்தத் துறைக்கு ஒளி உயிரியல் Photo-Biology) என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

இதில் ஒளிச் சேர்க்கை, மின்மினிகளின் ஒளி தோன்றுவதற்கான வேதிக்காரணங்கள் போன்றவை முதல் வீடியோ காட்சி நிலையங்களில் பணியாற்றுவது காரணமாக ஏற்படும் விளைவுகள், உடல் தாள இயக்கங்களில் ஏற்படும் குலைவுகளான ஜெட் சோர்வு (Jet Lag) போன்றவை வரையிலான பல விஷயங்கள் அடங்கிவிடுகின்றன.

### மனச்சோர்வு

வியாதிகளில் இருந்தும், மனச்சோர்வுகளில் இருந்தும் குணம்பெற ஒளியைப் பயன்படுத்துவது ஒளி மருத்துவம் (Photo Medicine) என்ற தனிப் பெயரால் அழைக்கப்படுகிறது.

கடும்குளிர் வீசும் பிராந்தியங்களில் பலருக்குக் குளிர் காலத்தில் மனச்சோர்வு ஏற்படுவதுண்டு.

கடந்த ஐந்தாண்டுகளுக்கு உள்ளேயே அதற்கான காரணங்களையும் சிகிச்சை முறைகளையும் கண்டுபிடிப்பதில் பிரமிக்கத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இந்த மனச்சோர்வை உண்டாக்குவதில் ஒளிப்பற்றாக்குறையின் பங்களிப்பைப் பற்றியும் புரிந்துகொள்ளப் பட்டிருக்கிறது. அந்த நோய்க்கு பருவமாற்ற பாதிப்புக் கோளாறு(Seasonal Affective Disorder) என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

அதனால் பாதிக்கப்பட்டவர்கள் மந்தமாக இருப்பார்கள். இரவில் 12 மணிநேரம் தூங்கிவிட்டுத் தூக்கமே கிடையாது என்று புலம்புவார்கள்.

சாப்பாட்டுக்குக் குறிப்பாக கார்போஹைட்ரேட்டுகள் அடங்கிய உணவுப் பொருட்களைச் சாப்பிடத்துடிப்பார்கள்.

அவர்களுக்கு ஆண்மை குறைந்திருக்கும், வேலையில் அல்லது படிப்பில் கவனம் செல்லாது, மற்றவர்களுடன் பழக முடியாமல் போகும்.

இப்பிராந்தியங்களில் குளிர் காலத்தில் பகல் நேரம் குறைவாயிருக்கும். இதனால் உடலுக்குப் போதுமான ஒளி கிட்டாமல் போகும்.

பருவமாற்ற பாதிப்புக் கோளாறு உள்ளவர்களுக்குப் பிரகாசமான ஒளி நல்ல குணமளிக்கிறது. இந்தக்கோளாறு ஆண்களை விடப் பெண்களை அதிக அளவில் பாதிப்பதாகத் தெரிகிறது. குழந்தைகளையும் அது கஷ்டப்படுத்துகிறது.

உடலின் தினசரி தாள இயக்கங்கள் குலைவதால் இது ஏற்படுகிறது. சிலமணி நேரம் வெயிலில் உட்கார்ந்து இருந்தால் இது சரியாகிவிடும் என்று சொல்கிறார்கள்.

### பாதிப்பு

தோலில் வரும் ஒருவகைக் காசநோய், குழந்தைகளுக்கு ஏற்படும் மஞ்சள் காமாலை ஆகியவற்றை செறிவு மிக்க ஒளி மூலம் குணப்படுத்த முடியும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

புற ஊதாக்கதிர்கள் லூகேமியாவின் ஓர் அபூர்வமான வகையைக் குணப்படுத்துவதாக நியூயோர்க் மருத்துவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

மனிதர்களில் ஒளியின் விளைவுகளை ஆராயும்போது ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்பும் மதிப்புமிக்க தகவல்களைத் தருகின்றது. அத்துடன் பல புதிய கேள்விகளும் எழுகின்றன.

எனவே ஒளி மருத்துவத்தில் புரட்சிக்கண்டுபிடிப்புக்களுக்கு மகத்தான வாய்ப்புக்கள் உள்ளன. ★

## ரமழான் சிந்தனை



நபிகள் (ஸல்) அவர்கள் விண்ணுலகம் சென்றபோது சுவர்க்கம், நரகம் இரண்டும் காட்டப்பட்டன. அப்போது அவர்கள் சுவர்க்கத்தைப் பார்த்தார்கள். அங்கு ஏழைகளே அதிகமிருந்தனர். நரகத்தைப் பார்த்தபோது அங்கு பெண்கள் அதிகம் இருந்தனர்.

ஸஹர் முடிவு 4. 24
நோன்பு திறக்கும் நேரம் 6. 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னைத் தொடாதே!




'என்ன சின்னத்தம்பி, ஆளைப் பிடிக்கேலாது போல, ஏன் மகளுக்கு ஒரு ஆயத்தமும் செய்யாமல் இருக்கிறீர்' புரோக்கர் அக்கறையாகக் கேட்கிறார்.

'இந்தக் காலம் ஒ[illegible] பெண்ணைக் கரைசேர்க்க [illegible]ண்டுமென்றால் எவ்வளவு [illegible]ண்டுமென் அதிலும் வீட்[illegible]ரைச்சல். யுமில்லாமல் [illegible]ல வேற துணை நிற்கிறது' . நானும் வீட்டில இல ஒ[illegible] குறைவு. வயித் கொ[illegible] தருப்பைக் கட்டிக் [illegible]வடிருக்கிற மாதிரி'

நீ சொல்றதும் நியாயம் தான். நாளைக்கு சொட்டை, நொட்டை வந்தாப்பிறகு கவலைப்படக் கூடாது. வேளை காலைக்கு ஒருத்தன்ரை கையிலே பிடிச்சுக் குடுத்திட்டால் சிவனே என்றிருக்கலாம்'

,புரோக்கர் எங்கையென்டாலும் ஒரு மாப்பிள்ளை பார் நானும் ஏதோ கொஞ்சம் குடுப்பன். இந்தக்காலம் இருபத்தையாயிரம், ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு மாப்பிள்ளை எடுக்கேலாது. அதுக்கென்ன செய்யிறது'

'சின்னத்தம்பி, நீயும் மகளை மேல்வகுப்புப் படிப்பிச்சுப் போட்டாய். மாப்பிள்ளையும் அதுக்கு மேலே பார்க்கிறதென்றால் ஒரு இலட்சம் வைச்சுக் கொண்டுதான் துவங்க வேண்டும்'

'அவளின்ரை படிப்புத் தான். சும்மா வீட்டோடை இருந்தால் நான் தொழில் துறைக்குப் போகேலாதென்று விட்டனுன். பின்னே அவள் படிச்சுக் கிழிக்கப்போறாளே'

'நீ சொல்லுவாய். அவள் என்ன சொல்றாளோ. இந்தக் காலப் பிள்ளையளை நம்ப ஏலாது. எதற்கும் அவளையும் ஒரு சொல்லுக் கேட்க வேணும் தானே'

'அண்ணை! ஒரு மகள்தான், அதுக்காக அறுக்கையில்லாமல் வளர்க்கேல்லை. நாளைக்கு இவனைத் தான் கட்டென்றால் கட்டுவள்-நீ பார்'

'கைவசம் ஒரு மாப்பிள்ளை இருக்கிறான். பிறத்திப் பொடியனென்றாலும் நல்ல குணம். குடி வெறியில்லை. மினிபஸ் ஓடுகிறான். கையிலும் கொஞ்சம் இருக்கும்'

'அண்ணை தொழிலைப் பற்றிக் கவலையில்லை. ஏன் மினிபஸ் உழைப்பு இப்ப குறைவே. வெளிநாட்டு உழைப்பில் பார்க்கக் கூடத்தானே.

பொடியன்ரை நடத்தைக்கு நான் பொறுப்பு. சின்ன வயசிலிருந்து தாய், தகப்பன் இல்லாமல் பேத்தியார்க் கிழவியோடு தான் இருந்தவன். இப்ப அது கிழவியும் போயிட்டுது. பொறுப்பில்லாதவன் தான்.

'அப்ப சரி சின்னத்தம்பி, நான் போய்க் கதைச்சு, வாற நாளுக்குச் செய்வம். பொடியனுக்கு உன்ரை மகளைத் தெரியும், அவள் பள்ளிக்குப் போற நேரத்தில கண்டிருப்பான், இனி இப்போதப் பிள்ளையளுக்கு பொம்பிளை பார்க்கிறதும் பிடிப்பதில்லை'

சின்னத்தம்பியருக்குப் பெரிய சுமை இறங்கியமாதிரி நிம்மதிப் பெருமூச்சுடன், 'சரியண்ணை நீ விசயத்தில் வெற்றி பெற்று வா, நான் கவனிக்கிறன்'

வெயில் நேரத்தில் நடந்து வந்ததும், மகளின்ரை காரியத்தை முடிச்சுப்போடவேணு மென்ற துடிப்பும் சரியான தாகம்போல இருந்தது. 'பிள்ளை பூமணி கொஞ்சம் தண்ணிகொண்டுவா' —

சின்னத்தம்பியாருக்கு தண்ணீரோடு வரும் மகளைப் பார்த்து ஒரே சந்தோஷம். பூமணியைப் பார்த்தால் தாயைப் பார்க்கவேண்டாம் என்று ஊரார் சொல்வதை நினைக்கிறார்.

வேலையில் ஒரு துப்பரவு. அயலட்டையில் போய் கதைத்து நேரத்தைப் போக்குவதில்லை. வீண் பொழுது போக்குவதால் ஏற்படும் ஊர்ச் சண்டைகளை விலைக்கு வாங்குவதில்லை. எப்படியென்றாலும் படித்தவளல்லோ.

'ஓள்! ள... நான் உன்ரை நன்மைக்குத்தான் சொல்லிறன். நீ ஒருக்காச் சோதினை எடுத்திட்டாய்தானே. அது போதும். எனக்கும் வயசு போகுது. நீயும் படிச்சது போதும் நான் ஒரு சம்பந்தம் பேசி எல்லாம் முற்றாக்கிப் போட்டன் சின்னஞ் விஷயத்தை முடிச்சிடலாம் என்று பார்க்கிறன்.

பூமணிக்குத் தெரியும் தகப்பன் நினைத்ததைச் சாதிக்கும் முரட்டுப் பிடிவாதக்காரர் என்று.எல்லாம் முற்றாக்கிப்போட்டன் என்கிறார்.சி...!

எவ்வளவு கஷ்டப்பட்டுப் படிச்சன் இப்ப எல்லாம் முடிஞ்சது'.

'என்ன பிள்ளை யோசிக்கிறாய்! நான் என்ரை பிள்ளைக்குத் தீங்கு செய்வனே நல்ல பொடியன். தொழில் பிழையில்லை. மினிபஸ் ஓடினாலும் தானும் தன்ரைபாடும். அது எனக்குப் பிடிச்சுது'

பூமணிக்கு ஜீரணிக்கமுடியவில்லை.

பிள்ளை என்ரை ஆட்களுக்கும், அம்மாவின்ரை ஆட்களுக்கும் சொல்லிச் சின்னதாக கலியாணவீட்டை முடிச்சிடுவம். ஏன் வீண் செலவு.

பூமணிக்குப் புரிந்துவிட்டத. இது எப்படியோ கரை சேர்ந்தால்போதும். சீதனம், ஆதனம் இல்லாமலே.. தனக்குள்ளே அழமுடியுமே தவிர சொல்ல முடியாத நிலை.

தனக்குப் பிடிக்கவில்லை என்றால் தன் உயிர மாய்த்துக் கொள்ளும் வழி ஏனோ பூமணிக்குப் பிடிக்கவில்லை. தன் தாய் இறந்தபோது வேறு கல்யாணம் கட்டித் தன் சுகத்தைக் கவனிக்காமல், என்னுடைய சுகத்தையே பெரிதென நினைத்து வாழ்ந்த தந்தையை அநாதையாக்குவதா..?

சின்னத்தம்பியரும், புரோக்கரும் தாங்கள் நினைத்தபடி கல்யாணத்தை வெற்றிகரமாக முடித்துவிட்டார்கள்.

'அண்ணை மருமகனிடம் தாயில்லாப்பிள்ளை அன்பாய், ஆதரவாய் இரு தம்பி என்று சொல்லண்ணை'

'அதெல்லாம் நான் சொல்லிப்போட்டன். நீ பயப்படாதை. நான் போய்விட்டு வாறன்'

பூமணிக்குத் தன் படிப்புக் குழம்பியதும், த எதிர் பார்ப்புக்கு ஏற்ற உத்தியோக மாப்பிள்ளை கிடைக்கவில்லை என்ற கவலை வேறு தன் தகப்பனிடம் கதைக்கமுடியாது என்பது இந்த இருபது வருட வாழ்க்கையில் அவள் அறிந்த பாடம். அவள் கோபம் திசைமாறியது.

பூமணியின் முகவாட்டம் அவள் கணவன் ராமுவுக்குப் புரியாத புதிர்.

பூமணி, பூமணி! ஏன் முகம் ஒரு மாதிரியாக இருக்குது. என்ன நடந்தது. சுகமில்லையா?...

ஏதோ முன்பின் என் முகத்தைப் பார்த்தவர் போல் பூமணி சினத்துடன,

'என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம்' உங்களிட்டைக் காசிருக்கலாம். நாங்கள் ஏழைகள் தான் என்ரை ஐயாவுக்கு காசில்லை, பெண் வீட்டில இருக்குதென்ற கவலை அதைச் சாதகமாக்கி'... தொடர்ந்து பேச முடியாமல் அழுகிறாள் அவள் கனவுகள் கலைந்து...

'அப்ப .. உங்களுக்கு இதில் விருப்பமில்லையோ, முன்பே சொல்லியிருக்கலாம் தானே. இப்ப கவலைப்பட்டு ஏன் இரண்டு பேரின் வாழ்க்கையையும் கெடுத்து'...

'யார் யாருடைய வாழ்க்கையைக் கெடுத்தது. என்ரை வாழ்க்கையைத் தான் எல்லோரும் சேர்ந்து கெடுத்திட்டு... கல்யாணத்திற்கும் ஒரு தகுதி வேணும். அதே ஏற்றத்தாழ்வு இருந்தால் குடும்பமே குலைந்துதான் போகும்'.

இனிக் கதைத்தால் பிரச்சினைதான் நாளைக்குப் பார்ப்பம். இதென்ன பிள்ளையார் பிடிக்க குரங்காய்ப் போச்சு. ராமு தன்னை அடக்கிக் கொண்டான்.

தெரிந்த சிலர் வந்தபோது பூமணி கலகலப்பாய்ப் பழகினாள். சமைத்தாள். உணவு பரிமாறினாள். ராமு சிறிது மாற்றம் இருப்பதாக உணர்ந்து அணுகியபோது பழைய பல்லவிதான். வெட்கிப் போனான் ராமு.

பூமணி...! என்று ராமு அழைத்தபோது ஏன் என்று கேட்காதவள் போல இருந்துவிட்டாள். ஆழ் கடலின் ஆழம் கண்டாலும் பெண்ணின் அடிமன ஆழம்காண முடியாதென்று பேசுவதைத் தான் நினைக்கத் தோன்றுகிறது.

பூமணியின் தோளைத் தொட்டதும் ஏதோ தீ பட்டவள் போல ஒதுங்கி..

'நீங்கள் உண்மையான ஆம்பிளை என்றால் என்னைத் தொடவேண்டாம். உடலை மட்டும் நேசிக்கக்கூடாது. உள்ளமும் விரும்பித்தான் ஒரு செயலைச் செய்யவேணும்'

பூமணியின் வார்த்தைகள் ராமுவின் தன்மானத்தைக் கிளப்பிவிட்டன. நீ ஒரு ஆம்பிளையோ என்று கேட்கிறாளே...ம்... நான் ஆம்பிளை தான், நான் ஆம்பிளை தான் என்று காட்டுறன்'— மனநிம்மதியின்றிச் சாய்ந்தவன் உறங்கிப் போனான்.

அடுத்த நாள் காலையிலே 'பூமணி! நான் வேலைக்குப் போட்டு வாறன்' என்ற குரல் சின்னத்தம்பியரையும் எழுப்பிவிட்டது.

'என்ன தம்பி மூன்று நாள் முடியப் போகலாம் தானே. யாரும் பார்த்தாலாவது ஏதாவது சொல்லுவினம்'.

'இல்லை நான் போயிட்டு வாறன் பிறகு வேறு றைவரைப் போட்டிடுவினம்'.

**- ந. பார்த்திபன் -**

சின்னத்தம்பியாருக்கு தன் மருமகனின் உழைக்கும் ஆர்வத்தை நினைக்கச் சந்தோஷமாகத்தான் இருந்தது.

பூமணி! என்ன இப்பத் தான் எழும்புறியோ தம்பி வேலைக்குப் போகுது தேத்தண்ணிகூடக் குடிக்கேலைப் போல கிடக்கு'.

பூமணிக்கும் தகப்பனின் குணம் தெரியும். 'அவர் இன்றைக்கு விரதம். மினிபஸ்ஸோடு கோயிலுக்குப் போய் குளிச்சுக் கும்பிட்டுத் தான் சாப்பிடுவார்'—

'அப்ப சரி. அது பொடியன் ஆயிரமாயிருந்தாலும் படிச்சது. பழக்க வழக்கத்திலேயே தெரியுதுதானே'.

ராமு வேலைக்குப் போகாமல் வீட்டிலே இருந்தால் தனக்குப் பைத்தியம்தான் பிடிக்கும் என்ற நினைவுடன் போனதும் மினிபஸ் முதலாளி,

'ஏன் தம்பி ஆறுதலாய் வந்திருக்கலாம்தானே! இப்ப என்ன அவசரம். மற்றவை என்னிலைதானே கோவிப்பினம்' என்று எவ்வளவோ சொல்லியும் ராமு பிடிவாதமாக நின்றதால் [illegible]ஸைக் கொடுத்துவிட்டார். இவர்களுடைய ஆதரவும் இருந்துதானே இவ்வளவு நாளும் வாழ்ந்தேன். நானும் படித்து வேறு வேலை கிடைக்காமல் இந்த வேலையைத் தொடங்கி எனக்கு உணவளித்து உறுதுணையாயிருந்த இந்த வாகனத்தின் மீது ஆணை! இனி அவளைத் தொடமாட்டேன்.

தன் வாகனத்தின் மீது அடித்துச் சத்தியம் செய்தான். 'எனக்குத் துணை தேவைதான். ஆனால் அது மானத்தோடு கௌரவத்தோடு' தன் வேதனையான இறுதியான ஆனால் உறுதியான முடிவை எடுத்துக் கொண்டான்.

★ ★ ★

பூமணிக்குத் தகப்பன் சொன்ன படித்தவர் என்றது உண்மையாக இருக்குமோ. எதற்கும் அவருடைய பெட்டியைப் பார்ப்போம். இனிப் பின்னேரம்தானே வருவார்.

பெட்டியைத் திறந்து உள்ளிருந்தவையை வெளியே எடுக்கும்போது சரம், சேட், காற்சட்டை, பெற்சீற், பைல்...ம் பிறகென்ன.

சில விளையாட்டு சேட்டிபிக்கெற்றுடன், க. பொ. த. சாதாரண பரீட்சையில் 5C, 3S, க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் 3B, 1C என்றும் இருந்தது.

இதென்ன இரண்டாக மடிக்கப்பட்டிருக்கிறது ஏதேனும் உறுதியோ?

பூமணிக்கு அதை விரித்துப் பார்த்தபோது நம்பமுடியாத ஆச்சரியம் கண்களிலிருந்து கண்ணீர் நதி ஓடுவதுபோல... கலைமாணி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்றதைப் பார்த்தே அவள்... 'என்னை விடப் படித்தவர் என் கணவர் . அவர் பண்பிலிருந்தே நான் புரிந்திருக்கவேண்டும்.'

'தொட்டுத் தாலிகட்டி எல்லா உரிமையும் இருந்தும் என்னைத் தொடாமல் போனாரே...அவர் பண்பு......, படிப்பு...'

'தான் பாவி... அவரிடமே கேட்டிருக்கலாமே... என் அவசரபுத்தி அவரை எவ்வளவு புண்படுத்தியிருக்கும். பாவம்... அவர் எப்படி வேதனைப்பட்டிருப்பார். இப்பவே அவரைப் பார்க்கவேண்டும். அவரிடம் நான் மன்னிப்புக் கேட்க வேண்டும்.'

'நல்ல காலம் இப்பவாவது தெரிந்ததே. இன்னும் நாளாயிருந்தால் அவரை எவ்வளவு உதாசீனம் செய்திருப்பேன்.'

பூமணி ஒரு புறம் வேதனைப் பட்டாலும்... மறுபுறம் தனக்குள்ளே பொங்கிப் பூரிக்கின்றாள். தன்னையே அர்ப்பணித்து அவனை அடையப் போகின்றாள்.

இரவை நினைத்து, ஏங்கிக் கனவுகளில், கற்பனைகளில் மிதந்தவள்...தகப்பன் கதைத்துக் கொண்டு வரும் சத்தம் சிந்தனையைக் கலைக்கிறது.

இப்போது எதையும் சொல்லக் கூடாதென நினைத்தவளாய், உணவு பரிமாறினாள். [illegible] வலை செய்த களைப்பில் [illegible]

தன் பாதங்களில் சூடான நீர்த்துளிகள் விழும் உணர்வில் ராமு கண் விழித்த போது, அவன் பாதங்களில் முகம் வைத்து பூமணி அழுவதைக் காண்கிறான்.

ராமு திடுக்கிட்டு, 'பூமணி நடந்ததை மறந்திடு; நானும் உன் மனநிலையை அறியாமல் புரோக்கரின் பேச்சை நம்பி இந்தக் கலியாணத்தை முடிச்சிட்டன். உன் எதிர்பார்ப்புக்கு நான் இல்லை என்ற பின் நாம் ஒன்றாயிருக்கக் கூடாதென நினைத்தேன். உனது வாழ்க்கையை நினைச்சுத் தான் என்ன செய்வதென்று தெரியேல்லை. நான் உன்வாழ்க்கையைக் களங்கப்படுத்தி விட்டேன். புரோக்கரிடமும், உன் அப்பாவிடமும் பேசி எழுத்தையே இல்லாமல் செய்கிறேன். அதுவரை அழாதே'

'ஐயோ, என்னை மன்னிச்சிடுங்கோ...நான் எல்லோரையும் போல உங்களையும் தொழிலை வைச்சு மதிச்சிட்டன். படிப்பு, உத்தியோகம் என்பது எங்களைப்போலப் பெண்களுக்குக் கனவாக, இலட்சியமாக இருந்ததால உங்களை வருத்தி விட்டேன். என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ...' கதறுகின்றாள் பூமணி.

'பூமணி நானும் படித்திட்டு வேலைக்கு அலைந்தேன். கிடைக்கேல்லை. எல்லோரும் வெளிநாடு போனாங்கள். அதற்கும் எனக்கு வசதியிருக்கவில்லை. இப்ப இந்தத் தொழிலே பிடிச்சிட்டுது. வேறு வேலையும் கிடைக்கேல்ல கலியாணமும் அதற்கிடையில் முற்றாகி... இன்று இப்படியாகி விட்டது.'

'என்னை மன்னிச்சிட்டேன் என்றொரு வார்த்தை சொல்லுங்கோ, என் பேராசை என்னை மயக்கிவிட்டது'

'சரி, சரி அழாதே நீ மட்டுமல்ல. இப்ப உள்ள பெண்களே படிச்ச, உத்தியோகம் பார்க்கிற. அழகானவன் என்றதெல்லாம் பார்த்து...... சமுதாயமும் அதற்கு தூண்டுகோலாகிறது. அது உன் குற்றமல்ல'

பூமணி அவன் பாதங்களிலிருந்து மெல்லிய கொடி தன் கொழுகொம்பில் படர்வதைப் போல தழுவுகிறாள்.

அவளின் போக்கைப் புரிந்து கொண்டு ராமு 'பூமணி நீ அவசரப்பட்டாய், நானும் அவசரப்பட்டேன். நீங்கள் ஆம்பிளையென்றால் என்னைத் தொடவேண்டாம் என்றதும் நான் அதை மறக்கமுடியாமல் துடித்தேன். வேதனைப் பட்டேன். எனக்கு வாழ்வளித்து, உணவளித்த என் வாகனத்தின் மீது தொட்டுச் சத்தியம் பண்ணிவிட்டேன். நான் ஆம்பிளைதான் இனி உன்னைத் தொடமாட்டேன். என்னை மன்னித்துக் கொள்' எதிர்பாராத இந்தப் பதிலினால் பூமணி அதிர்ச்சியுற்று உறைந்து போனாள்.

(யாவும் கற்பனை)

சஞ்சீவி சிறுகதை

## சிதைந்துவிட்ட கோபுரம்

பள்ளிவயதின் பரிதாப
ஆசைகள்
எண்ணியிருந்த எத்தனை
கனவுகள்
கண்ணில் நீர் வழியும்
கற்பனைக் கோபுரங்கள்
எல்லாம் சிதைந்தாலும்
இன்றும் என் உயிர்
இருப்பது
உன் நினைவால்தான்!

- சிவானந்தனருள்

★ ★ ★

## வளம் பல!

அலை வளம்
கலை வளம்
மலை வளம்
மண் வளம்
நீர் வளம்
நில வளம்
நதி வளம்
மதி வளம்
மனித வளம்
என
வளம் பல மலிந்த
அந்தப்
பழம் பெரும் பதியில்
மன வளம் என்பது
மருந்துக்கும் இல்லையே!

- சி. சதாசிவம்

## ★ வாசகர் தராசு ★

### நல்லதோர் வழிகாட்டி!

சனிக்கிழமை எப்போது வரும் என்று காத்து இருந்து சஞ்சீவியை விரும்பிப்படிக்கும் வாசகன் யான்.

சஞ்சிகையில் வரும் கதை, கட்டுரை, கவிதை எல்லாம் பலே ஜோர்.

அருமையான அம்சங்களை அழகாக வெளியிடுகிறீர்கள்.

ஒரே ஒரு குறை. எழுத்துப்பிழைகள் சில சமயம் நுழைந்து விடுகின்றன.

நமது எதிர்கால சந்ததி நல்ல முறையில் வளர்ந்து வளம்பெற பத்திரிகை நல்லதோர் வழிகாட்டி.

— எஸ். பரந்தாமன்,

### இதய நோய் தீர்க்கும் இதழ்!

மற்றவர் மனமறிந்த வாராந்த இதழே
கற்றவர் மனங்கவரும் கனிபோன்ற இதழே
நற்றமிழ் வல்லார்க்கும் விருந்தான இதழே
வற்றாத அருவிபோல வளஞ் சுரப்பாய் நாளும்!

நாள் தோறும் புதினங்கள் நாம் கண்ட போதும்
நீ சொல்லும் புதினங்கள் நெஞ்சமதில் நிற்கும்
சூரிய பகவான் போல் சுறுசுறுப்பாய் இயங்கும்
தூய தமிழ் சஞ்சிகைதான் சஞ்சீவி என்பேன்!

தமிழ் இதய நோய் தீர்க்கும்
சஞ்சீவி இதழே!
தண்டமிழில் முழக்கமிடும்
என்னருமை இதழே!
உன்னுடைய எழில் வண்ணம்
உலகினையே மயக்கும்
உலகமெலாம் உணர்வு பெற
ஓங்கிடுவாய் நீயும்!

ம. ஜெயராமசர்மா

### கலை வளர்த்திடும் சஞ்சீவி!

வாரம் ஒரு தடவை அறிவை – வாரி
வழங்கும் உன் சேவை வளர்க!
நேரம் தவறாமல் எம் வாசலில் நிற்கும்
சஞ்சீவியே – உன் சஞ்சிகை எங்கள்
இலைமறை காய்களாய் இருந்திடும்
இள நெஞ்சங் ளை வெளிக் கொணர்ந்து
கலை வளர்த்திட உதவிடும் சஞ்சீவி!
வாழ்க உன் புகழ்! வளர்க உன்சேவை!

— வேலணையூர் கே. ஆனந்தன்


# ஆங்கிலம்
## பேச வேண்டுமா?

கூச்சமின்றி சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டுமா? பிறரைப்போல் நீங்களும் ஆங்கிலம் சரளமாகக் கூச்சமின்றிப் பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள்! புதுமையான முறையில் தபால் மூலம் தமிழில் ஆங்கிலம் படியுங்கள். எளிய அஞ்சல் வழிப் பயிற்சி தமிழ் தெரிந்த யாவரும் சேரலாம்.

**Bright Training Centre இல் படித்த மாணவர்களின் கருத்து**

''தபால் மூலம் ஆங்கிலம் கற்று ஒருபோதும் கதைக்க முடியாது எனச் சிலர் சொல்லக் கேட்டிருக்கின்றேன். ஆனால் உங்களின் உளவியல் ரீதியில் அமைந்த பாடங்கள் எனது இலட்சியத்தை அடையவும், பய உணர்வையும் அகற்றி விட்டது''

**செல்வி பாத்திமா சனிமா,**
எலுவில, பாணந்துறை.

''தங்களின் ஆங்கிலக் கல்வி விருத்தி யாழ் மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. நானும் உங்களின் பலாபலன்களைப் பெற்ற மாணவியரில் ஒருவர்''

**செல்வி பிரேமாவதி செல்லையா,**
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

''இப்போது எனக்கு ஆங்கிலம் பேச முடியும் எனும் மனத்திடத்தை உங்கள் தபால் மூலம் கல்வி ஏற்படுத்தியுள்ளது.

**செல்வி நிர்மலா தங்கவேலு,**
அப்புத்தளை.

''ஆங்கிலத்தை இலகுவாக மாணவர்களின் தராதரத்திற்கேற்ப ஆரம்பத்தில் இருந்து தபாலில் கற்றுக் கொள்ளக் கூடிய சிறந்த திட்டம் உங்களுடையதே''

**செல்வன் எஸ். எம். ராசா,**
ஏழாலை வடக்கு, ஏழாலை.

''பிறைட் றெயினிங் சென்டரின் ஆங்கிலப் பாடப்பயிற்சி மூலம் நான் நல்ல பயன் அடைந்துள்ளேன்''

**செல்வன் ரி. கேதீஸ்வரன்,**
457, கே. கே. எஸ். றோட், கோண்டாவில்.

''குறுகிய காலத்திற்குள்ளே ஆங்கிலக் கல்வியை திறம்படக் கற்றுக் கொடுக்க உங்களின் பிறைட் றெயினிங் சென்டரால் தான் முடியும்''

**செல்வன் ச. செல்வகுணச்சந்திரன்,**
ஓடக்கரை, பருத்தித்துறை.

எமது கல்வித்திட்டம் பற்றி மேலதிக விபரங்கள் அறிய முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

**BRIGHT TRAINING CENTRE**
P. O. Box 162, COLOMBO.
(C/2353)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பூச்சி பற்றி ஆராய்ச்சி நடத்த பாறையில் தவமிருந்த முதியவர்

பிரெஞ்சு நாட்டின் ஒரு பள்ளத்தாக்கில் ஒரு பாறையின் மீது ஒரு முதியவர் விடியற்காலையில் இருந்து அமர்ந்திருக்கிறார்.

திராட்சைத் தோட்டங்களில் பணியாற்றச் செல்லும் பெண்கள் அவருக்கு வணக்கம் சொல்லிவிட்டுப் போகிறார்கள்.

மாலை அவர்கள் வீடு திரும்பும் போதும் அவர் அதே இடத்தில் அமர்ந்து எதை எதையோ கூர்ந்து கவனித்த வண்ணம் இருந்தார்.

அந்தப் பெண்கள் பரிதாபத்துடன் "கடவுள் தான் இவரைக் காப்பாற்ற வேண்டும்" என்று கூறியவாறு செல்கிறார்கள்.

அப்படி அவர் என்ன செய்து கொண்டிருந்தார்? அவர் யார்?

பத்தாண்டுகளாகத் தொடர்ந்து பூச்சிகளின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்துப் புகழ்பெற்ற 10 நூல்களை எழுதிய மேதை அவர்.

இயற்கையின் இரகசியங்களைத் தெரிந்து கொள்வதற்காக அவர் பொறுமையுடன் உழைத்தார்.

அவருடைய பெயர் ஜே. எச். பேபர் (Faber, 1893 – 1915)

பூச்சிகளின் சில நடத்தைகள் உள்ளுணர்வினாலும் வேறு சில பகுத்தறிவுடனும் சிந்தித்ததனாலும் தோன்றுகின்றன என்பதைக் கண்டு பிடிப்பதற்காக அவர் மாதக்கணக்கில் ஒரே இடத்தில் கண் துஞ்சாது, மெய்வருத்தம் பாராது அமர்ந்து பூச்சிகளைக் கண்காணித்தார்.

இது, விஞ்ஞானிகளின் வரலாறு, மலர்கள் தூவிய பாதையன்று; செந்நீரும் கண்ணீரும் வியர்வையும் பெருக்கெடுத்து வரும் மலைப்பாதை என்பதைக் காட்டுகிறதுஅல்லவா! ★

# வானில் இருந்து ஓர் உதவிக்கரம்!

1982 அக்டோபர் 9 ஆம் திகதி, அத்திலாந்திக் கடலின் நடுவில் கொன்ஸோ (Conso) என்ற படகு கடுமையான புயலில் சிக்கித் தவித்துக்கொண்டு இருந்தது.

ஓர் அலை அதைப் புரட்டிக் கவிழ்த்தது.

அதில் இருந்த மூன்று மாலுமிகளும் படகின் அடித்தளத்தில் ஓர் ஓட்டையிட்டு அதன் வழியாக காபினுக்குள் நுழைந்து அங்கிருந்த ரேடியோ கருவி மூலம் உதவி கோரி செய்தி விடுத்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது வானில் போர்த்துக்கலுக்குப் பறந்து சென்று கொண்டிருந்த ஒரு பயணி விமானத்தின் பைலட்டின் காதில் இந்த மெலிதான அபயக்குரல் விழுந்தது.

அவர் உடனே நியூயோர்க்கில் உள்ள அமெரிக்கக் கடற்கரைக் காவல் மீட்பு மையத்துக்குச் செய்தி அனுப்பினார்.

அங்கிருந்த ரொபர்ட் கோயட்ஸ் (Robert Coetz) என்ற அதிகாரி விமானம் இருந்த இடத்தை முதலில் குறித்துக் கொண்டார்.

பின்னர் விண்ணில் மிதந்து கொண்டிருந்த ரஷ்ய பயண உதவி செயற்கைக் கோள் 'கொஸ்மோஸ் 1383' இன் உதவியை நாடினார்.

கடலில் செல்லும் படகுகளில் அவசரகால இருப்பிடம் காட்டும் வானொலி அலை பரப்பி (Emergency Position Indicating Radio Beacon-EPIRB) என்ற கருவி உள்ளது.

'கொஸ்மோஸ் – 1383,' அக்கருவிகளில் இருந்து வருகிற அவசர உதவிக்கோரிக்கைச் சிக்னல்களைக் கண்காணித்துக் கொண்டேயிருக்கும்.

அவற்றைத் தானாகவே வட கோளார்த்தத்திலுள்ள தரை நிலையங்களுக்கு அஞ்சல் செய்து கொண்டே இருக்கும்.

தரை நிலையங்களில் உள்ள கம்பியூட்டர்கள் அந்தச் சிக்னல்களின் அதிர்வெண்களில் டொப்ளர் விளைவால் ஏற்பட்ட மாற்றங்களையும் செயற்கைக் கோளின் இருப்பிடத்தையும் வைத்து கணக்கிட்டு படகுகளின் இருப்பிடத்தைத் துல்லியமாகக் கணக்கிட்டு விடும்.

கோயெட்ஸ், இல்லிநோயிலில் இருந்த ஸ்கொட் விமானப்படைத் தளப் பயணக் கட்டுப்பாடு மையத்துடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார்.

9-ஆம் திகதி மாலை அத்திலாந்திக் கடலுக்கு மேலே ஆயிரம் கிலோ மீற்றர் உயரத்தில் பறந்து சென்ற 'கொஸ்மோஸ்– 1383' ஒரு கப்பலின் அபயக்குரலை (Mayday) வாங்கி அதை ஸ்கொட் தளத்திற்கு அஞ்சல் செய்திருந்தது.

அங்கிருந்த கம்பியூட்டர்கள் அந்தக்கப்பல், பயணி விமானம் இருந்து இடத்தில் இருந்து தெற்கே சுமார் 160 கிலோமீற்றர் தொலைவில் இருப்பதாகக் கண்டுபிடித்தனர்.

10-ஆம் திகதி காலை 7 மணிக்கு மீட்பு விமானங்களும் கரைக்காவல் படைகளும் கொன்ஸோ படகில் இருந்து மூவரையும் காப்பாற்றினர்.

விபத்தில் சிக்கிய படகுகளைக் கண்டுபிடித்து மாலுமிகளை மீட்பதில் செயற்கைக் கோள் ஒன்றின் உதவி வெற்றிகரமாகப் பயன்படுத்தப் பட்ட சம்பவம் இதுவே முதல் தடவை.

இன்னொரு சம்பவம்:

1982, செப்டம்பர் 9 ஆம் திகதி ஒரு சிறிய விமானம் மூன்று பயணிகளுடன் வட அமெரிக்காவின் காட்டுப் பகுதியில் காணமற்போயிற்று.

மீட்பு விமானங்கள் நூற்றுக்கணக்கான தடவைகள் அப்பகுதியில் பறந்தும் காணமற் போன விமானத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

'கொஸ்மோஸ்-1383' இன் உதவி நாடப்பட்டது.

விபத்துக்குள்ளான விமானத்தின் அவசர உதவிக் கோரிக்கை அலை பரப்பியில் இருந்து வெளிப்பட்ட மங்கலான சிக்னல்களைப் பதிவு செய்து அஞ்சல் செய்தது.

கம்பியூட்டர்கள் அந்த விமானம் விழுந்து கிடந்த இடத்தைக் கணக்கிட்டுத்தந்தன.

மீட்பு விமானங்கள் உடனே சென்று மூன்று பயணிகளையும் உயிருடன் மீட்டு வந்தன.

கொஸ்மோஸ்– 1383 30–06–1982இல் ஏவப்பட்டது. அடுத்து கொஸ்மோஸ்– '1447' செற்கைக்கோளை ரஷ்யா 24.03.1983 இல் ஏவியது. அதன் பின்னர் அமெரிக்காவும் ஏவியது.

இன்று வானில் பல செயற்கைக் கோள்கள் பூமியில் சஞ்சரிக்கும் ஊர்த்திகளைக் கண்காணித்துக் கொண்டிருக்கின்றன.

அவை பூமியின் ஒவ்வொரு புள்ளியையும் 4 மணிக்கு ஒரு முறை கடந்து செல்கின்றன.

தரை நிலையங்கள் உலகின் பல பாகங்களிலும் நிறுவப்பட்டு வருகின்றன.

கடலிலும் தரையிலும் மக்கள், வானில் ஓர் உதவிக் கரம் காத்திருக்கிறது என்கிற தைரியத்துடன் பயணம் செய்ய முடிகிறது. (எ)

## ஒரு நாள் வாழும் 'மே' பூச்சி

மே என்ற வகைப் பூச்சி பிறந்த ஒரே நாளில் இறந்து விடுகிறது.

அப்படியானால் அப்பூச்சி எப்படி இனப் பெருக்கம் செய்கிறது?

முழு வளர்ச்சி அடைந்த 'மே' பூச்சி (Adult) ஒருசில மணிநேரங்கள் முதல் இரண்டு நாட்கள் வரைதான் உயிர் வாழும்.

ஆனால் இவை லார்வா பருவத்தில் மூன்று ஆண்டுகள் இருக்கின்றன.

முழு வளர்ச்சியடைந்த பூச்சிகள் ஒரு சில மணிநேரத்தில் இணைகூடுகின்றன.

இவை கூட்டம் கூட்டமாக நிலைகளுக்கு சுமார் 15 மீற்றர் உயரத்தில் பறக்கின்றன.

பறக்கும் போதே இணை கூடி, ஒரு சிலமணி நேரத்திலேயே நீரின் மேல்முட்டைகளும் இடுகின்றன. ★

# சார்லி சப்ளின் ஏற்படுத்திய 'விசில்' சப்தம்!

சார்லி சப்ளினிற்கு விருது தேடித் தந்த படம் 'சிற்றி லைற்ஸ்' இதில் ஒரு அப்பாவி கோமாளி வேடத்தில் அவர் நடித்தார்,

கதை வருமாறு;

அவள் ஒரு கண்பார்வை அற்ற பூவிற்கும் பெண். அவள் மீது இரக்கம் கொள்கிறார் சப்ளின். அவளும் சப்ளின் ஏதோ பெரிய பணக்காரர் என நினைத்து பாசம் கொள்கிறாள்.

அவள்மீது அன்புகொண்ட சப்ளின் ஒரு பணக்காரரிடம் இருந்து பணத்தைத்திருடி, பூக்காரியின் கண் சத்திர சிகிச்சைக்கு அளிக்கின்றார்.

அவள் பார்வைபெற்று மீளுமுன் சப்ளின் பணம் திருடியமைக்காக சிறைசெல்கின்றார்,

ஆண்டுகள் கடந்தன. பூக்காரி தெருவில் ஒரு கோமாளி ஓடுவதைக் காண்கிறாள். அவனது கோமாளித்தோற்றம் சிரிப்பை வரவழைக்கின்றது.

சிறுவர்கள் அவனைத் துரத்தி விளையாடுகின்றனர். அதனால் துன்புறுகின்றான் அக்கோமாளி.

சிறுவர்களால் துன்புறுத்தப்படுதலைக்கண்டு இரக்கம் கொள்கிறாள் பூக்காரி. சப்ளினிற்கு நாள்தோறும் ஒவ்வொரு நாணயத்தைப் பிச்சையாக வழங்குவாள்.

அவள் சப்ளினின் கையைத் தொட்டு நாணயம் வழங்குகையில் அது ஒரு பழக்கப்பட்ட கை என்பதை உணர்கின்றாள். ஆனால் அவள் கண் பார்வைபெற உதவியவர் ஒரு பணக்காரர் என நினைக்கின்றாள் பூக்காரி.

வெகு விரைவில் சப்ளினே தனக்குதவிய மனிதன் என்பதை உணர்ந்தாள், பெரும் பணக்காரர் என நினைத்தவளுக்கு சப்ளின் ஒரு பைத்தியக்காரனாக இருந்தது அதிர்ச்சி அளித்தது.

பூக்காரி பிச்சைக்காரனாக இருந்த சப்ளினை மணக்கத் தயாராக இல்லை. தன் கண்ணை மறந்தாள்.

ஆம். கண்ணற்றபோது தோன்றும் காதல் நிலைக்காது என்பதை எடுத்துக்காட்ட எடுக்கப்பட்ட படம்தான் 'சிற்றி லைற்ஸ்'

இதில் அப்பாவிக் கோமாளிப் பைத்தியக்காரனாக சப்ளின் நடித்த ஒரு நகைச் சுவைக்காட்சி அனைவரையும் கவர்ந்தது.

... ... ஒருவிதத்தில் சப்ளின் தவறுதலாக விசில் ஒன்றை



சார்ளி சப்ளின்

விழுங்கிவிட்டார். பின்னர் அவருக்கு விக்கல் ஏற்பட்டது.

ஒவ்வொரு விக்கலுக்கும் ஒவ்வொரு விசில் சத்தம் வெளிப்பட்டது. இதனால் விருந்தின் இசை நிகழ்ச்சி பாதிக்கப்பட்டது.

அவரது விசில் சத்தத்திற்கு நாய்கள் அவரைச் சூழ நின்று ஆரவாரம் செய்தன. வண்டிகள் சவாரி கிடைத்துவிட்டதாக நினைத்து மாளிகை வாசலை அடைந்தன.

இந்த நிகழ்ச்சி தியேட்டரில் சிரிப்பை அதிரவைத்தது.

சப்ளினிற்கு பின் பலர் சப்ளின் வேடமிட்டு நடித்தனர். ஆனாலும் சார்ளி சப்ளினின் நிலைக்கு யாரும் வரவில்லை.

— தி. தவபாலன்

## தாகூர் விரும்பாத பாடசாலைக் கல்வி முறை

சாந்தி நிகேதனத்தைக் கவியரசர் தாகூர் ஏன் உருவாக்கினார்?

மிகச் சிறிய வயதிலேயே தன்னைக் கட்டுப்படுத்தித் திணிக்கும் கல்வியின் மேல் ரவீந்திரநாத் தாகூருக்கு வெறுப்பு ஏற்பட்டது.

பள்ளி அறைகளுக்குள்ளே சிறைச்சாலைகளில் முடங்கியதைப் போல அடைபட்டு கல்வி பயின்றால் சிந்தனைச் சிறகுகள் எப்படி வான வீதியில் வட்டமடிக்க முடியும்? —

இப்படிப் பொருமினார்தாகூர்.

தாகூரின் பெற்றோர் வசதி வாய்ந்தவர்கள்.

அதனால் அவர்கள் தங்கள் மாளிகையிலேயே தனி ஆசிரியர் வைத்து தாகூருக்குக் கல்வி போதித்து வந்தார்கள்.

குழந்தை தாகூர் மனதிலே ஆடவேண்டும், பாடவேண்டும் என்று ஆசை வரும் நேரங்களில் ஆசிரியர் வந்து உட்கார்ந்து ஏட்டுப் படிப்பைத் தொடக்கிவிடுவார்.

இது குழந்தை தாகூருக்கு எரிச்சலைக் கொண்டு வந்து கொடுத்தது.

ஆசிரியர் இன்று ஏதாவது வேலையினால் வராமல் இருந்து விடமாட்டாரா என்று ஏங்குவாராம்.

ஆனால் ஆசிரியரோ விடாக் கண்டராக வந்து நிற்பாராம்.

சில சமயம் ஆசிரியர் வரவேண்டிய நேரம் அடைமழை கொண்டிருக்குமாம். இந்த மழையில் நிச்சயம் ஆசிரியர் வரமாட்டார் என்று குதூகலத்துடன் தாகூர் ஜன்னலில் ஏறி நின்று மழைபொழிவதைப் பார்த்துக் கொண்டு நிற்பாராம்.

ஆனால் என்ன சோதனை!

அவ்வளவு பெரிய மழையிலும் ஒரு குடையில் பாதி நனைந்தவாறு ஆசிரியர் வந்து நிற்பாராம்.

இப்படிக் கட்டுப்படுத்தித் திணிக்கும் கல்வியை இளமையில் தாகூர் வெறுத்ததன் பலன் தான் இயற்கையோடு ஒன்றி மனம் இசைகிற நேரம் விரும்புகிற கல்வியைப் பயிலும் ஒரு 'சாந்தி நிகேதன்' உருவாகக் காரணம். ★

## சிகரெட் பிடித்தால் முதுமை வராதாம்!

கூபாச்சி நகருக்கு முதல் முதலில் புகையிலையைக் கொண்டுவந்தவர் ஒரு துருக்கியர். சந்தை நாளில் அவர் தமது மூட்டையை அவிழ்த்து ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டார். மக்களை அழைத்தார்.

குபாச்சி மக்களுக்குப் புகையிலை புகையைப்பற்றி விவரம் ஏதும் தெரியாது. வியாபாரியின் கிட்டப் பலர் வந்தார்கள்.

எரிந்துகொண்டிருந்த சிகரெட்டை வாங்கித் தாங்களும் ஒரு தம் இழுத்தார்கள். இருமினார்கள். போய்விட்டார்கள். நீண்ட நேரம் ஆயிற்று. யாரும் துருக்கியரின் புகையிலையை வாங்கவில்லை. துருக்கியர் பார்த்தார்.

மீண்டும் உரத்த குரலில் புகையிலையின் மகிமைகளைப் பற்றிக் கூற ஆரம்பித்தார்: 'புகை பிடிப்பவன் எவனையும் நாய் கடிப்பதில்லை. எவனெல்லாம் புகைக்கிறானோ அவனுக்குப் பெண் குழந்தை பிறப்பதில்லை. புகைபிடிப்பவனின் வீட்டுக்கு திருடன் வரமாட்டான். புகைபிடிப்பவனை முதுமை நெருங்காது. இது சத்தியம், வாருங்கள், வாருங்கள்.

இப்போது அவருடைய வார்த்தைகளில் பலர் மயங்கினார்கள். அவரது புகையிலையை பலர் வாங்கினார்கள்.

ஓராண்டு சென்றது குபாச்சி நகரத்தான் ஒருவனுக்கு இந்தப் புகையிலையின் மகிமையெல்லாம் அநுபவத்திலே பொய் என்று தெரிந்துவிட்டது.

புகையிலை விற்கும் துருக்கியரை டெர்பண்ட் கடைத் தெருவில் கண்டான். அவரை அம்பலப்படுத்த எண்ணினான்—

'நீர் சொன்னதெல்லாம் முழுப்பொய்' என்று கத்தினான்.

ஆனால் அந்தத் துருக்கியர் சற்றும் அயரவில்லை.

அவர் அளித்த பதில் இது தான்—

'இறைவன் மீது ஆணையாக நான் கூறியதெல்லாம் உண்மைதான். புகைபிடிப்பவனை நாய் கடிக்காது என்றேன். ஏன் எப்போதும் தன் கையில் ஒரு கோலை அவன் வைத்திருப்பான். இல்லையென்றால் அவனால் நடக்கவே முடியாதே. அவன் தான் தள்ளாடித் தள்ளாடி விழுவானே. அவனுக்குப் பெண் குழந்தை பிறக்காது என்றேன். உண்மையில் அவனுக்கு ஒரு குழந்தையுமே பிறக்காதே. அவனுடைய வீட்டுக்கு திருடன் வரமாட்டான் என்றேன். இரவு முழுவதும் இருமிக் கொண்டே இருப்பான். ஆள் விழித்திருக்கிறான்போல இருக்கிறது என்று எண்ணித் திருடன் வரமாட்டான். புகைபிடிப்பவன் முதுமையை அடையமாட்டான் என்றேன். ஆம் முதுமை வருமுன்பே அவன் செத்து மண்ணாவது நிச்சயம். தெரிந்ததா?

குபாச்சி நகரத்தான் அசந்து விட்டான்.

தொகுப்பு
க. கனகராசா

## வானவெளியில் அணு உலை

ஒரு புதிய ரக அணு உலையை ரஷ்யா தயாரித்து விண்வெளியில் செலுத்தி உள்ளது.

இந்த உலை சக்தி வாய்ந்தது. நீண்டநாள் உழைக்கக் கூடியது.

இந்த அணு உலைகள் விண்வெளியில் சுற்றும் செயற்கைக் கோள்களுக்கு மின்சாரம் தயாரித்து வழங்கும்.

இப்போது செயற்கைக் கோள்களில் மின்சார உற்பத்திக்கு 'சூரிய தகடுகள்' பயன்படுத்தப்படுகின்றன. பல நேரங்களில் இந்த சூரிய தகடுகள் செயல் இழந்து விடுகின்றன.

இதனால் செயற்கைக் கோள்களும் பூமியுடன் தொடர்பு கொள்ள முடிவதில்லை.

இக்குறையைப் போக்க ரஷ்ய விண்வெளி விஞ்ஞானிகள் இப்போது செயற்கைக் கோள்களில் பொருத்தக் கூடிய அணு உலைகளைத் தயாரித்துள்ளனர்.

இப்போது ரஷ்யா சோதனை ரீதியாகத்தான் அணு உலைகளுடன் கூடிய செயற்கைக் கோளை விண்வெளிக்கு அனுப்பியுள்ளது.

இந்த முயற்சியில் அமெரிக்காவும் இறங்கி உள்ளது. ஆனால் இன்னமும் அமெரிக்கா அணு உலையுடன் கூடிய செயற்கைக் கோளை விண்வெளிக்கு அனுப்பவில்லை. ★

## 'குளுகுளு' தொப்பி!

கோடை காலம். வெயிலில் இருந்து தப்ப 'குளு குளு' தொப்பி வந்து விட்டது.

இத்தொப்பியை அணிந்து கொண்டால் 'ஜிலு ஜிலு' என்று குளிர்ச்சியாக இருக்கும்.

குளு குளு தொப்பி இங்கு வரவில்லை. அமெரிக்காவில் தான் இது விற்பனையாகிறது.

ஒரு தொப்பியின் விலை 40 அமெரிக்க டாலர். இத்தொப்பியின் உள்ளே சூரிய ஒளிச் சக்தியினால் இயங்கும் மின் காற்றாடி (Fan) ஒன்று பொருத்தப்பட்டுள்ளது.

இதை அணிந்து கொள்பவர்களுக்கு வெய்யிலின் வெப்பம் தெரியாது.

விசிறி இயங்க வேண்டாம் என்றால் தொப்பியில் உள்ள சிறிய சுவிட்சைத் தட்டி விட வேண்டியது தான் அது நின்று விடும். ★

# குத்துக் குத்தாக....

பதினெட்டாம் நூற்றாண்டு தொடக்கத்தில் குத்துச்சண்டை பிரிட்டிஷ் நாட்டில் பிரபலமாக விளங்கியது.

பிரிட்டிஷ் நாட்டில் தொடக்கத்தில் வெறுங்கை முஷ்டியை மட்டும் பயன்படுத்தினார்கள். இது கிட்டத்தட்ட ரோமன் நாட்டுமுறையில் இருந்தது.

குத்துச் சண்டை என்பது இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற முறையைக் கொண்டுவந்து உலகுக்கு அறிமுகப்படுத்தியவரும், பிரிட்டிஷ் நாட்டின் முதல் ஹெவி வெயிட் சாம்பியனும், குத்துச் சண்டை மன்னருமாவார் 'ஜேம்ஸ்பிக்' என்பவர்.

1719 ஆம் ஆண்டு முதல் தன்னிகரில்லா பேரும், புகழுடன்திகழ்ந்த இவர் குத்துச் சண்டை சரித்திரத்தின் முதல் கதாநாயகன் எனலாம்.

முதன்முதலாக 'அம்பி' தியேட்டரில் இவருடைய பெயர் தான், 'முதல் உலக ஹெவி வெயிட் சாம்பியன்' என்று அறிவிக்கப்பட்டது.

அது மட்டுமல்ல, முதன் முறையாக குத்துச்சண்டைப் பயிற்சிப் பள்ளியை தோற்றுவித்தவர் இவர். பின்னர் பல வித காட்சிச் சண்டைகளை நடத்தி குத்துச்சண்டைக் கலையை வளர்க்க அரும்பாடு பட்டு தனது திறமையைக் காட்டினார்.

மேலும் இவர் குத்துச் சண்டையின் 'தந்தை' என்று அனைவராலும் சிறப்பாக அழைக்கப்பட்டார். அதோடு எல்லாமல் ஜேம்ஸ்பிக், கம்பு, கத்தி, வாள் சண்டைகளிலும் மிகச்சிறந்து விளங்கினார். எப்போதும் சண்டை செய்வதிலும் விருப்பம் உள்ளவராகத் திகழ்ந்தார்.

அத்தோடு தன் நாட்டு ஆர்வம்மிக்க இளைஞர்களை ஊக்குவித்து பயிற்றுவிப்பதில் தலைசிறந்து விளங்கினார்.

'ஜேம்ஸ்பிக்' கின் பயிற்சிக் கழகம் நிறைய காட்சிச் சண்டைகளை நடத்தியதால் குத்துச்சண்டை பரபலமாகத் தொடங்கியது.

மேலும் மரத்திலான நான்கு முனைகளில் கயிறுகளை இணைத்து குத்துச்சண்டைக் களம் அமைக்கப்பட்டது.

அப்போது நடுவர் களத்தின் வெளியே இருப்பார். ஜேம்ஸ்பிக் 1740 ஆம் ஆண்டு இறந்தார். அவருக்கு பிறகு பிரதமசீடர் 'ஜார்ஜ்டெய்லர்' புகழ்பெற்ற குத்துச் சண்டை வீரராகத் திகழ்ந்தார்.

அதையடுத்து 'ஜாக் பிரோங்டன்' குத்துச்சண்டைகளுக்கு சட்டதிட்டங்களைத் தொகுத்ததால் இவர் குத்துச் சண்டை சட்டதிட்டத்தின் தந்தை என்றும் அழைக்கப்பட்டார். ★



இன்றைய உலகக் குத்துச்சண்டை சாம்பியன் மைக் டைஸன்

## அன்னம் பற்றி ஒரு தகவல்

பாலையும் தண்ணீரையும் பிரித்து எடுக்கும் சக்தி அன்னப்பறவைக்கு உண்டா?

உண்டு என்றுதான் இது காலவரை கூறப்பட்டு வருகிறது.

புராணங்களும் அப்படித் தான் கூறுகின்றன.

ஆனால் இன்றைய ஆராய்ச்சிப்படி இதற்கான விஞ்ஞான நிரூபணம் எதுவும் இல்லை என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ★

## பற்பசையுடன் கூடிய 'பிரஷ்'

காலையில் எழுந்து பிரஷ்ஷைக் கையில் எடுத்துக் கொண்டு பற்பசையைத் தேடும் நபரா நீங்கள்?

இனிப் பயப்படாதீர்கள். பற்பசையைத் தேடும் தொந்தரவு உங்களுக்கு வரவே வராது.

பற்பசை அடைக்கப்பட்ட டூத்பிரஷ் சந்தைக்கு வந்து விட்டது.

இந்த டூ - இன் - வண் பிரஷ்ஷை எந்த நேரத்திலும் உபயோகிக்கலாம்.

பிரஷ்ஷில் ஒரு பொத்தான் இருக்கிறது.

அதை அழுத்தினால் உள்ளே உள்ள பற்பசை சரியாக பிரஷ்ஷுக்கு வந்து விடும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் பயில்வோம்

(க. பொ. த. சாதாரண தரத்திற்குரியது)

## விஞ்ஞானம்

### விஞ்ஞான விளக்கம் தருக:

**வினாக்கள்:**

1. பால்ரின்னில் இரண்டு துவாரங்கள் இடுதல்.
2. வெயிலில் இருக்கும் பலூன் வெடிக்கிறது.
3. அதிகம் அழுவதால் மூக்கில் நீர் வருதல்.
4. காலில் நெருப்பு சுட்டால் துள்ளி விழுதல்.
5. சோறு சமைக்கும்போது கஞ்சியை வடித்து ஊற்றுவதைவிட கஞ்சியை வடிக்காமல் உவியக் காய்ச்சுவது நல்லது.
6. மாங்காயைப் பழுக்கச் செய்ய வைக்கோலுள் இட்டு வைத்தல்.
7. கோபிக்கும்பொழுது இதயத்துடிப்புக் கூடுதல்.
8. மாம்பழத்தில் எதுவித துவாரம் இல்லாதபோதிலும் அதனுள்ளே வண்டுகள் காணப்படுகின்றன.
9. பிடரியில் ஒருவருக்கு அடித்தால் அவர் இறக்கக் கூடும்.
10. கசநோய்க்கிருமிகள் பொதுவாக வெளியில் காணப்படினும் எல்லோரும் இந்நோயால் பாதிக்கப்படுவதில்லை.

**விடைகள்:**

1. ரின்பால் பேணிகளில் ஒரு துவாரம் இட்டால் பால் வெளியேறுவதில்லை. உள்ளே உள்ள பால் வெளியே வரவேண்டுமெனில் காற்று உள்ளே செல்லவேண்டும். எனவே இன்னொரு துவாரம் இட்டால் அதனூடாக வளி உள்ளேசெல்ல முதல்ஏற்படுத்திய துவாரத்தினூடாக பால் வெளியேவரும். அல்லது பெரிய துவாரம் அமைத்தாலும் பால் வெளியேறும்.

2. கோவில் திருவிழாக்களில் காலையில் பலூன்களை ஊதிக் கட்டிவைத்திருப்பார்கள். பகலில் வெயில் கூடக்கூட பலூன்கள் வெடிக்கும். வெயில் வெப்பத்தினால் பலூனுள் இருக்கும் வளி விரிவடைந்து அதன் கனவளவுகூடும். அப்போது ரப்பர் மேலும் விரிவடைய முடியாமல் வெடிக்கிறது.

3. கண்ணிலிருந்து மூக்குக் குழிக்கு கண்ணீர்க்கான் எனும் குழாய் உள்ளது. அதிக கண்ணீர் வெளிவிடும் சந்தர்ப்பங்களில் அழுதலின்போது மேலதிக கண்ணீர் அக்கான் மூலம் மூக்கினூடாக வெளியேறுகிறது.

4. ஒரு அங்கியின் இச்சையின்றிய இயக்கம் தெறிவினையாகும். இச்செயற்பாடு எமது உடலை விபத்திலிருந்து பாதுகாக்க உதவுகிறது. காலின் தோலிலுள்ள நரம்பு முடிவிடங்கள் வெப்பத்தைப் பெற்று கணத்தாக்கமாக முண்ணாணினூடாக மூளைக்குக் கடத்துவதற்கு முன்னர் முண்ணாணிலேயே திசை திருப்பப்பட்டு விளைவு காட்டியான கால்த்தசைக்குக் கடத்தப்படுகிறது. எனவே கால் சடுதியாக எடுக்கப்படுகிறது.

5. சோறு சமைக்கும்போது அரிசியிலுள்ள போஷணைப் பதார்த்தங்கள் அதாவது எமது உடலுக்குவேண்டிய கனியுப்புக்கள் விற்றமின்கள் போன்றன நீரில் சேர்ந்து கஞ்சி ஆகின்றது. இதனை வெளியேற்றுவது வீணாகும்.

6. மாங்காய் உயிருள்ள கலங்களால் ஆனது. இது சுவாசத்தின் மூலம் வெப்ப சக்தியை வெளிவிடுகிறது. வைக்கோல் வெப்ப அரிதிற் கடத்தி என்பதால் வெப்பம் வெளிவிடப்படுவதில்லை. ஆகவே இந்த வெப்பத்தில் மாங்காயிலுள்ளமாப்பொருள் வெல்லமாக மாற்றப்படுகிறது. இத்தாக்கம் வெப்பத்தினால் விரைவுபடுத்தப்படுகிறது. எனவே விரைவில் பழுக்கிறது.

7. எமது சிறுநீரகங்களின் மேல் இரண்டு அதிரினற் சுரப்பிகள் காணப்படுகின்றன. இச்சுரப்பிகள் 'அதிரினலின்' என்றஓமோனைச்சுரக்கின்றன. கோபப்படும்பேதே இவ்வோமோன் சுரக்கப்பட இதய அடிப்புவேகம் கூடுகிறது. குருதியில் வெல்லம் கூடும். தசைகளில் குருதிச் சுற்றோட்டம் கூடுகிறது. இதனால் முகமும் சிவக்கிறது. இச்செயற்பாடுகள் எம்மை ஆபத்திலிருந்து காப்பாற்ற உதவும். அதற்காக நாம் கோபத்தினால் ஆபத்தை உண்டாக்க நினைக்கக்கூடாது. மூளையின் செயற்பாடே நல்லது கெட்டதைச் செய்கிறது.

8. மாம்பூவில் தேனுக்காக வரும் வண்டுகள் பூவின் சூலகத்தினுள் இடும் முட்டையிலிருந்து உண்டாகும் வண்டுகள் வளர்ந்து வெளியேறுகின்றன.

9. எமதுமூளையில் மூளையம், மூளி, நீள்வளைய மையவிழையம்என்னும் பகுதிகள் உண்டு. இதய அடிப்பு, சுவாசம் என்பவற்றுக்கு நீள்வளைய மைய விழையம் பொறுப்பானதாகும். நீள்வளைய மைய விழையம் பிடரிப்பகுதியில் இருப்பதால் இப்பகுதியில் அடிபடும்போது பாதிப்பு ஏற்பட்டு மரணம் உண்டாகும்.

10. சிலருக்கு இயற்கையாகவே நோயெதிர்ப்புத் தன்மை உண்டு. நீர்ப்பீடனம் காரணமாகவும் நோய்க்கிருமிகள் உடலினுள் சென்றதும் கொல்லப்படுகின்றன.

ஆக்கம்:
**வேலணையூர் கே. ஆனந்தன்**

## அஃறிணை உயர்திணை ஆதல்

''மக்கள்தேவர் 'நரகர்' உயர்திணை மற்றுயிருள்ளவும் இல்லவும் அஃறிணை'' என்கின்றது நன்னூல். பின்வரும் விடயங்களைக் கவனிப்போம்.

அருச்சுனம் என்பது மருத மரம்.

அருச்சுனன் பஞ்சபாண்டவருளொருவர். எனவே அருச்சுனம் அஃறிணையாகவும்; அருச்சுனன் உயர்திணையாகவும் வருகின்றன.

ஆன்-பசு:-இஃது அஃறிணை.

ஆண்-ஆண்பிள்ளை:- இஃது உயர்திணை.

கான்:- காடு, வாய்க்கால்:- அஃறிணையாயும்,

கான்முளை:- பிள்ளை:-உயர்திணையாயும் காண்க.

வனசரம்:- காட்டானை, காட்டுமிருகம்-அஃறிணை.

வனசரன்:- வேடன் - உயர்திணை.

அமுதவல்லி - சீந்தில்-அஃறிணை.

அமுதவல்லி - விஷ்ணுவின் மகள்-உயர்திணை.

கனகி - ஊமத்தை (செடிவகை)-அஃறிணை,

கனகி-ஒரு பெண்பிள்ளையின் பெயர்-உயர்திணை.

அருணம்-எலுமிச்சை-அஃறிணை.

அருணன்-சூரியன் தேர்ப்பாகன், சூரியன், புதன் அருணாசலம் - என்ற ஆணின் பெயரையும் அருணன் என்றும் இவ்வாறு செல்லமாகச் சிலர் அழைப்பதுமுண்டு அதுவுமின்றி இஃது ஆணின் பெயராகவும் வழங்கும்.

உதாரணமாக; ''அருணன் வட்டி என்றான் வில்லியன் முதல் என்றான்'' என்றும் வழங்கிவருவதுண்டு. எனவே இஃது உயர்திணை ஆகும்.

காவேரி-காவிரி ஆறு-அஃறிணை.

கவேரகன்னி என்பதும் காவிரி நதியையே குறிக்கும். ஆனால் காவேரி என்று பெண்ணுக்கு அது பெயராக அமையும்போது உயர்திணை ஆகின்றது.

இவ்வாறு இன்னும் அநேக சொற்கள் உண்டு. சொற்களை ஆக்கி, உண்டு சொற்சுவையை அனுபவிப்போம்.

— **க. சி. சண்முகம்**

# திடீர் விருந்தாளியை அழைத்து வரும் கணவருக்கு ஓர் ஆலோசனை!

தமிழர் விருந்தோம்பலில் சிறந்தவர்கள். வந்த விருந்தாளியைப் பேணி அனுப்பி விட்டு வரும் விருந்தாளியை எதிர்நோக்கி நிற்பார்கள்.

மணமகளே...! திருமணத்திற்குப் பின் நீங்கள் தனிக்குடித்தனம் செய்கிறீர்கள். நீ, உன் கணவன், ஒரு குழந்தை இது உன் குடும்பம்.

நீ, உன் குடும்பத்திற்கு அளவான பகல் உணவைச் சமைத்திருக்கிறாய். கணவன் தன் அலுவலகத்தில் இருந்து பகல் 1 மணியளவில் தன் நண்பர் ஒருவரை அழைத்துக் கொண்டு வருகிறான்.

''கண்ணகி...! இவன் என் பள்ளித் தோழன். இந்த ஊரில்தான் தொழில் செய்கிறான். வழியில் பார்த்தேன். அழைத்து வந்துவிட்டேன் இலையைப்போடு.''

இது கணவனின் ஆணை. புது விருந்தாளி; கண்ணகி என்ன செய்வாள்...?... உடனே இரண்டு இலைகளைப் போடுகிறாள். இருவருக்கும் உணவு பரிமாறுகிறாள்.

''கண்ணகி...! இன்று கூட்டு, குழம்பு எல்லாம் நன்றாக இருக்கிறது. இவனுக்கு இன்னும் சோறு வை...!... கூட்டுப்போடு''.

விருந்துண்ண வந்தவர் 'வேண்டாம் போதும்' என்று சொல்கிறார்.

''இவன் அப்படித்தான் சொல்லுவான் நீ போடு—'' இது கணவன் கட்டளை.

''நீ குழம்பு, கூட்டு சோறு எல்லாவற்றையும் சற்று கூடுதலாகவே படைக்கிறாய். வாழைப்பழம் இருந்ததே அதையும் கொண்டு வா.'' இருவரும் உணவு உண்டு எழுந்தனர்.

விருந்தாளியாக வந்தவர் நன்றி கூறிவிட்டுச் செல்கிறார். கணவன் அலுவலகம் செல்கிறான். இனி நீ உணவு உண்ண வேண்டும்.

> ஒரு திருமண விழா. புரட்சிக் கவிஞர் பாரதிதாஸன் தலைமையில் நடைபெற்றது.
>
> அவ்விழாவில் பாரதிதாஸன் வழங்கிய அறிவுரை இங்கு பிரசுரமாகிறது.
>
> இது வெறும் அறிவுரை அன்று. ஒவ்வொரு தம்பதியரும் கடைப்பிடிக்க வேண்டிய புரட்சிகரமான கருத்துரை.

பானையைப் பார்க்கிறாய். சோறு இல்லை. குழம்பு, கூட்டு எதுவும் இல்லை. பழத்தை யாவது சாப்பிடுவோம் என்றால் அதுவும் இல்லை. காலையில் இருந்து வேலை செய்த அலுப்பு. சரி இரவு பார்த்துக் கொள்வோம் இனியொரு முறை எப்படிச் சமைப்பது...? ஒருகுவளை தண்ணீரைக் குடித்துவிட்டுச் சுருண்டு கொள்கிறாய்.

மாலை அலுவலகத்தில் இருந்து வரும் கணவன், 'கண்ணகி கடற்கரைக்குப் போகலாம் கிளம்பு'— என்று அழைக்கிறான். கடற்கரையில் வெள்ளைக்காரக் குழந்தைகளை கை வண்டிகளில் வைத்துத் தள்ளிக்கொண்டு சில பணிப் பெண்கள் உலாவுகிறார்கள்.

அக்குழந்தைகளைக் கண்டவுடன் ஏதோ ஒரு 'புதுமையான படைப்பைக் கண்ட மாதிரி உன் விழிகள் திகைத்து மலர்கின்றது.

என்ன...! அதுவும் குழந்தைதான். உன் கையில் இருப்பதும் குழந்தைதான். பின் ஏன் இந்தத் திகைப்பு...?

வெள்ளைக்காரக் குழந்தைகள் கொழுகொழு என்று மூக்கும் முளியுமாக இருக்கிறது. என் குழந்தை நாக்குப் பூச்சி மாதிரி இருக்கிறதேன்? ஏன்... என்ற கேள்வி உன் உள்ளத்தில் எழுகிறது.

வெள்ளைக்காரி மணிக்கணக்கோடு சாப்பிடுவாள். காலை 8 மணி, பகல் 12 மணி, இரவு 8 மணி. இவள் எப்போதும் பகல் பட்டினி கிடப்பதில்லை.

அவள் கணவன் திடீரென விருந்தாளியை அழைத்து வருவதில்லை. அப்படி அவன் ஒரு விருந்தாளியை அழைக்க விரும்பினால் அதற்கென ஒரு நாளைக் குறிப்பிட்டு நேரத்தையும் குறிப்பிடுவான்.

அன்று சிறந்த முறையில் உணவு தயாரிக்கப்பட்டு எல்லோரும் மகிழ்ச்சியுடன் விருந்துண்பர்.

என் மனைவி எமக்கு மட்டும்தான் உணவு தயார் செய்திருப்பாள். நாம் மூன்றும் ஆளை அழைத்துக்



பாரதிதாஸன்

கொண்டு போகிறோமே... என்று நமது ஆண்கள் சிந்திப்பதில்லை.

நம் நாட்டுப் பெண்களுக்கு இப்படியான இக்கட்டுகளோடு வாரத்தில் இரண்டு விரத நாட்களும் வரும். இப்படிப் பட்டினி கிடந்து உடல்வலிமை இழந்த பெண்கள் பிள்ளைகள் பெற்றால் அவை நாக்குப்பூச்சிகள்போல் இல்லாமல் வேறு எப்படி இருக்கும்...?

கணவன் செய்யும் இத்தவறினால் வலிமைவாய்ந்த, அறிவாற்றல் உள்ள பிள்ளை பெற முடியாத நிலை ஏற்படுகிறது.

நடுப்பகல் ஒரு மணிக்கு ஒரு வீட்டிற்கு முன்னறிவிப்பின்றி உணவுக்குச் செல்கிறோமே.!, அச்செய்கை அந்த வீட்டில் உள்ளவர்களைப் பாதிக்குமே...! என்ற சிந்தனை இல்லாத செக்குமாடுகளுக்குப் புத்தி புகட்ட வேண்டியது பெண்களின் கடமை.

உன் கணவன் அறியாமையாலோ அன்பாலோ ஒருவனை அழைத்து வந்து உணவிடச் சொன்னால் 'நீ துணிந்து, ''என்ன இது, மணி ஒன்றாகிறது, இதுவரை சாப்பிடாமலா! இருப்பர்'' என்று ஒரு போடு போடவும்.

வந்தவன் வேண்டாம், நான் சாப்பிட்டு விட்டேன் என்று கம்பி நீட்டுவான். தொலையட்டும் என்று விடு. அப்போதுதான் உன் கணவனுக்கு அது உறைக்கும்.

ஒரு வீட்டுக்குச் சாப்பிடச் செல்பவர் குறைந்தது இரண்டு மணி நேரத்திற்கு முன்பாவது அறிவித்து விட்டுச் செல்லவேண்டும். இப்பழக்கம் மேல் நாடுகளில் இருக்கிறது. நம் நாட்டிலும் வரவேண்டும்.

வந்த விருந்தை வரவேற்பது, வரும் விருந்தை எதிர்பார்ப்பது இன்றைக்கு இயலாத செயல்கள்...! இன்றைய நாட்டு நிலைவேறு! ★

# பட்டுப்புடைவை பட்டாக இருப்பதைக் கண்டுபிடிக்க....

புத்தாண்டும் பிறந்து விட்டது. இவற்றுக்காக எத்தனை பேர் பட்டுப்புடைவைகளை வேண்டியிருப்பீர்கள்...? எவ்வளவோ விலை கொடுத்து உண்மையான பட்டு. ஜரிகை என்ற நினைவுடனேயே வேண்டியிருப்பீர்கள்...!

அலுமாரியில் பாதுகாப்பாகப் பூட்டிவைத்திருக்கும் இப்பட்டுப் புடைவைகளின் பட்டு உண்மையானவை தானா..? ஜரிகைகளும் கலப்படமில்லாதவை தானா...? இவற்றைக் கண்டுபிடிக்க சில வழிமுறைகளை இங்கே தருகிறோம்.

வேண்டிவிட்டோம் இனி எதற்கு இந்த வழிமுறைகள் என்று நீங்கள் நினைப்பது புரிகிறது.

வேண்டியவை போகட்டும், இனிமேல் நீங்கள் வேண்டப் போகும் பட்டுப்புடைவைகள் உண்மையான பட்டா...? கலப்படமில்லாத ஜரிகையா என்பதைப் பார்த்து வேண்டுவதற்கு இவை உதவி புரியும் தானே...?

**உண்மையான பட்டு**

புடைவையிலுள்ள ஒரு நூலை இழுத்து தண்ணீரில் நனைத்துச் சுண்டினால் நூல் அறுந்து போகாது. இது உண்மையான பட்டு. செயற்கைப் பட்டு அறுந்துவிடும்.

இழையை நெருப்பில் காட்டினால் உரோமம் பொசுங்கும் வாடைவீசும்.

புடைவையின் மேற்பகுதி சொர சொரப்பாக இருக்கும். டாலடிக்கும் ஒளி வீசாது. கசக்கினாலும் கசங்காது.

**உண்மையான ஜரிகை**

ஜரிகையை நெருப்பில் காட்டினால் உரோமம் பொசுங்கும் மணம் வீசும் மெதுவாக எரியும்.

செயற்கைப்பட்டு ''பொலியெஸ்டர்' இழைகள் எரிந்து கையோடு ஒட்டிக்கொள்ளும்.

உண்மையான ஜரிகையை நகத்தால் இழுத்தால் உள்ளே சிவப்பு நூல் இருக்கும். அதன்மேல் வெள்ளி இழை, பிறகு தங்கமுலாம் என்பதாக அசல் ஜரிகை தயாரிக்கப்படுகிறது.

உண்மை ஜரிகை பளபளப்பாக இருக்காது.

காஞ்சிபுரம் பட்டுப்புடைவையில் 'பெட்னி' இருக்கும். 'பெட்னி' என்பது தலைப்பின் இழைகள் எல்லாம் உடல் பக்கத்திலும் உடலின் இழைகள் எல்லாம் தலைப்பின் பக்கத்திலும் வரும்படியாக இணைத்து நெய்வது.

காஞ்சிபுரம் புடைவைகள் மூன்று இழை முறுக்கி நெய்யப்படுவது. இழைகளை நன்கு முறுக்கி நெய்வதால் 'பளிச்' என இருக்காது. நாளாக ஆக பளிச்சிடும். இதுகுறைந்த பட்சம் 650 கிராம் எடை கொண்டதாக இருக்கும்.

ஆரணி, சேலம் போன்ற புடைவைகள் இரண்டு இழைகளை வைத்து நெய்யப்படுவது.

பல இடங்களில் விற்கும் பட்டுப்புடைவைகளில் நீள வாக்கில் உண்மைப்பட்டு இழையையும், அகல வாக்கில் 'பொலியெஸ்டர்' நூலையும் வைத்து நெய்து விடுகிறார்கள். இதை அவ்வளவு எளிதில் கண்டுபிடிக்க முடிவதில்லை.

அலுமாரியில் உள்ள புடைவைகளை மாதம் ஒரு முறை காற்றுடப் போடவேண்டும். காற்றுப்படும்படி புடைவைகளை ஹாங்கரில் மாட்டி வைப்பது நல்லது. ★




# முத்திரை சேகரிக்கும் பொழுதுபோக்கு

தபால் தலை சேகரிப்பது உலகத்தில் பல பாகங்களிலும் பொழுதுபோக்குகளில் ஒன்றாக சர்வதேச முக்கியத்துவம் பெற்றுள்ளது.

எமது நாட்டிலும் இப்பொழுதுபோக்கு அதிகமான வர்களைக், குறிப்பாக மாணவர்களைக் கவர்ந்து வருகிறது. ஏனைய பொழுதுபோக்குகளிலும் பார்க்க இதற்கு அதிக பணமோ நேரமோ தேவையில்லை.

ஏழை மாணவர்களும்இந்தப் பொழுது போக்கில் ஈடுபடலாம் சுருங்கக்கூறின் வீட்டுப் பொழுதுபோக்குகளில் மிகவும் சிறந்தது. ஆனால் எமது பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு கொடுக்கும் ஊக்கம் குறைவு.

இது ஓர் ஆர்வம் நிறைந்த பொழுது போக்கு. இதனால் அறிவு வளரும், இன்பம் கிடைக்கும். உலக அறிவு விரிவடையும். பல தேசப் பூகோளம், சரித்திரம், இவை பற்றிப் பல செய்திகளையும், உலக நிகழ்ச்சிகள் பற்றிய மனம் கவரும் பலவகையான உண்மைகளையும் அறிய இது வாய்ப்பளிக்கின்றது.

முறையாகவும், ஒழுங்காகவும், நல்ல கருத்தோடும் உணர்வோடும் வேலை செய்யும் பழக்கத்தை இது வளர்க்கிறது. இந்த நற்பண்போடு சேகரிக்கப்படும் தபால் தலை அல்பம் (Album) தான் சிறந்த சொத்தாக விளங்கும்.

நீலம், பச்சை, மஞ்சள், சிவப்பு, ஊதா, சிவந்த மஞ்சள், கருநீலம் ஆகிய நிறங்களில் அச்சிடப்படுகின்றன. இவை நுணுக்கமாக வண்ண வேறுபாடுகளிலும் அச்சிடப்படுகின்றன. இந்த வண்ண வேறுபாடுகளை ஆராய்வதால் மாணவர்களின் ஆராய்ச்சித் திறன் அதிகரிக்கும். தம்மைச் சுற்றிலும் உள்ள இயற்கையை நன்றாக ரசிக்கும் ஆற்றலையும் அவர்கள் பெறுவார்கள்.

**சிறையிலுள்ள கைதிகள்**

சிறையிலிருக்கும் கைதிகளுக்கும் இந்தப் பொழுது போக்கை மேற்கொள்ளுவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. குறிப்பாக அமெரிக்காவில் அரசாங்கம் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கிறது.

இதனால் அவர்களுடைய நற்பண்புகள் வளர்கின்றன. மனம் கற்பனை ஆற்றல் எல்லாம் இந்த வழியில் தொழிற்படுவதால் கடந்த காலத்தைப் பற்றி வருந்த அவர்களுக்கு நேரமில்லாமல் போகிறது.

இதனால் அவர்கள் விரக்தி அடையாமல், ஒளிமயமான ஒரு நல்ல வாழ்வை நினைக்கக் கூடியதாக இருக்கின்றது.

**முத்திரைகளின் ஆரம்பம்**

இங்கிலாந்தில் சேர் ரோலண்ட்ஹில் (Sir Rowland Hill) என்பவரினால் 1840 இல் வசதியாக ஒட்டக்கூடிய முத்திரைகள் கண்டு பிடிக்கப்பட்டன.

இதற்கு முன்பும் தபால் போக்குவரத்து முறை இருந்தது. ஆனால் முத்திரைகளின் உபயோகம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஏற்பட்டது. ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு நாட்டிலும் அச்சாகும் தபால்தலைகள் ஆயிரக்கணக்கிலிருக்கும்.

இலங்கை இந்திய மாணவர்கள் ஆசிய கண்டத்திலுள்ள நாடுகளின் முத்திரைகளை விரும்பிச் சேகரிப்பதுண்டு. ஏனைய நாட்டுத் தபால் தலைகள் மிருகங்கள், பறவைகள், மலர்கள், பிரபல நினைவுச் சின்னங்கள் போன்றவற்றைப் பற்றிய தலைகளைச் சேகரிப்பதை விசேட அம்சமாகக் கொள்ளலாம்.

எமது நாட்டில் பிரபல அரசியல் தலைவர்கள், கலைஞர்கள், ஞானிகள், கவிஞர்கள் போன்றவர்களின் படம் கொண்ட முத்திரைகளைச் சேகரிப்பது நன்று.

முக்கிய மகாநாடுகள் நடத்தப்படும் பொழுது வெளியிடப்படும் தலைகளும், புதிய கண்டுபிடிப்புகள் அல்லது, விண்வெளிப்பயணம் போன்ற நிகழ்ச்சிகளைக் குறிக்கும் தலைகளைச் சேகரிப்பதில் பயனுண்டு.

**தபால்தலை அல்பங்கள்**

தபால் தலை அல்பங்களை மாணவர்களே தயாரித்தல் நன்றாக இருக்கும். இதில் ஒவ்வொரு வகைக்கும் எத்தனை பக்கங்கள் எனப் பிரித்து வைக்க வேண்டும்.

உதாரணமாக ஞாபகார்த்தமாக வெளியிடப்படும் முத்திரைகளுக்கு ஒவ்வொருவருடைய வாழ்க்கை பற்றியும் சிறுகுறிப்பு எழுதி வைத்தால் இவற்றின் மதிப்பு நன்கு உயரும்.

சில தலைகளை அதிக பணத்திற்கு விற்கலாம். ஐக்கிய இராச்சியத்தில் (U. K) பழைய தபால் தலைகள் எதிர்பாராத விலைமதிப்பைப் பெறக்கூடிய பொக்கிஷமாகவும் விளங்குகின்றன.

- **கோவைமகன்** -



## குஞ்சுக்கோழி

குஞ்சுக் கோழி, குஞ்சுக் கோழி
எங்கு செல்கிறாய்...?
கொத்திக் கொத்தி வாயில் என்ன
கொண்டு போகிறாய்...?
அம்மாக் கோழி இங்கிருக்க
எங்கு செல்கிறாய்...?
காகம் வரும், கழுகு வரும்
கவனமாயிரு
காவல் செய்யும் அம்மாவோடு
கூடி நீயிரு.

''தம்பி''



### அறிவியல் வினா - விடை

● சிலர் அடிக்கடி மனம் தளர்ந்து சோகத்திலே மூழ்கி இருக்கக் காரணம் என்ன?

! தன்னம்பிக்கை இன்மையாலும், சில உளக்கோளாறுகளினாலும் ஏற்படுகின்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 60 ஆண்டுகளில் 60 படங்களில் நடித்து எண்பது வயதில் சிறந்த நடிகரான பிரேம்ஜி

**1988** ஆம் ஆண்டின் சிறந்த படத்திற்கான இந்திய ஜனுதிபதி விருதைப் 'பிறவி' மலையாளப் படம் பெற்றுள்ளது.

இப்படத்திற்கு 4 தேசிய விருதுகள் வழங்கப்பட்டு உள்ளன.

இப்படத்தில் நடித்த பரமேஸ்வரன் பட்டத்திரிபாத் (பிரேம்ஜி) சிறந்த நடிகருக்கான விருதைப்பெற்ருர்.

இந்த ஆண்டு இவருக்கு எண்பது வயது ஆகிறது.

60 ஆண்டுகளாக மேடையிலும், திரையிலும் நடித்து அனுபவம் பெற்ற பழம் பெரும் நடிகர் பிரேம்ஜி.

இந்த 60 ஆண்டு காலத்தில் பிரேம்ஜி நடித்த படங்கள், நாடகங்களின் எண்ணிக்கை 60க்கு மேல் போகாது.

'பிறவி' படத்தில் வயோதிபத் தந்தையாக வருகிருர்.

பிரேம்ஜி, நடிகர் மட்டுமல்ல, பத்திரிகையாளர், நாடக வசனகர்த்தா மற்றும் கவிஞரும் ஆவார்.

சமூக சீர்திருத்த இயக்கத்தில் முன்னணியில் நின்று உழைத்து வரும் பிரேம்ஜி, விதவை ஒருத்தியையே திருமணஞ் செய்து கொண்டவர்.

இவரது சொந்த நாடகமான 'ரிதுமதி' புரட்சிகர கருத்துக்களைக் கொண்டது.

பாரம்பரியம், கட்டுப்பாடு ஆகியவற்றில் இருந்து நம்பூதிரி இனப் பெண்கள் விடுதலை பெற வேண்டும் என்ற கருத்தை அந்த நாடகம் வலியுறுத்துகின்றது.

மலையாள நாடகத்துறை வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய சேவைகளைக் கௌரவித்து அவருக்கு விசேட விருது கடந்த ஆண்டு வழங்கப்பட்டது.

'பிறவி' படத்தின் கதை, கேரளா மாநிலத்தில் சில ஆண்டுகளுக்கு முன்னர் ராஜன் என்ற இளைஞன் காணமற் போன சம்பவத்தைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

பிரேம்ஜி, ராகவசக்யர் என்ற வயோதிபத் தந்தை வேடத்தில் நடிக்கிருர்...

தந்தை கிராமத்து பஸ் நிலையத்தில் காத்து நிற்கிருர், கடைசி பஸ் வந்து சேரும் வரை.

மகன் ராகு வரவே மாட்டான் என்று தெரிந்தும் அவர் காத்து நிற்கிருர்.

யதார்த்தத்தை எந்தத் தந்தை தான் ஏற்றுக் கொள்வார்?

கடைசியாக வந்த பஸ்ஸில் ஏறி ஒரு மூலையில் தந்தை உட்காருகிருர், எங்கு போவது என்று தெரியாமல்.

அவர் பொலீஸார், உள்துறை அமைச்சருடன் தொடர்பு கொண்டு மகனைப் பற்றி விசாரிக்கிருர்.

ஆனுல் உண்மையான பதில்கள் அவர்களிடம் இருந்து வருவதாக இல்லை.

சகோதரன் காணமற் போனதாலும் தந்தையின் சீர்கெட்டு வரும் உடல் நிலை குறித்தும் கவலையடைந்த மகள் ராகுவைத் தேடும் பணியில் ஈடுபடுகிருள்.

ராகு படித்த என்ஜினியரிங் கல்லூரிக்கு அவள் செல்கிருள்.

பொலீஸாரால் ராகு கைது செய்யப்படுவதற்கு முன்னர் ராகு எழுதி முடிக்காத நிலையில் இருந்த கடிதம் ஒன்று அவளின் கையில் அகப்படுகிறது.

அந்த அரை குறைக் கடிதத்தை வாசிக்கிருள்.

ராகு இனித் திரும்பி வரமாட்டாத இடத்துக்குச் சென்று விட்டான் என்பதைக் கடிதம் புலப்படுத்துகின்றது.

மகள் நல்ல செய்தியைக் கொண்டு வருவாள் என்று காத்து இருந்த தந்தை மனமுடைந்து நிற்கிருர்.

அன்னையின் கையில் குழந்தை ஒன்று அழுகிறது. எதற்காக அழுகிறது? இல்லை. மேலும் நடக்க முடியாமல் தந்தை இருக்கிருர்......

வயோதிப தந்தையாக பிரேம்ஜி மனமுருக நடிக்கிருர். ★

# பாலச்சந்தர் பற்றி பாலச்சந்தர்

**நா**ன் ஒரு படைப்பாளி தான் என்ருலும் கூட முதலில் நான் ஒரு ரசிகன்!

திரைப்படங்களைப் பார்க்கும் போது எந்த ஒரு படத்தையும் நான் பாலச்சந்தர் என்கிற இயக்குனராகப் பார்ப்பதில்லை!

ஒரு சாதாரண ரசிகன் என்ற கண்ணேட்டத்தில் தான் நான் அத்தனை படங்களையும் பார்க்கிறேன்:

அந்தத் திரைப்படங்கள் சிறந்தவைகளாக இருந்து அவற்றில் திறமைகள் பளிச்சிடும் போது, ஒரு சாதாரண ரசிகன், அந்தப் படைப்பாளியை எந்த அளவுக்குத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுவானே அதை விட ஒருபடி அதிகமான உயரத்திற்கு அந்தப் படைப்பாளியை உயர்த்திப் பாராட்டுவது என் இயல்பு!

மேலே நான் குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்கு என்னை ஆளாக்கிய படம் 'புதிய வார்ப்புகள்'! ஒரு சாதாரண காதல் கதைதான்! அதைத்தான் எவ்வளவு அழகாகத் திரு. பாரதிராஜா அவர்கள் ஆபரணம் பூட்டி அழகுபடுத்தியிருந்தார்!

கேரக்டர்களின் அழுத்தம்! மிகச் சிறந்த கதை அமைப்பு! கதை சொல்லுகின்ற பாணியிலும், டெக்னிக்கிலும் ஒரு புதிய சகாப்தத்தின் ஆரம்பம் இவருடைய இந்தப் படத்திலே தெரிந்தது!

அதன் பிறகு பல படங்கள் பார்த்தேன். என்ருலும், என்னை முழுமையாக ஈர்த்த படம் 'நாயகன்'! படம் முழுவதும் வன்முறை இருக்கிறது. அதே சமயம் படம் முழுவதும் மனிதாபிமானமும் இருக்கிறது!

ஐஸ் கட்டி மீது அக்னி வளர்த்த இந்த அசாத்தியமான விஷயம்தான் திரு. மணிரத்னத்தின் வெற்றிக்குக் காரணம்.

சமீபத்தில் பார்த்த படங்களில் என்னை மிகவும் பாதித்த படம் திரு. பாலுமகேந்திராவின் 'வீடு'!

இதனுடைய மிகப்பெரிய ப்ளஸ்பாயிண்ட் என்று நான் கருதுவது கொஞ்சம் கூட மெலோடிராமாவே இல்லாத அதே சமயம் யதார்த்தமான, கலைப்படங்கள் என்று சொல்லிக் கொள்கிற படங்களில் எதிர்பாராத சுவாரஸ்யம்!

தமிழ்த் திரைப்பட வரலாற்றில் 'வீடு' ஒரு மைல்கல்!

# ஆண்டு தோறும் விருது பெறும் தமிழ் நடிகை அர்ச்சனு!

**க**டந்த ஆண்டு 'வீடு' தமிழ் படத்துக்காக இந்தியாவின் சிறந்த நடிகைக்கான ஜனுதிபதி பரிசைத் தட்டிச் சென்றவர் அர்ச்சனு.

இந்த ஆண்டு 'தாசி' தெலுங்குப் படத்தில் நடித்ததற்காக சிறந்த நடிகைக்கான ஜனுதிபதி பரிசைப் பெற்றிருக்கிருர்.

இப்படத்தை பி. நரசிங்கராவ் டைரக்ட் செய்தார்.

இதில் 'தாசி'யாக அர்ச்சனு நடித்திருக்கிருர்.

மனக்குமுறல் களையோ மகிழ்ச்சியையோகூட வெளிக்காட்டமுடியாத தாசிப்பெண்ணின் இயல்பான உணர்வை படம்முழுக்க வெளிப்படுத்தி இருக்கிருர் அர்ச்சனு.

இந்தப்படம் ஆந்திரப் பிரதேச டெலிவிஷன் நிலையத்துக்காக எடுக்கப்பட்டது.

இப்படத்தின் படப்பிடிப்பு 20 நாட்களில் முடிவடைந்தது.

இப்படத்தின் கதை வருமாறு;

'ஆந்திராவில் ஆயிரம் வருஷத்துக்கு முன்னுல் நடந்ததாகக் கூறப்படும் வரலாறு இது.

அந்தக்காலத்தில் தாசிகள் என்று சமூகத்திஞல் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பிரிவினர் இருந்தனர்.

இவர்கள் ஜமீந்தார்களின் வீடுகளில் வேலைக்காகஅனுப்பி வைக்கப்பட்டார்கள். அவர்களுக்குப் பணிவிடைசெய்து அங்கேயே நிரந்தரமானுர்கள்.

ஜமீன்தார் தனது சந்தோஷத்துக்காக எப்போது அழைத்தாலும் இந்தப்பெண் அவரைச் சந்தோஷப்படுத்த வேண்டும்.

அதோடு மட்டுமில்லை ஜமீன்தார் வீட்டுக்கு விருந்தினராக வரும் நபர் விரும்பினுலும் அவரையும் இந்தப் பெண் மனம்கோணமல் திருப்திப்படுத்தவேண்டும்.

## வெள்ளித்திரையில்

தாசிப்பெண் ஜமீந்தார்வீட்டிலேயே இருந்தாலும் அவளுக்கு வேறு சாப்பாடு, வேறு துணிமணிகள், தனிப்படுக்கை இப்படி பிரித்தே வைக்கப்பட்டாள்.

கிட்டத்தட்ட அவர்களின் எல்லாத்தேவைகளையும் பூர்த்திசெய்யும் ஒருகொத்தடிமையாக நடத்தப்பட்டாள்.

விருதுபெற்ற அர்ச்சனு அளித்த பேட்டி இதோ:-



அர்ச்சனு

**'அ**டிப்படையில் நான் நல்ல கதாபாத்திரங்களை நேசிக்கிறவள். மூன்று தமிழ்ப் படங்களில் நடிக்க எனக்கு அழைப்பு வந்ததும் அவை நல்ல கதாபாத்திரங்களாக எனக்குத் தோன்றவில்லை என்பதாலும் அதை ஏற்பதன் மூலம் எந்தவிதத்திலும் அதற்கு நியாயம் கற்பிப்பதாக ஆகாது என்று தீர்மானமாக நான்நினைத்தாலும் ஒப்புக்கொள்ள முடியாமல்போய் விட்டது.

இந்த விருது கிடைத்தது என்று எந்த பலவீனமான க்ஷணத்திலும் எனக்குத் தோன்றியதில்லை.

அதேசமயம், சிறிய வயதில் எத்தனை பேருக்கு இது சாத்தியம் என்கிற லேசான கர்வம் தோன்றியதுண்டு. இது ஒரு சுமைதான். ஆனுல் சுகமான சுமைதாங்குவதில் சந்தோஷம் இருக்கிறது.

'இடையில் என்னைப்பற்றித் தேவையில்லாத வதந்திகள் பரப்பப்பட்டன. பாலுமகேந்திரா தவிர வெளிப்படங்களில் நடிக்க நான் ஒப்புக்கொள்வதில்லை என்றும், அவர் என்னைக் கட்டுப்படுத்திவைத்திருக்கிருர் என்றும் செய்திகள் வந்தன.

இதுவரையில் ஒரு படத்தை ஒப்புக்கொள்வதா வேண்டாமா, இந்தக் காரெக்டரில் நடிக்கலாமா கூடாதா என்பதை நான்தான், நான்மட்டும்தான் தீர்மானித்து வந்தேன்.

இப்பொழுதும், இனியும் இதைத் தீர்மானிப்பது நான் மட்டுமாகவே இருப்பேன். இதில் என் தாய் உட்பட எவர் தலையீடும் இருந்ததே கிடையாது.


'எனக்கு தன்னம்பிக்கை அதிகம் உண்டு. என் நடிப்புத் திறமை மீது பரிபூரண தெளிவும் பிரக்ஞையும் உண்டு. இந்தச் சின்ன இடைவெளி எனக்குச் சோர்வை ஏற்படுத்தி விடாது. நானே என்ற நம்பிக்கை எனக்கு எப்போதும் இருக்கிறது. எனக்குத் தெரியும்...ஒருநாள் Will break the ice.' ★

## நம்பிக்கை

உன்
கடை விழியில்
உருளும்
அந்தக் கருவிழியில்
என் கனவுகள்
கரைகின்றன.
கனவுகள் மட்டுமா
கரைகின்றன?
காலங்களும் கூடத்தான்!
உன்
பூ முகம்
சுருங்கும் போதெல்லாம்
என் எண்ணங்கள்
காணமல்
போய் விடுகின்றன.
எண்ணங்கள் மட்டுமா
காணமல் போய்
விடுகின்றன?
நானும் கூடத்தான்!
துயரப் பெருமூச்சில்
என் இதயம்
விம்முகின்ற பொழுது
என் மனக் கோட்டைகள்
மண் கவ்வுகின்றன.
மனக் கோட்டைகள்
மட்டுமா
மண் கவ்வுகின்றன?
என்
முயற்சிகளும் கூடத்தான்!
உன்
உதடுகள்
உச்சரிக்கும் பொழுது
என் உள்ளத்தில்
உவகை
ஊற்று எடுத்துப்
பாய்கின்றன.
உவகை மட்டுமா
ஊற்று எடுத்துப்
பாய்கின்றன?
நீயும் கூடத்தான்
பாய்கின்ருய்!
என்றே
ஒரு நாள்
என்னை
உன் விழிகள்
சிறைப்படுத்துமே...!
அன்று
அல்லவா
எனக்குள்
ஒரு சொர்க்கத்தைப்
படைக்கும்...!
அன்றிலிருந்து
நீயும் நானும்
பூவும் மணமும்
அல்லவா!

— கங்காப்பிரியன்

## சொற்சிலம்பம்



போட்டி இல. 98

சொற்சிலம்பம் இல: 98
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................
விலாசம்: ..............................
..............................

——— இங்கே வெட்டுக ———

**முடிவு திகதி: 3 - 05 - 1989**

**இடமிருந்து வலம்:**

1. வளர்பிறைக் காலம் 6. சங்க காலக் கொடை வள்ளல்களில் ஒருவன் மாறி நிற்கிருன் 7. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதும் ஆட்சியில் இருக்கும் அமைச்சரவை 9. கோணத்தை அளவிடும் அலகு 10. பிறக்கும் போது எழுதப்படும் என்பர் 13. இணக்கத்துக்கு உரிய சொல் 14. முகத்தின் உறுப்புகளுள் ஒன்று 15. வலிமை 16, கூட்டு 18. வட்டம். ஓலையால் பின்னியும் தயாரிப்பர் 19. விரோதம் 21. பிரமி 22. தங்கத்தை சுத்தம் செய்வது இப்படி.

**மேலிருந்து கீழ்:**

1. கப்பலை திசை திருப்பும் கருவி 2. ஒரு வகை சமஸ்கிருத எழுத்துக்கள் 3. சேனை 4. ஆடையில் நெசவு செய்யப்படும் பொன் அல்லது வெள்ளி இழைகள் 5. பிரணவம் 8. வெகுதூரம் 9. அரைவாசி 11. பகுபத உறுப்பில் இறுதியானது 12. போதை தருவது 13. வணக்கத்துக்கு உரியவர் 14. பெண் 15. தினத்தைக் குறிப்பது. தினமும் மாறுவது 16. கலை 17. சனி 20. பறவை.

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள் கலந்துகொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினுல் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

# சர்வதேச தொழிலாளர் தினம் 'மேதினம்' ஆகிய நூருவது ஆண்டு

**உ**லகத் தொழிலாளர்கள் தினமாகிய மேதினத்திற்கு இவ்வருடம் நூற்றி மூன்று வயதாகினும், 'மேதினம்' என்ற மகுடம் சூட்டப்பட்டு நூருவதாண்டு இவ்வருடமே நிறைவடைகிறது.

1889 – ஆம் ஆண்டு பிரடெரிக் ஏங்கல்ஸ் தலைமையிலான இரண்டாவது சர்வதேசிய ஸ்தாபக மகா நாட்டில் வைத்தே 'மேதினம்' என்று தொழிலாளர்கள் தினத்திற்கு பெயர் சூட்டப்பட்டது.

நாளொன்றில் 18 மணித்தியாலங்களுக்கு மேலாகச் சகல தொழிலாளர்களும் மிருகத்தனமாக வேலை வாங்கப்பட்டதை எதிர்த்து எட்டு மணி நேரம் வேலை, எட்டு மணி நேரம் ஓய்வு, எட்டுமணி நேரம் உறக்கம் என்ற மார்க்கத்தை அடைவதற்கு 1886 – ஆம் ஆண்டு அமெரிக்காவின் சிக்காகோ நகரில் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தினர்.

1886 – ஆம் ஆண்டு நடத்தப்பட்ட போராட்டத்தை வழிப்படுத்த 1885 – ஆம் ஆண்டே அமெரிக்க பாட்டாளி வர்த்தகத்தினரிடையே சுற்று நிருபம் ஒன்றில் போராட்டம் சம்பந்தமான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன.

**பொதுவேலை நிறுத்தம்**

அதன்படி 1886 – ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி அமெரிக்க நாடு தழுவிய அளவில் பொது வேலை நிறுத்தம் ஒன்றை ஒன்று பட்ட தொழிலாளர்கள் நடத்தினர்.

அந்தப் போராட்டத்தை அமெரிக்க முதலாளி வர்க்கம் அரச கூலிப்படைகளின் துணை கொண்டு மிலேச்சத்தனமாக முறியடித்தது.

தொழிலாளர்கள், கிளர்ச்சியாளர்களது கேந்திர மையமாக விளங்கிய அமெரிக்க சிக்காகோ நகரில் மட்டும் 30 ஆயிரம் தொழிலாளர்கள் வீதியில் இறங்கிப் போராடினர்.

இவர்களுக்கு எதிராக நீட்டப்பட்ட ஆளும் வர்க்கத்தின் காவல் படையான பொலீஸாரின் துப்பாக்கி வேட்டிற்கு ஆயிரம் ஆயிரம் தொழிலாளர்கள் இரத்தம் சிந்தி வீதிகளில் மரணமடைய நேர்ந்தது.

அதன் காரணமாகச் சிக்காகோ நகர வீதிகளில் இரத்த வெள்ளம் பாய்ந்தது. பொலீஸாரது நடவடிக்கைக்கு எதிராகக் கிளர்ச்சியாளர்களும் நடவடிக்கை மேற்கொண்டதில் காவற்படை தரப்பிலும் உயிரிழப்புகள் ஏற்பட்டன.

அதனைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்திய அடக்குமுறையாளர்கள் ஆயிரக் கணக்கில் தொழிலாளர்களையும் சிறையில் அடைத்து [illegible].

எனினும் முன்னெடுத்த போராட்டத்தில் சளைக்காமல் தொழிலாளர்கள் இழப்புகள் மத்தியிலும் முன்னேறிக் கொண்டிருந்ததை அவதா



னித்ததுடன் தாக்குப்பிடிக்க முடியாமல் போன அடக்குமுறை வர்க்கம் முதன் முதலாக அடிபணிந்த வரலாறு தான்; மேதினத்தின் வரலாறு.

**பாட்டாளி வர்க்கம்**

இத்தகைய முற்போக்குச் சிந்தனையுடன் சகல விதமான அடக்குமுறைகளையும் அழித்தொழித்து முழுச்சமுதாயத்தையும் முன்னேற்றகரமான பாதைக்கு இட்டுச் செல்லும் போக்குடன் 1871 – ஆம் ஆண்டு உடைமைகள் இல்லாதவர்களின் பெயரில் முதன் முதலாக அதிகாரத்தைக் கைப்பற்ற பாரிஸ் பாட்டாளி வர்க்கம் துணிந்தது.

அவ்வாறு தமது நவீன முற்போக்குப் பார்வையை முன்வைத்துப் பிரபலமான 'பாரிஸ் கம்யூன்' பிற்போக்குச்சிந்தனையுடைய பிரான்ஸ், புருசிய துப்பாக்கிப் படையினரால் நிர்மூலமாக்கப்பட்டிருந்தது.

1878 ஆம் வருடத்தில் கடுமையான சட்டங்களைப் பிறப்பித்த அடக்குமுறையாளர்களின் கெடுபிடியால் புரட்சிகரக் கட்சி சட்ட விரோதமாக இயங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

பாரிஸில் அவ்வாறு சுடர் விட்ட சுவாலை முற்ருக அணைக்கப்பட்டது போன்று சிறிதுகாலம் இருந்து திடீரென எதிர்பாராத கோணங்களில் புதிய நோக்குடைய புரட்சிகரக் குமுறல்கள் கிளம்பின.

அதன் அடிச்சுவடே வட அமெரிக்காவில் கைத்தொழில் வளர்ச்சி மிகுந்த நகரங்களில் ஒன்ருன சிக்காக்கோ நகரில் 1886 ஆம் ஆண்டு முகிழ்த்த பாட்டாளி வர்க்கத் தொழிலாளர்களது போராட்டமாகும்.

இப்போராட்டம் நடத்திய தொழிலாளர்கள் அமெரிக்கர்களாக இருக்கவில்லை.

அயர்லாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், பொகிமியா, போலந்து, ரஷ்யா ஆகிய நாடுகளில் இருந்து வந்த தொழிலாளர்களே பெருமளவில் கலந்து கொண்டனர்.

**அந்நிய மண்ணில்**

அந்நிய மண்ணில் போராட்டம் நடத்துவதன்மூலம் உயிர் வாழ்வதற்கு தள்ளப்பட்டவர்களில் பெரும்பாலானேர் படிப்பறிவில்லாத விவசாயிகளாக இருந்தனர். அதிலும் ஜேர்மனியர்களே அதிகம்.

மார்க்ஸ், ஏங்கல்ஸ் போன்ற முதலாவது சர்வதேசியத் தொடர்பு கொண்டிருந்த தத்துவஞானிகளது புதிய தீவிரவாதத் தலைமைத்துவம் ஜேர்மனியில் இருந்து வந்தவர்கள் மத்தியில் தோன்றி இருந்தது.

அதற்கு உறுதுணையாக தீவிரவாதக் குடியரசுவாதியாகத் திகழ்ந்த அமெரிக்கரான அல்பேர்ட் பார்சனஸ் விளங்கினுர்.

அன்று அவர்கள் தொடர்ச்சியாக முன்வைத்த போராட்டத்தின் நிமிர்த்தம் அடக்குமுறையாளர்களை அடிபணிய வைத்துப் பெற்ற வெற்றியை உலகளாவிய மட்டில் தொழிலாளர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிருர்கள்.

போராட்டத்தால் பெற்ற வெற்றியின் சின்னமான 'மேதினம்' பெயர் சூட்டப்பட்ட நூருவது ஆண்டான 1989 ஆம் ஆண்டையும், போராட்டம் வெற்றிபெற அஸ்திவாரம் இடப்பட்ட நூற்றிமூன்ருவது ஆண்டில் நினைவு கூர்வது பொருத்தமுடையதாகும். ★

- தேவி பரமலிங்கம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித சமுதாயத்தின் வழிகாட்டி அல்குர்ஆன்

அருள் நிறைந்த ரமழான் மாதம் குர்ஆர் இறக்கப்பெற்ற மாதமாகும். ஏனைய நபிமார்களுக்குரிய வேதங்களும் இப்புனித ரமழானில் தான் இறக்கப் பெற்றுள்ளன.

நபி இப்ருஹிம் (அலை) அவர்களுக்கு அருளப்பெற்ற சுஹுபுகள் என்னும் வேதக் கட்டளைகள் இப்புனித ரமழான் முதலாம் அல்லது மூன்றும் நாளில் தான், நபி மூஸா (அலை) அவர்களுக்கு தவ்ருத் வேதம் அருளப்பெற்றதும் இம் மாதம் ஆறும் நாளில் தான். நபி ஈஸா (அலை) அவர்களுக்கு இன்ஜீல் வேதம் இறக்கிவைக்கப்பட்டதும் இப்புனிதமிக்க ரமழான் பன்னிரண்டாம், பதின்மூன்றும் நாட்களில்தான். நபி தாவூத் (அலை) அவர்களுக்கு அருளப்பட்ட ஸபூர் வேதமும் இப்புனிதமிக்க ரமழான் பதினாறும், பதினெட்டாம் நாட்களில்தான்.

இவ்வகையில் எல்லா நபிமார்களுக்கும் அருளிச் செய்யப்பட்ட வேதங்கள் அனைத்தும் இக்கண்ணியமிக்க ரமழானில் அருளப்பட்டுள்ளதால் இதனை வேதங்களின் மாதம் என்றாலும் பொருத்தமானதே.

அருள்மறை அல்குர்ஆன் இறங்கிய மாதமென்றும், இப்புனித மாதத்திலேதான் லவ்ஹுல் மஹ்பூழ் எனும் பலகையிலிருந்து உலகத்தின் வானத்திற்கு அருளப்பட்டதாக அக்குர்ஆனே கூறிக் கொண்டிருக்கின்றது.

நிச்சயமாக நாம் இதனை (அல்குர்ஆனை) லைலதுல்கத்ருடைய இரவில் இறக்கி வைத்தோம். எனவே இக்குர்ஆன் ரமழானில் வரும் லைலதுல் கத்ருடைய இரவில் இறக்கி வைக்கப்பட்டது என்பது தெளிவு.

### வாழ்வின் அடிப்படை

குர்ஆன் அது எவ்வளவு மகத்துவமிக்கது அதனைச் சுத்தமானவர்களே தொடமுடியும் எனும் வரையறையோடும் அதனைத் தெளிவுற விளக்குபவர்கள் அதன் அடிப்படையில் தமது வாழ்வை அமைத்துக் கொள்ளச் செய்கின்றது.

இவ்வகையில் உமர் (ரலி) அவர்களின் சரிதம் அல்குர்ஆனின் நேர்வழிகாட்டலைத் தெளிவுபடுத்துகின்றதல்லவா?

ஒருமுறை அபூஜஹ்ல் எனும் கொடியோனின் தலைமையின் கீழ் மாபெரும் கூட்டம் நடாத்தப்பட்டது. அக்கூட்டம் யார் முஹம்மது என்பவரைக் கொலை செய்வது எனும் கருத்தை மையமாக வைத்து ஆராயப்பட்டது. இவ்வகையில் அக்கூட்டத் தொடரில் சில கருத்துக்கள் வெளியாகின.

என் இரத்தத்தின் இரத்தங்களே! நமது மூதாதையர்களின் நடைமுறைகளையும் மார்க்கத்தையும் அந்த முஹம்மது பொய்யாக்கி வருகின்றான். நாம் என்ன செய்து கொண்டிருக்கின்றோம். வாலிபர்களே! விழித்தெழுங்கள்! அந்த முஹம்மதின் தலையை வெட்டி வீழ்த்தி அவனைக் கொலை செய்வோர் எவருமில்லையா?

என்று பலத்த குரலில் அக்கூட்டத்துக்குத் தலைமை வகித்த அபூஜஹ்ல் ஆவேசத்தோடு கேட்டான். தொடர்ந்து அவன் பேசும்போது அந்த முஹம்மதின் தலையை என்னிடம் கொண்டு வருவோருக்கு நூறு ஒட்டகைகளும், கை நிறையக் காசும்



தருவேன் எனத் தனது பரிசில்களையும் விவரித்தான்.

இத்தனையையும் கேட்டுக்கொண்டு ஒரு மூலையிலிருந்து ஒருவர் எழுந்தார். நெருப்பைக் கக்கும் கண்கள், கறுத்த சுருட்டையான முடி, ஆணுக்கே உரிய லட்சணமான தோற்றத்துடன் அவர் இருந்தார்.

அவர் அந்த அபூஜஹ்லை நோக்கி உமது பரிசில்களுக்கு என்ன உத்தரவாதம் எனக் கேட்டார்.

அப்போது அபூஜஹ்ல், இதோ இருக்கின்ற 'தாத், உஸ்ஸா' (இருவிக்கிரகங்களின் பெயர்கள்) ஆகிய இவ்விரு விக்கிரகங்களின் மீது ஆணையாக, வாக்கு மாறப் போவதில்லை என்று கூறினார்.

உடனே வீரர் உமர் அவர்கள் உருவிய வாளுடன் வீதியில் வீரநடை போடுகின்றார். கண்டவர்களெல்லாம் பயத்தினால் கதவையடைக்கின்றனர். இடைநடுவில் உமரைக் கண்ட ஸது என்பவர் உமரிடம்,

'உமரே! எங்கே செல்லுகின்றீர்' எனக் கேட்க உமரும் பதிலுக்கு, 'நான் அந்த முஹம்மதைக் கொலை செய்யப் புறப்பட்டுள்ளேன்' என்றார். இதனைக் கேட்ட ஸைது,

அந்த முஹம்மதைக் கொலை செய்வதற்கு முன்னர் உனது தங்கையும், மைத்துனரும் இஸ்லாத்தை ஏற்று விட்டார்களாமே! முதலில் அவர்களைச் சென்று பாரும் எனக் கூறவே, உமரும் ஓடுகின்றார் தன் தங்கை வீட்டை நோக்கி.

அங்கே குர்ஆன் ஓதும் சப்தம் கேட்கவே தட்டுகின்றார் கதவை. உடனே குர்ஆனை எடுத்து ஒருபுறம் வைத்துவிட்டு, குர்ஆன் கற்றுத் தந்தவரையும் மறைந்து கொள்ளச் செய்து விட்டுத் கதவை, திறக்கின்றார்.

அப்போது உமர் அவர்கள், 'இப்போது என்ன செய்து கொண்டிருந்தீர்கள்' என வீராவேசத்தோடு கேட்டார். அதற்கு அவர் தங்கையோ,

நாங்களிருவரும் தனியே பேசிக் கொண்டிருந்தோம் எனக் கூறவே, உமர் 'இல்லை நீங்கள் அந்த முஹம்மதின் வேதமான குர்ஆனை ஓதிக் கொண்டிருந்தீர்கள்' எனக் கூறி பலம்கொண்ட மட்டும் தங்கையையும், மைத்துனரையும் தாங்கினார்.

ஆனால் தங்கையோ! தன் சகோதரனை நோக்கி 'உண்மையில் நாங்கள் அந்த முஹம்மதின் மார்க்கத்தை ஏற்றுக்கொண்டோம். எங்களை இனி எவரும் எதுவும் செய்யமுடியாது' எனக் கூறினார். உடனே உமரவர்கள் தன் தங்கையிடம் நான் தவறாக நடந்து கொண்டேன்,

### அருமருந்து

'நீங்கள் ஓதிய அம்மறையை என்னிடம் தாருங்கள் நானும் ஓதுகின்றேன்' என்றார். ஆனால் தங்கை கூறியது இதுதான்,

'சகோதரனே! சுத்தமானவர்களைத் தவிர வேறு எவரும் இதனைத் தொட முடியாது. நீங்களும் அசுத்தங்களை நீக்கிக்கொண்டு வந்தால் ஓதலாம்' எனக்கூறவே உமரும் சுத்தமாகி அக் குர்ஆனைப் புரட்டி அதில் உள்ள ஓர் வசனத்தை ஓதுகின்றார்.

பின்னர் அதனைத் தங்கையிடம் ஒப்படைத்துவிட்டு ஓடுகின்றார் அந்த முஹம்மதினின் வீட்டை நோக்கி அங்கே முஹம்மத் (ஸல்) அவர்கள் உட்கார்ந்து குர்ஆனை ஓதிக்கொண்டிருந்தார்.

உமரவர்களைக் கண்ட (ஸல்) அவர்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்கள். வந்த விடயத்தை விசாரித்தார்கள். பதிலுக்கு உமர் அவர்கள்,

'உங்களுடைய மார்க்கத்தை நான் ஏற்றுக்கொண்டேன். அதனை முழுமையாக ஏற்றுக்கொள்ளவே உங்களிடம் வந்தேன்' என்றார்கள்.

எனவே நபிகள் (ஸல்) அவர்கள் உமர் அவர்களின் இந்த உறுதியான நம்பிக்கையை வரவேற்றார்கள். உமரும் இஸ்லாத்தில் இணைந்து கொண்டார்.

அல்குர்ஆன் வன்நெஞ்சர்களையும் மாற்று நல்ல பிரஜைகளாக்குதவற்குப் போதிய ஓர் அருமருந்தாகத் திகழ்வதை இச்சம்பவம் எடுத்துக் காட்டுகின்றதல்லவா?

எவ்வகையிலும் அல்குர்ஆனுக்கு நிகர் அல்குர்ஆன் தான். இம்மாமறைவேதத்தினை ஆராய்வோரும், அடியொட்டி வாழ்வோரும் மிகக் குறைவானவர்களே! அதனைப் பற்றிக் குர்ஆன் கூறுகின்றது. குர்ஆனை அவர்கள் ஆராயவேண்டாடா?

அதனை அவர்கள் ஆராய முடியாதவாறு அவர்களின் இருதயங்களில் பூட்டுப் போடப்பட்டுள்ளதா? என்னும் வினாக்களைத் தந்து எம்மை ஆர்வமூட்டவில்லையா?

இக்குர்ஆன் எத்துறையில் சயல்படவேண்டுமோ அத்துறைக்கு ஆர்வமூட்டுவதை அதன் வசனங்கள் எமக்கு வலியுறுத்திக்கொண்டிருக்கின்றது.

இக்குர்ஆனை அவமதிட்போரும், அவன்வழியைப் பின்பற்றுதோரும், அதன் கூற்றுப்படி வாழாதோரு பல வேதனைகளாலும் நாசமாக்கப்படுவதை நாம் உலகெங்கிலும் காணுகின்றோம்.

எனவே அல்குர்ஆன் ஒரு மனிதனைப் பூரணப்படுத்துவதோடு அவன் ஆற்றவேண்டிய காரியங்களையும், தவிர்க்க வேண்டிய செயல்களையும் தெளிவுற விளங்குவதோடு அதன் அடிப்படையில் மனிதனது வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும் எனும் வரையறையை மனிதனுக்குக் கொடுத்துள்ளது.

எவன் அல்குர்ஆனின் அடிப்படையில் தனது வாழ்க்கையின் எக்கோணத்தையேனும் அமைத்துக்கொள்கின்றானோ அவன் இரு உலகிலும் நிம்மதியான, சுகமான வாழ்க்கையினை சுகித்துக் கொள்வான் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ★

**- மௌலவி கே. பி. நஸார்தீன் (ரஷாலி) -**
(பேஷ்இமாம் - முஹிதீன் ஜும் ஆப் பள்ளி)




### இருளகற்றும்வேதம் அல்குர்ஆன்

இஸ்லாத்தின் நீதியே!
இருளகற்றும் சோதியே!
முஸ்லிம் மறக் கொடியே!
மூண்டெழுவாய் முன்வருவாய்!

பணிகளைச் செய்திடுவாய்!
பாரினிலே பாசமதை வளர்த்திடுவாய்!
இனியுமேன் வீணேக்கம்!
எழுந்திடுவாய் துயில் நீத்து!

ஒரு கொடியின் நிழலினிலே
ஒரு குடியாய் வாழ்ந்திடுவாய்!
ஓரிறையை வணங்கிடவே
ஓதிடுவாய் திருமறையை!

நபி நாதர் சென்றவழி
நாம் செல்ல ஏவிடுவாய்!
நபி நாதர் மொழிவழியே
நீ செல்லப் பழகிடுவாய்!

பசியகல உணவுண்ணப்
பாரினைத் திருத்திடுவாய்
கசிந்துருகும் ஏழைகளின்
கண்ணீரைத் துடைத்திடுவாய்!

புனிதமிக்க ரமழானில்
பொன் மறையை ஓதிடுவாய்!
பொன்னகம் போற்றும்
பூ மகனாய்த் திகழ்ந்திடுவாய்!

—மௌலவி. கே. பீ. நஸார்தீன்

# ஒரு விதவையின் காசு!

ஓரிரவு மிகக் குளிரும் புயலும் ஏற்பட்டது. கூட்டத்தின் முடிவில் ஓர் ஏழைத் தாய் என்னிடம் வந்து,

'ஐயா' இன்றைய பிரசங்கச் செய்தி எனக்கு அதிக ஆசீர்வாதமாயிருந்ததால் இதைக் கொடுக்கிறேன். இது நான் இங்கிருந்து வீடுபோக என் கணவன் கொடுத்த பஸ் கூலி. இன்று நான் பஸ்ஸிலே போகாமல் நடந்து போகலாம்' என்றாள்.

'தூரம் அதிகம், குளிர் மிகுதி, புயல் அகோரம் எனவே நான் அந்தக் காணிக்கையைப் பெற்றுக்கொள்ள விரும்பவில்லை. ஆனால் கர்த்தர் கண்டிப்பாய்ச் சொன்னதால் பெற்றுக்கொண்டேன்.

மறுநாள் கூட்டம் முடிந்தது. அந்த அம்மாள் மலர்ந்த முகத்தோடு என்னிடம் வந்து இவ்வாறு கூறினார்கள்.

'நேற்றுப் புயலும் குளிரும் பலமாகத் தாக்கியதால் மெதுவாய் நடந்து நள்ளிரவுக்குச் சற்று முன்தான் நான் வீடு சேர்ந்தேன். நனைந்து நடுங்கி தளர்ந்துபோனாலும் என்றுமில்லாத உற்சாகம் ஆவியில் விளங்கியது. என் கணவர் கவலையோடும், கோபத்தோடும் காணப்பட்டார்.

### கிறிஸ்தவ சிந்தனை

உடலிலும், உடையிலுமிருந்து தண்ணீர் வடிய நான் கேட்ட பிரசங்க செய்தியையும் என் உள்ளம் அடைந்த ஆனந்தத்தையும் நான் கொடுத்த காணிக்கையையும்பற்றி அவரிடம் கூறினேன்'

'அவருடைய கோபம் உணர்வாய் மாறியது. நான் உடைமாற்றிவிட்டு குடிக்கச் சூடான பானம் ஆயத்தம் செய்தேன். அவர் வந்துகுசினி மேசையண்டை முழங்கால் படியிட்டார். நானும் முழங்காலில் விழுந்தேன்.

என் வாழ்க்கையில் முதல் தடவையாக அவரோடு சேர்ந்து சத்தமாய் ஜெபித்தேன். என் கணவர் உள்ளம் உடைந்தவராய் கண்ணீரோடே தன்னைக் கர்த்தருக்கு ஒப்புவித்தார்.' ★

**- வண சாம். செல்வநாயகம் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெட்டிக்காரர்கள்

பாத்திரங்கள்
நடராசா -ஓர் எழுத்தாளர்
மங்கையர்க்கரசி- நடராசாவின் மனைவி
ராணி - அவர்களது மகள்
சின்னம்மா - மங்கையர்க்கரசியின் தோழி

**காட்சி - 1**

இடம்:- நடராசாவின் வீடு (சின்னம்மா வருகிறாள்)

சின்னம்மா:- (வந்து) மங்கை...!...மங்கை...! என்ன வீட்டிலை ஆக்களைக் காணேல்லை. தங்கச்சி மங்கையர்க்கரசி...!

மங்கையர்க்கரசி:- (உள்ளேயிருந்து வந்து) ஓம் ... ஓம் ஆர்... சின்னம்மாக்காவே...?

சின்;- ரண்டு முறையாய்க் கூப்பிட்டன். கேக்கேல்லையே...?

மங்:- பின் வளவுக்கை நிண்டனான், வேலையாய். அது தான் கேக்கேல்லை.

சின்:- பிள்ளையள் எங்கை.. வீட்டிலையோ...?

மங்:- அதுகள் ரியூசனுக்குப் போட்டுதுகள். இருங்கோவன் அக்கா...! (இருவரும் கதிரைகளில் இருக்கிறார்கள்)

சின்:- நடராசா அண்ணை இன்னும் கந்தோராலை வரேல்லைப் போலை.

மங்:- (அவசரப்படுத்தி) பீடிகை போடாமல் சொல்லுங்கோ அக்கா...!

சின்:- ராணி அங்கை ரியூட்டறியிலை ஒரு பொடியனோடை சினேகிதமாம்.

மங்:- (அவசரப்படுத்தி) பீடிகை போடாமல் விஷயத்தைச்சொல்லுங்கோ அக்கா!...

மங்:- (அதிர்ந்து போய்) என்னக்கா சினேகிதமோ...?

சின்:- அடிக்கடி சந்திச்சும் கதைக்கிறவையாம்.

மங்:- இதென்னக்கா, ஒண்டாப் படிக்கிறதுகள் கதைக்குங்கள் தானே...? இதுக்குக் காவல் இருக்க முடியுமோ...? (சிரிக்கிறாள்)

சின்:- அப்படியில்லைப் பிள்ளை இது குறிப்பாய் ஒரு பொடியனோடை சினேகிதமாம், படம் கிடத்துக்கும் போகுதுகளோ, என்னவோ...?

மங்:- அவள் படிக்கிறாள். உதுகளுக்கெல்லாம் நேரம் வராது.

சின்:- நீதானே பிள்ளை சொன்னாய் இரவு பத்துமணிக்கும் வாறதுகளெண்டு...? அந்த நாட்களிலே படத்தாலை தான் வாறுளோ...?

> அராலியூர்: ந. சுந்தரம்பிள்ளை அவர்கள் எழுதிய ஒன்பது ஓரங்க நாடகங்கள் 'கெட்டிக்காரர்கள்' என்ற பெயரில் நூலாக வெளிவந்துள்ளது.
>
> இலங்கை வானொலி தமிழ்ச் சேவையில் இடம் பெற்ற தனி நாடகங்களின் முதலாவது தொகுப்பு நூலும் இதுவே.
>
> இதில் இடம்பெற்ற 'கெட்டிக்காரர்கள்' ஓரங்க நாடகம் இங்கு பிரசுரமாகிறது.

மங்:- அவர் வர ஆறுமணியாகும்.

சின்:- பிள்ளையள்.. ?

மங்:- அதுகள் ஏழரைக்கு வருங்கள். எட்டரைக்கும் வருங்கள். கடைசி பஸ்சிலே பத்தரைக்கும் வருங்கள்.

சின்:- சிவாவும், ராணியும் ஒரே இடத்திலையே படிக்குதுகள்...?

மங்:- சிவா பத்தாம் வகுப்பு.ராணி ஏ. எல் எப்படியக்கா ஒரே இடத்திலை படிக்கிறது...?

சின்:- வரேக்கை போகேக்கை சேர்ந்து வாறவையாக்கும்...?

மங்:- சீச்சீ...! ஒருத்தரை ஒருத்தர் பாத்துக் கொண்டு நிக்கேலாது.கிடைச்ச பஸ்சிலை தொத்த வேண்டியதுதான் (சிரிக்கிறாள்)

சின்:- இந்தக் காலத்துப் பிள்ளையளுக்கு இதுகும் ஒரு தண்டனை, இரவுபகல் எண்டில்லாமல் ரியூசன் ரியூசன் எண்டு அலையச் சொல்லி...! (பெருமூச்சு விடுகிறாள்)

மங்:- அவ்வளவு போட்டியக்கா படிப்பிலை...!

சின்:- (ஏளனமாக) என்ன போட்டி...?அதுக்கு இப்பிடித் திரியிறதே...? திரிஞ்சும் என்ன...? எல்லாம் பாஸ் பண்ணப் போகுதுகளே...?

மங்:- என்னவோ முயற்சி செய்து பார்க்கத்தானே வேணும்...?

மங்: (மௌனம், யோசிக்கிறாள்)

சின்:- மங்கை...! என்ன யோசிக்கிறாய்...? உலகம் இப்ப அப்பிடித்தானே இருக்கு...? யாழ்ப்பாண பஸ்ராண்ட் முழுக்கப் பொடியளும் பொட்டையளும் நிண்டு கதைதானே...? எங்கடை காலத்திலை, பட்டப்பகலிலே கூட தட்டத் தனியப் பட்டணம் போக விடுவினமே பெற்றார்...? உலகம் கெட்டுப் போச்சு...?

மங்:- எங்கடை காலத்திலை எங்களுக்கு இவ்வளவு சுதந்திரம் இல்லையே எண்ட ஆத்திரத்திலே திட்டுறாய்...! என்னக்கா...? (சிரிக்கிறாள்)

சின்:- சீச்சீ...!இந்த மாதிரி மானக் கேடாய் வாழேல்லை எண்டு நான் கவலைப்படேல்லை. மனிசர் மானத்தோடை வாழ வேண்டும்...! அதுதான் என்ர மேள் கமலாவை ரியூசனாலே நிப்பாட்டிப் போட்டன்...!

மங்;- சின்னம்மாக்கா...! உனக்கார் உந்தக் கதை சொன்னது...?. உன்ரை மேள் கமலாவே...?

சின்:- ஓ... கமலாவும் சொன்னவள் வேறை ஆக்களும்சொன்னவை ஆனா நான் சொன்னதெண்டு ராணிக்குச் சொல்லிப் போடாதை...!

மங்:- இல்லையக்கா நான் சொல்லமாட்டன்...!

சின்:- பொம்பிளைப்பிள்ளையள் சோதினை பாஸ்பண்ணுதுகளோ என்னவோ. பிறகு மானமாக் கலியாணம் செய்ய வேணும்...!

மங்:- அப்ப என்னையும் இவளை மறிக்கச் சொல்லுறியளே.

சின்:- நான் அப்படிச் சொல்லேல்லை தங்கச்சி. ஏதோ மனுஷனும் நீயும் யோசிச்சுச் செய்யுங்கோ...! நான் வாறன்.

மங்:- நில்லுங்கோ அக்கா. தேத்தண்ணி குடிச்சிட்டுப் போகலாம்.

சின்:- எனக்கிப்ப தேத்தண்ணி வேண்டாம் பிள்ளை. அவசர வேலையள் இருக்கு. நான் வாறன். (போகிறாள்)

**- அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை -**

சின்:- (குரலைத்தாழ்த்தி) அதுசரி தங்கச்சி வீட்டிலை உண்மையாய் ஒருத்தரும் இல்லைத்தானே...?

மங்:- ஏன் அக்கா கேக்கிறியள்...?

சின்:- உன்ரை ராணியைப் பற்றி ஒரு கதை கேள்விப்பட்டன்...

மங்:- (ஆவலாக) என்ன... கதையக்கா...?

சின்:- நான் சொல்லுறன் எண்டு குறைநினையாதே பிள்ளை. ஏதோ கேள்விப்பட்டதைச் சொல்கிறேன்.

மங்:- என்னக்கா உங்களுக்கு என்னைப்பற்றித் தெரியாதே...? அப்படிக் குறை சொல்கிற ஆளே...

சின்:- தெரிஞ்ச கதையைச் சொல்லாமல் இருக்கவும் கூடாது, பிறகு பிழை நடந்து போனால் நீங்களும் என்னைத் தானே குறை சொல்லுவியள், கேள்விப்பட்டதைச் சொல்லேல்லை எண்டு...?

[மிகுதி அடுத்த வாரம்]

# துப்புக்கு வழி வகுக்கும் துப்பு

## ஒப்புயர்வில்லாத ஒன்று

'துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை' (12) என்ற வான்சிறப்புக் குறளில், துப்பு என்ற சொல் ஐந்து முறை திரும்பத் திரும்ப வருகிறது. உணவு என்பது இதன் பொருள்.

துப்பார்க்கு-உண்பவருக்கு, துப்பாய- உண்பதற்குரியனவாகிய, துப்பு ஆக்கி - உணவுகளை உளவாக்கி,

அது மட்டுமல்லாமல், அவ்வாறு உண்பவருக்குத் தானும் உணவாவதும் மழையேயாகும்.

அஃதாவது தண்ணீர்தான் பிற உணவுகளையும் விளைவித்துத் தருகிறது; தானும் உணவாகிறது. நீரின் இன்றியமையாமையை இங்ஙனம் விளக்குகிறது திருக்குறள்.

தமிழில் 'து' என்றாலே உண் என்று பொருள். நொ - நொந்து போ, கா - காப்பாற்று. இங்ஙனம் வரும் ஓரெழுத்தொரு மொழிகளில் 'து'வும் ஒன்று.

'துப்புக்கெட்டவன்' என்று ஒருவனைத் திட்டும்பொழுது' ஒருவேளைச் சாப்பாட்டுக்குக் கூட வழியற்றவன் என அவனுடைய ஏழ்மையைக் குறிப்பிடுகிறோம்.

அதிலிருந்து, அவன் திமிராகப் பேசுவதைக் கண்டிப்பதற்காக 'மானங்கெட்டவன்' 'சொரணை அற்றவன்', என்றெல்லாம் பொருள்படுமாறு, அச்சொல்லைப் பயன்படுத்துகிறோம்.

ஒருத்தியைப் பார்த்துத் 'தப்பிலி' எனத் திட்டுவதைப் பார்த்திருக்கலாம். 'துப்பிலி' என்பதுதான் அங்ஙனம் மருவி விட்டது. போக்கற்றவன், வக்கற்றவன் என்பன போல, 'துப்புக்கெட்டவன்', 'துப்பிலி' என்ற சொற்களும் எவ்வித வசதியும் வாய்ப்புமின்றி, உண்ண உணவுகூட இல்லாமல், மானமின்றி அலைபவரை முயற்சியற்றவரைக் குறிக்கின்றன.

### துப்பு பொருள் வளர்ச்சி

துப்பு-துணை, ஊன்றுகோல், வலிமை என்றெல்லாம் பொருள் வளர்ச்சி கண்டது.

'துன்பத்துள் துப்பாயார் நட்பு' (106) என்றால், துணையாக ஊன்றுகோல் போல உதவுபவர்களைக் குறிக்கிறது.

'து' என்ற அடிச்சொல்லில் இருந்துதான் இவ்வாறு பல சொற்கள் உருவாகியுள்ளன.

துவ்வாதவர் - நுகர்வதற்கு எதுவும் இல்லாதவர்கள். துவ்வாமை - வறுமை. துவ்வான்- வலிமை இல்லாதவன், நுகரமாட்டாதவன் (சாப்பாட்டிற்கில்லாதவன்). துய்ப்பு - நுகர்தல், அனுபவித்தல்.

'துப்புத் துலக்குதல்' என்றால், ஒருவனுடைய சூழலை, வலிமையை ஆராய்தல் எனத் தொடங்கி, ஒரு கொலை அல்லது குற்றச்செயல் நடந்துவிட்டால் அதுபற்றிய சூழலை, நடந்த விதத்தைச் சோதித்தறிதல் - ஆராய்ந்து கண்டுபிடித்தல் என்றாகியிருக்கிறது.

'துப்பறிதல்' உளவறிதலாகும்.

துப்பு, பவளம் என்றும் பொருள்படுமிடம் உண்டு. துவர் - செந்நிறம், பவளம்.

எச்சிலைத் துப்புவதை கவனிக்கலாம். ஒன்றைக் கடித்துத் துப்புவது, எச்சிலைக் கண்ட இடத்தில் துப்புவது நமக்குக் கைவந்த பழக்கம். இவை அச்சொல்லுக்கமைந்த வேறு பொருள்கள்.

### துப்புரவு

'துப்புரவு' வாரம் கொண்டாடினோமே தெரியுமா உங்களுக்கு? அதற்குப் பிறகு நாடே துப்புரவு ஆகி விட்டது! எப்படி?

திருவள்ளுவர் காலத்தில் துப்புரவு என்ற சொல் உணவைக் குறிக்கவே வழங்கியது.

'துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல் மற்றையவர்கள் தவம்' (263) என்ற குறளில் துப்புரவு என்ற தொழிற்பெயர் நல்குரவு, தாக்குரவுபோல நின்று, உணவுண்ணுதலைக் குறிக்கிறது.

'துப்புரவு இல்லார் துவரத் துறவாமை, உப்பிற்கும் காடிக்கும் கூற்று' (1050) என்னும்போது, உண்பதற்கு எதுவுமே இல்லாதவர்களைக் குறிக்கின்றது.

'துப்புரவா எதுவுமில்லை' என்றால், மற்ற வசதிகள் இல்லை என்பது மட்டுமன்றி உண்பதற்குக்கூட எதுவுமே இல்லை என்பது பொருள்.

மேற்சுட்டிய திருக்குறளிலும் 'துப்புரவு இல்லார்' - 'துப்புரவாக இல்லாதவர் துறவறத்தை மேற்கொள்ளாமலிருந்தால், அது பிறர் வீட்டு உப்புக்கும் கழுநீர்த் தண்ணீருக்கும் கேடு என்று பொருள்படுகிறது.

இந்த உப்பையும் காடியையும் குடித்துக்கொண்டு வாழும் வாழ்வு ஒரு கேடா?

அவர்கள் ஏன் துறவை மேற்கொள்ளக்கூடாது என்று 'நல்குரவு' அதிகாரத்தில் திருவள்ளுவர் கேட்கும்பொழுது, வறுமையில் செம்மை வேண்டுமேல் இல்லாததற்காகப் போய் இரந்து கேட்காமல், இருப்பதைக்கொண்டு வீட்டினுள் அடக்கமாய் வாழவேண்டும்; கிடைக்காதவற்றிற்கு ஆசைப்படாமல் துறவுமனம் கொள்ளவேண்டும் என்று இதன் கருத்துப் படர்கிறது.

### திருவள்ளுவரின் உலக வழக்குநடை

திருவள்ளுவர் பல இடங்களில் சங்க இலக்கியநடையை ஒத்து எழுதிச் செல்கிறார்.

ஆயினும் தாம் எழுதுவது கூடுதலான மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்று கருதி, மக்கள் வழக்கில் உள்ள பல தொடர்களையும் நடைப் போக்கையும் அவர் ஆள்கின்றார் என்பதை, இங்ஙனம் நுட்பமாய்க் கண்டு அறியலாம்.

'துப்புரவா ஒன்றுமே இல்லை' என்று இன்று ஒருவர் சொல்கிறார் என்றால், உண்பதற்கு என்று வீட்டிலே ஒன்று கூட இல்லை என்பது பொருள். அது பிறகு முழுவதும், ஒன்று கூட இல்லாமல்எனப்பொருள் பட்டது.

'துப்புரவாக் கூட்டு' என்றால் 'ஒரு குப்பை செத்தை கூட இல்லாமல் கூட்டித் தூய்மைப்படுத்து' என்று இன்று பொருள்படுகிறது.

திருவள்ளுவர் 'துப்புரவு இல்லார்' என்னும்போது, மற்ற வசதிகளெல்லாம் இல்லாதது மட்டுமன்றி, முழுவதுமாகத் துப்புரவுக்குக்கூட ஒன்றுமே இல்லாதவர் ஏன் துறவறத்தை மேற்கொண்டேனும் மானத்தோடு வாழக் கூடாது என்பது பொருள்.

திருவள்ளுவர் உலக வழக்கைத் தழுவியே தம்தொடரை அமைத்துள்ளமை இதனால் விளங்கும்.

இன்று 'துப்புரவு' செய்தல் என்பது ஒன்றுகூட இல்லாமல் நன்கு, முழுமையாகச் சுத்தம் செய்தல் என்ற பொருளில் வழங்குகிறது.

இதுவரை சொன்னது 'துப்புரவா' விளங்கவில்லை என்று சொல்லிவிடாதீர்கள்! ★

**- தமிழண்ணல் -**

## பார்வைகள்!

நீ
பார்த்தபோது
என்
இதயத்தில்
மின்னல் அடித்தது
மின்னல் என்பதே
மழையின்
அறிகுறிதானே
அதனால்தான்
என்
கண்கள்
கண்ணீரைப்
பொழிகின்றனவோ!

— ச. சபாநிரஞ்சன்




1\. மனிதனே உன்னுடைய
மகத்தான படைப்புக்கெல்லாம்
புவியிலே ஆட்சிசெய்யும்
பொறுப்பாளி என்றுசொன்னாய்
அவ்வகை மனிதனின்கால்
அடியின்கீழ் நீ படைத்த
அத்தனை படைப்பினையும்
அமர்ந்திட வைத்தாய் அன்றோ!

2\. ஆடுகள் மாடுகளை
வேறுள்ள மிருகங்களை
காடுகள் தோறும்வாழ்க்கை
வாழ்கின்ற விலங்கினத்தை
வானிலே சிறகடித்து
வலம்வரும் புள்ளினத்தை

3\. வீட்டிலே வாழுகின்ற
வீட்டினப் பறவைகளை
கடலாழந் தன்னில்வாழும்
கடல்மச்ச மாமிசங்களை
திடமாக வைத்தாய்அந்த
மனிதனின் காலடியில்
அதிகார ஆட்சிதனை
அவைமீது அவன் செலுத்தி
புவிவாழ வேண்டுமென்றே
அவ்வாறு செய்துவைத்தாய்?

4\. ஆண்டவா எம்இறைவா
அகிலத்தில் உந்தன்பெயர்
மேன்மையா யெங்கும்நின்று
மாண்புற்றுத் திகழ்கின்றது
எத்தனை மேன்மைஆஹா
எண்ணத்தில் வடிக்கவொண்ணு
அத்தனை மேன்மைமேன்மை
அற்புத மேன்மையல்லோ!

**வேதாகம சங்கீதம் தொடர்-08**
**தமிழ்வடிவம்: நவாலியூர் சி. என். செல்லத்துரை**

# ஓவியனின் இரகசியம்

முன்னர் ஓர் ஓவியன் இருந்தான்.

மற்ற ஓவியர்களின் படங்களில் வண்ணங்கள் செழிப்பாகவும் தனித்துவமானவையாகவும் மிளிர்ந்தன. திறமான ஓவியங்களை அவர்கள் வரைந்தார்கள்.

அவன் ஒரேயொரு வண்ணத்தை மட்டும் பயன்படுத்தினான் அவனுடைய படங்களில் அற்புதமானதோர் சிவப்பொளி வீசும்.

'நாங்கள் அந்தப் படத்தை விரும்புகின்றோம். அந்தச் சிவப்பொளியை விரும்புகின்றோம்' என்று மக்கள் கூறினார்கள்.

மற்ற ஓவியர்கள் இந்தப் படங்களைப் பார்த்துவிட்டு 'இந்த வண்ணத்தை இவர் எங்கே பெறுகின்றார்?' என்று வியந்து இதனை அந்த ஓவியனிடம் கேட்டார்கள். அவன் புன்னகைத்து விட்டு 'நான் அதனைச் சொல்ல முடியாது' என்று கூறிவிட்டு தலைகுனிந்த வண்ணம் படங்களை வரைந்து கொண்டேயிருந்தான்.

மற்ற ஓவியர்களில் ஒருவர் தூர கிழக்கிற்குச் சென்று விலையுயர்ந்த வண்ணங்களை வாங்கி அரிதான வண்ணம் ஒன்றைத் தயாரித்து ஓவியம் வரைந்தார். ஆனால் கொஞ்சக் காலத்துக்குப் பின்னர் படம் மங்கலாகியது.

இன்னொரு ஓவியர் பழைய புத்தகங்கள் எல்லாம் புரட்டிப் பார்த்துப் படித்து செழிப்பான, அரிதான வண்ணம் ஒன்றைத் தயாரித்தார். ஆனால் அந்த வண்ணத்தைக் கொண்டு படம் வரைந்த போது அதில் ஜீவனே இருக்கவில்லை.

ஆனால் எமது ஓவியனோ தொடர்ந்து ஓவியம் வரைந்தான். அவனுடைய ஓவியங்களின் சிவப்பொளி மென்மேலும் கூடுதலாகியது அவனோ மென்மேலும் வெளிறினான். இறுதியில் ஒரு நாள் தனது ஓவியம் ஒன்றுக்கு முன்னால் அவன் இறந்து கிடந்தான். புதைப்பதற்கு அவன் உடலை எடுத்துச் சென்றார்கள். இந்த ஓவியனின் இரகசியத்தை அறிய ஆட்கள் அவன் வீட்டுத் தட்டு முட்டுச் சாமான்கள் அனைத்தையும் தடவிப் பார்த்தார்கள்.

ஆனால் தடயம் எதுவும் அகப்படவில்லை:

புதைகுழி உடுப்புகளைப் போட அவனுடைய பழைய ஆடைகளைக் கழற்றியபோது இந்த ஓவியனின் இடது மார்பில் காயம் ஒன்று காணப்பட்டது. அது மிகப் பழைய காயம். வாழ்நாள் முழுதும் அவனுடைய மார்பில் இந்தக் காயம் இருந்திருக்க வேண்டும். காயத்தின் கரைகள் பழையனவாகவும் மரத்துப் போனவையாகவும் இருந்தன. ஆனால் அனைத்தையும் மூடி மறைக்கும் மரணம் காயக்கரைகளையும் சேர்த்து மூடிவிட்டது.

அவர்கள் அவனைப் புதைத்தார்கள். பின்னரும் ஆட்கள் 'அவன் எங்கே அந்த வண்ணத்தைப் பெற்றான்?' என்று கேட்டுக் கொண்டேயிருந்தார்கள்.

சற்றுக் காலத்துக்குப் பின் மக்கள் அந்த ஓவியனை மறந்து விட்டார்கள். ஆனால் அவனுடைய ஓவியங்கள் வாழ்ந்தன. ★

ஆங்கில மூலம்: ஒலிவ் ஸ்கிறெய்னர்
தமிழில்: பா[illegible]

# பொது அறிவுப்போட்டி இல. 24

1\. கடிதம் போய்ச் சேர்வதற்கு வேண்டியது? ... ... ... ... முகவரி / முத்திரை
2\. பெண்கள் கணவனிடம் எதிர்பார்ப்பது? ... ... ... ... ... பணம் / அன்பு
3\. தூய்மையாக இருக்கவேண்டியது? ... ... ... ... ... சுற்றுடல் / இதயம்
4\. பொதி சுமப்பது? ... ... ... ... ... ... ... ... ... கழுதை / குதிரை
5\. கூண்டில் அடைப்பது? ... ... ... ... ... ... ... ... ... கிளி / புலி
6\. இதுவும் அழுவதுண்டு? ... ... ... ... ... ... ... ... மனம் / கண்கள்
7\. கண்ணன் பிறந்த இடம்? ... ... ... ... ... ... ... கோகுலம் / சிறை
8\. மானின் அழகில் மயங்கியவள்? ... ... ... ... ... ... சீதை / சகுந்தலை
9\. அழிக்கவேண்டியது? ... ... ... ... ... ... ... ... ஆசை / கோபம்
10\. எல்லோரும் விரும்புவது? ... ... ... ... ... ... சமாதானம் / நிதானம்
11\. படிக்க ஏற்ற நேரம்? ... ... ... ... ... ... ... ... ... காலை / மாலை
12\. வாழ்க்கையில் தானே ஏற்படுவது? ... ... ... ... ... விபத்து / ஆபத்து

பெயர்:- ..................................
விலாசம்:- ..................................
..................................

பொது அறிவுப்போட்டி இல: 23
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

.................... இங்கே வெட்டுக ....................

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 10 - 05 - 1989 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

முதலாம் பரிசு: 100 ரூபா
இரண்டாம் பரிசு: 50 ரூபா
மூன்றாம் பரிசு: 25 ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அடுத்த யாத்திரைகள்
உல்லாசபுரி சுற்றுலாக்கள்
159 ஆவது - ஆனி 89 - தமிழ்நாடு, கேரள, கர்நாடக —ஆந்திர யாத்திரை.
160 ஆவது - ஆடி 89 - தமிழ்நாடு, கேரள, கர்நாடக —ஆந்திர யாத்திரை.
161 ஆவது - ஆவணி 89 - தமிழ்நாடு, கேரள, கர்நாடக —ஆந்திர யாத்திரை.
16 ஆவது - வைகாசி 89 - பாங்கொக், சிங்கப்பூர் —உல்லாச சுற்றுலா.
17 ஆவது - ஆவணி 89 - பாங்கொக், சிங்கப்பூர் —உல்லாச சுற்றுலா.

சஞ்சீவி
சஞ்சிகை
29 - 04 - 1989 சனிக்கிழமை

வடமாகாணத்தில் அரசாங்க உல்லாசப் பயண சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு பிரயாண ஸ்தாபனம்.
28 வருட அனுபவமுள்ளோர்
பாஸ்போட்டுக்கள்,
இந்திய விசாக்கள்
எடுத்துக் கொடுக்கப்படும்.
ராஜா டூர்ஸ்
168/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# சீனத் தலைமைக்கு ஆபத்தை உருவாக்கும்
# மாணவர் ஆர்ப்பாட்டங்கள்

## சிரேஷ்ட தலைவர் தெங் சியா ஓ பிங் நிலைமையைச் சமாளிப்பாரா?

**1976** ஆம் ஆண்டு பிரதமர் சௌஎன் லாய் (Chou-nlai) காலமானபோது இறுதிச்சடங்குகளில் கலந்துகொள்வதற்காக சீனாவின் பிரசித்தி பெற்ற ரியன் அன் மென் சதுக்கத்தில் (Tian an men Square) கூடியிருந்த லட்சக்கணக்கான மக்கள் இறுதியில் அரசாங்க எதிர்ப்புக் கோஷங்களை எழுப்ப ஆரம்பித்தனர்.

அதிக ஜனநாயக உரிமைகளைக் கோரி சீனப்பெருந்தலைவர் மா-ஸே-துங்குக்கு (Mao-Tse - Tung) எதிரான ஆர்ப்பாட்டமாக அது பின்பு உருவெடுத்தது.

மக்கள் லட்சக்கணக்கில் ஒன்றுதிரளுவதற்கும் சுதந்திரமாகக் கோஷங்களை எழுப்புவதற்கும் சௌ-என்-லாயின் மரணச்சடங்குகள் வாய்ப்பாக அப்போது அமைந்திருந்தன.

இச்சம்பவம் நடந்து தற்போது 13 வருடங்கள் கழிந்துவிட்டன. இந்தப் 13 வருடகாலத்தில் சீனாவில் எத்தனையோ ஆர்ப்பாட்டங்கள் நடந்துமுடிந்துவிட்டன.

தற்போது சீனாவில் மீண்டும் பெரும் அளவில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுவருகின்றன.

சௌ-என்-லாயின் மரணத்தின் பின்பு - சீனாவில் நடைபெறும் பெரும் ஆர்ப்பாட்டமாக இந்த ஆர்ப்பாட்டங்கள் கருதப்படுகின்றன.

1949 ஆம் ஆண்டு சீனாவில் கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்பட்ட பின்பு உருவாகி வரும் பெரும் நெருக்கடியாக அரசியல் அவதானிகள் இதனைக் கருதுகின்றனர்.

★ ஜனநாயகம் வாழ்க.
★ சுதந்திரம் வாழ்க.
★ ஊழல் ஒழிக.
★ பொலீஸ் வன்முறைகள் ஒழிக.

இந்தக் கோஷங்கள் இன்று சீனாவில் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன. முக்கிய நகரங்களில் போஸ்டர்கள் ஓட்டப்பட்டுள்ளன. இவ்வாரம் நடந்த மாணவர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையகத்தைக் கடந்து செல்ல மணிநேரம் பிடித்ததாக செஜன்ஸிசெய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் வன்செயல்களாக உருவெடுத்ததை அடுத்து 30 சீனப் பொலீஸ் வரை காயம் அடைந்துள்ளனர். பல வீடுகள், வாகனங்கள் எரிக்கப்பட்டுள்ளன.

1976 ஆம் ஆண்டு அரச எதிர்ப்புக் கோஷங்களுக்கு சௌ-என்-லாயின் மரணச் சடங்குகள் பயன்படுத்தப்பட்டது போன்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் செயலாளர் நாயகம் ஹூயாஓ பாங்கின் (Huyao Bang) மரணம் தற்போது பயன்படுத்தப்படுவதுபோல் தெரிகிறது.

சீனாவுக்கு கூடுதல் ஜனநாயக உரிமைகளை வற்புறுத்திவந்த 73 வயது நிரம்பிய ஹூ கடந்த சனிக்கிழமை மாரடைப்பால் மரணமானார்.

இவரது மரணச்சடங்குகளுக்காக கூடிய மாணவர்களே பின்பு ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். இன்னும் ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர்.

கலாசாரப் புரட்சியின் இறுதிக் கட்டத்தில் சீனா எப்படிக் காணப்பட்டதோ அதே போன்றே தற்போது காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



மா - ஸே - துங்

சீனப்பெருந் தலைவர் மா-ஸே-துங்கினால் 1966 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கலாசாரப் புரட்சி 10 வருடகாலம் நீடித்தது. கலாசாரப் புரட்சியின்போது பலர்கொல்லப்பட்டனர். ஏராளமானோர் சிறையில் அடைக்கப்பட்டனர். மா-ஸே-துங்கால் வரையறுக்கப்பட்ட கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தில் இருந்து சீனா விலகிச் செல்வதைத் தடுப்பதே கலாசாரப் புரட்சியின் நோக்கம்;

### தெங்கின் வலது கரம்

கடந்த சனிக்கிழமை காலமான சீன கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் செயலாளர் நாயகம் ஹூ 1980ஆம் ஆண்டு தொடக்கம் சீனாவின் சிரேஷ்ட தலைவர் தெங் சியா ஓ பிங்கின் (84 வயது) (Deng Xsiao Ping) வலதுகரமாகத் திகழ்ந்து வந்தார். தெங் சியா ஓ பிங்கின் அரசியல் வாரிசாகவும் இவர் அப்போது கருதப்பட்டார்.

1987 ஜனவரியில் ஹூ பதவியில் இருந்து வெளியேற்றப்பட்டார். கம்யூனிஸ்ட் கட்சியில் உள்ள கடும்போக்காளர்களே இவரது வெளியேற்றத்துக்குக் காரணமாக அமைந்தனர்.

ஹூ வெளியேற்றப்படுவதற்கு முன்னைய ஆண்டுகளில் அதிக ஜனநாயக உரிமைகள்கோரி மாணவர் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றிருந்தன. ஹூவின் போக்கே மாணவர் ஆர்ப்பாட்டங்களுக்குத் தூண்டுதலாகயிருந்தது என்பது கடும்போக்காளர்களின் குற்றச்சாட்டு,

ஹூவின் பதவி விலகலின் பின்பு 70வயது நிரம்பிய ஷா ஓ சியாங் (Zhao Ziyang) கம்யூனிஸ்ட்கட்சியின்செயலாளர் நாயகமாகப் பதவியேற்ருர்.

தெங்சியா ஓ பிங்கின் அரசியல் வாரிசாக இவர் கருதப்பட்டுவந்தபோதிலும் சீனாவின் பொருளாதாரநிலை சம்பந்தமாக இவர் மீது தற்போது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுவருகின்றன.

### மா ஸே துங்கின் பாதையிலிருந்து விடுபடும் சீனு

தலைவர் மா-ஸே-துங்கின் பாதையிலிருந்து சீனாவைத் திசை திரும்பும் முயற்சியில் கடந்த ஒரு தசாப்தகாலமாக ஈடுபட்டுள்ளார் சீனாவின் சிரேஷ்ட தலைவர் தெங் சியா ஓ பிங்.

சீனாவிலுள்ள மா-ஸே-துங் சிலைகள் தற்போது தகர்க்கப்பட்டுவருகின்றன.

ரியன் அன் மென் சதுக்கத்தில் மட்டுமே இன்னும் மாஸே-துங் சிலை இருந்து வருகிறது.

மா-ஸே-துங்கின் காலத்தில் தீவிரமாக அமுல் செய்யப்பட்டுவந்த கூட்டுப்பண்ணைத் திட்டம் கைவிடப்பட்டுவிட்டது, சீனாவில் புதிய முதலீடுகளுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது. பொருளாதாரத் திட்டங்கள் ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தொழிற்சாலை முகாமையாளர்கள்-ஊழியர்களுக்கு ஊக்குவிப்புத் திட்டங்கள் அமுல் செய்யப்படுகின்றன. வெளிநாட்டு முதலீடுகளை கவரும் விதத்தில் நான்கு விசேஷ பொருளாதார வலயங்களும், பல கைத்தொழில் வலயங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன'

இத்தனைக்கு மத்தியிலும் சீனாவில் உணவுப்பற்ருக்குறை நிலவிவருகிறது. சில நகரங்களில் இன்னும் பங்கீட்டு முறையில் சீனி, முட்டை, சமையல் எண்ணெய் விநியோகிக்கப்படுகின்றன.

மூலப்பொருள்கள் பற்ருக்குறையால் நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் உற்பத்தியைக் குறைத்துள்ளன. சில தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டன. கடந்த ஆண்டு மட்டும் வேலை நிறுத்தங்கள் காரணமாக 50 கம்பனிகளுக்கு மேல் பாதிக்கப்பட்டன.

சீன நாணயமான யுவானின் (Yuan) பெறுமதி குறைக்கப் படலாம் என்றும் ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

1949 ஆம் ஆண்டு ஷியாங்கே ஷேக் தலைமையிலான கோமிண்டாங் தேசியவாதிகள் சீனப் பெரும் பூமியில் இருந்து போர்மோசாவுக்கு (தற்போது தைவான்) தப்பிய சமயம் இருந்த நிலைமை மீண்டும் உருவாகி



தெங் சியா ஓ பிங்

வருவதாகத் தற்போதைய நிலைமை குறித்து சீன அரச எதிர்ப்பாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

சீனாவில் நீண்டகாலமாக நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் ஷியாங்கே ஷேக் தலைமையிலான தேசியவாதிகள் தைவானுக்குத் தப்பி வந்து அமெரிக்க ஒத்தாசையுடன் அரசு ஒன்றை நிறுவியது மட்டுமல்லாமல் தாமே முழுச் சீனாவையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாகப் பிரகடனமும் செய்தனர்.

அப்போது துண்டாடப்பட்ட சீனா மீண்டும் இணையும் சாத்தியங்கள் தற்போது முற்ருக அற்று விட்டன என்றே கருதப்படுகிறது.

தைவான் மீதான தனது ஆதிபத்திய உரிமையை வலியுறுத்தி தைவானுக்குச் சொந்தமான குமாய், மட்ஸ் தீவுகள் மீது சீனா வருடத்துக்கு ஒரு தடவை அடையாளத் தாக்குதல்களை நடத்தி வந்தது.

பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகள் பதவியில் இருந்து தைவான் வெளியேற்றப்பட்டு அந்த இடம் சீனாவுக்கு வழங்கப்பட்ட பின்னர் அடையாளத் தாக்குதல்களைச் சீனா நிறுத்திக் கொண்டது.

சீனாவின் புதிய பொருளாதாரத் திட்டங்கள் — அரசியல் சீர் திருத்த முயற்சிகள் கடந்த சில வருடகாலமாகத் தெங்சியா ஓ பிங்கிக்கும் கடும் போக்காளர்களுக்கும் இடையில் ஒரு வகைச் சித்தாந்தப் போராட்டத்தை உருவாக்கி வந்தன.

1987 ஜனவரியில் சீனக் கம்யூனிஸ்ட்கட்சியின் செயலாளர் நாயகம் பதவியில் இருந்து ஹூ வெளியேற்றப்பட்டதற்கும் இதுவே காரணம்.

சோவியத் யூனியனில் மிக்கெயில் கோர்ப்பச்சேவ் தலைமையில் நடக்கும் அரசியல் சீர்திருத்தங்கள் போன்று அல்லாது சீன அரசியல் சீர்திருத்தங்கள் தொடர்பாகக் கவனமான அணுகுமுறை தேவை என்பது கடும்போக்காளர்களின் வாதம்.

அரசியல் சீர்திருத்தங்கள் மூலம் சோவியத் யூனியனில் அதிக ஜனநாயக உரிமைகளை வழங்கி வரும் சோவியத் அதிபர் மிக்கெயில் கோர்ப்பச்சேவ் உள்நாட்டில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகிருர்.

சோவியத் யூனியனில் இனமோதல்களும் அதிக ஜனநாயக உரிமைகள் கோரும் ஆர்ப்பாட்டங்களும் தற்போது சகஜமாகி வருகின்றன.

இரு வாரங்களுக்கு முன்னர் சோவியத் யூனியனின் ஜோர்ஜியா மாநிலத்தில் அதிக ஜனநாயக உரிமைகள் கோரி நடந்த கலவரங்களில் 16 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் அஸர்பைஜான் — ஆர்மேனிய இனத்தவர்களுக்கு இடையில் இடம்பெற்ற இனமோதல்களில் 32 பேர் மரணம் அடைந்த பின்னர் இடம்பெற்ற பெரிய சம்பவமாக ஜோர்ஜிய மாநிலச் சம்பவங்கள் கருதப்படுகின்றன.

ஆனல் தற்போது சீனாவில் ஏற்பட்டுள்ள மாணவர் அமைதியின்மையைத் தீர்ப்பதற்கு சீனாவுக்கு ஒரு கோர்ப்பச்சேவ் தேவை என்கிருர் பிரபல சீன அதிருப்தியாளர் பாங் லிஷி (Fang Lizhi) சோவியத் யூனியனில் ஒரு அன்றி சக்ஹரோவ் (Andrei-Sakharov) போன்று சீனாவில் பாங் லிஷி கருதப்பட்டு வருகிருர்.

அமெரிக்க அதிபர் புஷ்ஷின் சமீபத்திய சீன விஜயத்தின் போது அமெரிக்கத் தூதரகத்திஞல் விருந்துக்கு அழைக்கப்பட்ட பாங் லிஷி விருந்தில் பங்கு பற்ற சீன அதிகாரிகள் தடைவிதித்தது அப்போது பெரும் சர்ச்சையைக் கிளப்பி விட்டிருந்தது ஞாபகம் இருக்கலாம்.

### நிலைமை தொடர்ந்தால்,

சீனாவில் தற்போது நடைபெறும் அமைதியற்ற நிலைமை தொடரும் சாத்தியங்கள் இருந்து வருகின்றன.

1919 ஆம் ஆண்டு இடம்பெற்ற எதிர்ப்பு இயக்கம் ஒன்றின் 70 ஆவது வருடாந்த நிறைவு தினம் மே மாதம் 5 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட இருக்கிறது. 1949 சீனப் புரட்சிக்கு வித்திட்டதே இந்த எதிர்ப்பு இயக்கம் தான் என்பது சீன அரசின் அதிகார பூர்வ கருத்து ஆகும்.

மே 5 இல் மாணவர்கள் மீண்டும் களத்தில் இறங்கலாம்.

மாணவர்கள் ஆர்ப்பாட்டங்கள் சீனாவில் தொடருமாஞல் அரசியல் தலைமையில் மாற்றங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது ஆகிவிடும். ★

### சீனு

உத்தியோகப் பெயர்: சுன் - ஹுவா ஜென் - மின் குன்ங்ஹொ - குவோ (சீனமக்கள் குடியரசு)

அரசுமுறை: ஒரு கட்சி ஆட்சி - 2, 978 உறுப்பினர்களைக் கொண்ட வேசிய மக்கள் காங்கிரஸ்.

நாட்டின் தலைவர்: ஜனதிபதி.

அரசாங்கத்தலைவர்: பிரதம மந்திரி.

தலைநகரம்: பீகிங் (பெஜிங்)

## பொது அறிவுப் போட்டி இல: 23

### பரிசு பெறுபவர் விபரம்

**முதலாவது பரிசு பெறுபவர்:**
பொ. ராதாராணி, 19, யமுனு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**இரண்டாவது பரிசு பெறுபவர்:**
ப. உதயகுமார், தபால் நிலையம், அளவெட்டி.

**மூன்றுவது பரிசு பெறுபவர்:**
து. யோகேஸ்வரி ''மலரகம்'' டச் வீதி, சித்தங்கேணி.

**பொது அறிவுப்போட்டி இல: 23 சரியான விடைகள்**

1, மனம் 2. மாடு 3. குழல் 4. சிப்பி 5. வெண்ணெய் 6. மீன் 7. பெண்மனம் 8. குழந்தை 9. நல்வினை 10. எதிர்காலத்திற்கு 11. வால்மீகி 12. ஆனு.

# நடுவர்களின் பரம எதிரியான டென்னிஸ் வீரர் மெக்கன்ரோ

டென்னிஸ் உலகின் பரபரப்பான மனிதர் ஜோன் மெக்கன்ரோ.

அவரது போட்டிக்கு நடுவராக பணியாற்றுபவர்கள் எப்போதுமே வயிற்றில் புளியைக் கரைத்துக்கொண்டிருப்பார்கள்.

நடுவர் தனக்குச் சாதகமாக ஏதாவது தீர்ப்புக் கூறவில்லையென்ருல் எரிமலையாய் வெடித்துவிடுவார்,

வாய்க்குவந்தபடி மைதானத்திலேயே எல்லோருக்கும் கேட்கும்படி அசிங்கமான வார்த்தைகளால் கத்துவார்,

இப்படி மைதானத்தில் மெக்கன்ரோ நடந்துகொண்டாலும் வெளியில் பழகுவதற்கு இனிமையானவர்.

1981இல் அவர் விம்பிள்டன் சாம்பியன் பட்டத்தை முதன் முதலில் வென்ருர்.

அப்போது அவர் சுவீடன் நாட்டின் ஜோன் போர்க்கை 6 ஆவது முறையாக விம்பிள்டன் பட்டத்தைப் பெற்று உலக சாதனை நிகழ்த்தவிடாமல் முட்டுக்கட்டைபோட்டார்.

சமீபத்தில் அவர் தனது 30 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினுர்.

மெக்கன் ரோவிடம் நீங்கள் டென்னிசிலிருந்துஓய்வுபெறப் போகிறீர்களா? என்று கேட்கப்பட்டது.

### ஓய்வு பெறும் வயதா?

இதற்குப் பதிலளிக்கும் போது, '18 வயதில் இளைஞுக இருந்ததைவிட இப்போது 30 வயதில் அதிக இளமையுடன் இருக்கிறேன். திரும்பவும் ஓய்வுபெற வேண்டும் என்கிற எண்ணம் இல்லை,

'முன்பு ஒருமுறை 30 வயது என்ருல் மிகவும் வயதான காலம் என்று எண்ணியிருந்தேன்.'

'எனது வாழ்க்கையின் முதல் 18 ஆண்டுகள் வேகமாக ஓடிவிட்டன. அப்போது என்னிடம் குழந்தைப்பருவத்துக்கே உரிய அறியாமையும், இளமையும் இருந்தது. ஆனுல் இன்று டென்னிஷில் நான் மோசமாக இல்லை. நன்ருகவே இருக்கிறேன் என்ருர்.

ஜோன் போர்க், நவரத்திலோவா, ஸ்டெபி கிராப் போல மெக்கன்ரோவும் டென்னிஸ்மூலம் ஏராளமாகப் பணம் சம்பாதித்தவர்.

ரூ. 15 கோடிக்கும் மேல் அவருக்கு சொத்து இருக்கிறது. ஆனுல் அவர் டென்னிஸ் விளையாட்டில் சம்பாதித்த பணத்தைவிட பேட்டி விளம்பரத்தால் சம்பாதித்த தொகைதான் இதில் அதிகம்.

மூன்று முறை விம்பிள்டன் சாம்பியன் பட்டத்தை வென்ற அவர் அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் பட்டத்தை 4 தடவை வென்றிருக்கிருர்.

18 வயது மாணவனுக இருந்தபோது மெக்கன்ரோ உலகின் முக்கியம் வாய்ந்த ஜூனியர் டென்னிஸ் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தை இங்கிலாந்தில் விளையாடினுர்.

அந்தப்போட்டியின் வெற்றி தான் அவரை சர்வதேச டென்னிஸுக்கு அரங்கேற்றி விட்டது.

டென்னிஸ் நடுவர்களை தனது இயற்கை விரோதி என்று மெக்கன்ரோ நம்புகிருர்.

1981 இல் முதன் முறையாக விம்பிள்டன் பட்டத்தை வென்றபோது, உலகின் சதிக்காரர்கள்' என்று நடுவர்களை அவர் வர்ணித்தார்' இதற்காக அப்போது அவருக்கு ரூ. 10 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது.

அதன் பின்னும் அவர் போட்டிகளின்போது நடுவர்களை தாக்குவதை நிறுத்தவில்லை.

'மைதானத்தில் விளையாடும் போது எனக்கு நிறையக் கோபம் வருகிறது. ஆனல் மீண்டும் மீண்டும் இதேபோல் உணர்ச்சிவசப்படுவதை நான் விரும்பவில்லை' என்று கூறுகிருர்.

### மீண்டும் புகழ்

1985 ஆம் ஆண்டுக்கு பின்பு மெக்கன்ரோவின் விளையாட்டுத் திறன் குறைந்தது.

இதனுல் 1986 இல் தற்காலிகமாக ஓய்வெடுப்பதாக அறிவித்துபோட்டிகளில் விளையாடுவதை நிறுத்திக்கொண்டார்.

பின்பு இந்த ஆண்டின் இறுதியிலேயே மீண்டும் வந்தார்.

அமெரிக்காவின் இன்னெரு வீரர் ஜிம்மி கோனர்ஸ், மெக்கன்ரோவின் ஜென்மவிரோதி.

இருவரும் பலமுறை நேரடியாக வாய்த் தகராறு செய்துள்ளனர். அவரேகூட மெக்கன்ரோவின் மறுவரவை வரவேற்றிருக்கிருர்.

அவர் சொல்கிருர்: மெக்கன்ரோவைப்பற்றி நன்ருகச் சிந்தித்தால் அவர் ஒரு நல்ல வீரர் என்பதுபுரியும். அவர் தான் டென்னிஸில் வேறு யாரும் உருவாக்காத ஆர்வத்தையும், உற்சாகத்தையும் ஏற்படுத்திஞர்.

மீண்டும் வந்தபிறகு மெக்கன் ரோவால் சரியாகப் பிரகாசிக்கமுடியவில்லை.

1987ஆம் ஆண்டு உலகக் கோப்பை டென்னிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தின் போது மெக்கன்ரே தரக்குறைவாக நடந்துகொண்டதாகக் கூறி அந்தப்போட்டியிலிருந்து அவர் வெளியேற்றப்பட்டார்.

1987 இல் நடந்த விம்பிள்டன் போட்டியிலும் அவர் கலந்துகொள்ளவில்லை.

வேகமாகச் சரியஆரம்பித்த மெக்கன்ரோவின் புகழ் இப்போது மீண்டும் தலை தூக்கி இருக்கிறது. ★

### யாழ் நகரில் இவ்வாரம்

ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் பெனின்சுலா வெற்றிக் கேடயத்துக்கான போட்டிகள்:

இடம்: சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானம்.

**இன்று (29-04-89)** — காலை 8.30 மணி (முதலாவது அரை இறுதி ஆட்டம்;

கொக்குவில் சனசமூக விளையாட்டுக்கழகம் எதிர் ஜொனியன்ஸ் (பீ) விளையாட்டுக் கழகம்

பிற்பகல் ஒருமணி —இரண்டாவது அரையிறுதி ஆட்டம்.

மே முதலாம் திகதி —இறுதிப் போட்டி. (எ-6)

விளையாட்டுத் துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org